Vol.2, Issue 10 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

மார்ச் 2020

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary

# நூற்றாண்டு கொண்டாட்டத்தில் சில தருணங்கள்



ஹேமந்த்குமார்

RIPN சேகர் மேத்தா கொல்கத்தாவின் பிரபலமான கைவண்டியில்.



RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் D ரவிசங்கர்
ஆதித்யா பிர்லா அறக்கட்டளையின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லாவுடன்.

# உள்ளே


**10** **$300 மில்லியன் மதிப்புள்ள சேவைத் திட்டங்களுடன் நூற்றாண்டைக் கொண்டாடுகிறது ரோட்டரி இந்தியா**
கொல்கத்தாவில் நடைபெற்ற நூற்றாண்டுக் கொண்டாடங்களைப்பற்றிய ஒரு விரிவான அறிக்கை.

**16** **ரோட்டரி இந்தியாவின் இரு மாணிக்கங்கள்**
PRIPகள் ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண் பானர்ஜியின் வளமான பங்களிப்புகளுக்கு ரோட்டரி தலைவர்கள் பாராட்டு.

**20** **மாறுபட்ட மற்றும் வளைந்து கொடுக்கும் ரோட்டரிக்கு வேலை செய்வோம்: மலோனி**
கொல்கத்தா சந்திப்பில் ரோட்டரியன்கள் மத்தியில் தலைவர் மலோனி உரை.

**24** **தாராள மனப்பான்மைக்குப் பாராட்டுகள்**
இந்தியாவின் இரண்டு மிகப்பெரிய தனிநபர் TRF நன்கொடையாளர்களைப் பாராட்டிப் பெருமைப்படுத்திய நூற்றாண்டுச் சந்திப்பு.

**40** **RIPE ஹோல்கர் நாக் அவர்களுடன் ஒரு சந்திப்பு**
RIPE ஹோல்கர் நாக்-உடன் ஒரு பேட்டி.

**46** **போலியோவை அகற்ற பாகிஸ்தான் பிரதமரைச் சந்தித்த உயர்மட்ட ரோட்டரி பிரதிநிதிக்குழு**
பாகிஸ்தானில் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதற்கான தங்களுடைய அர்ப்பணிப்பை, ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ரோட்டரி தலைவர்கள்.

**48** **கோவாவில் RID 3060ன் மாநாடு**
ரோட்டரி தலைவர்களின் பலத்துடன் கூடிய உயிரோட்டமான சந்திப்பு.

**56** **சென்னையில் பிங்க் ஆட்டோக்கள்**
பெண்களுக்கு ஆட்டோரிக்ஷாக்களை வழங்கி அவர்களுடைய நிதிச் சுதந்திரத்துக்கு வழிவகுக்கும் RID 3232.



10


16


40


46


48



24

**அட்டைப்படத்தில்:** கொல்கத்தாவில் நடந்த நூற்றாண்டு உச்சி மாநாட்டின் கலாச்சார நிகழ்ச்சி.

**படங்கள்:** ரஷீதா பகத்

## ஒரு மகிழ்ச்சியான முழு தொகுப்பு

பிப்ரவரி இதழில், RIPE ஹோல்கர் நாக் புதிய தலைவர் கருப்பொருளான ரோட்டரி IA 2020ல் வாய்ப்புகளைத் திறக்கிறது என்ற கட்டுரை ஊக்கு விப்பதாக இருந்தது. ரோட்டரி இந்தியா நூற்றாண்டை கொண்டாடும் நேரத்தில் இது சரியான கருவாகும்.

உறுப்பினர்களுக்கு ரோட்டரி வழங்கும் வாய்ப்புகள் மிக அதிகம். நம் அனுபவத்தை சிறப்பாக்கிக் கொள்ள சுயத்திலிருந்து மேலே எழும்பி சேவையில் மூழ்க வேண்டும்.

R முரளி கிருஷ்ணா
RC பெர்ஹாம்பூர் — RID 3262




RIPN ஷேகர் மேத்தா நம் சேவை அரசு பணியில் 10 சதவீதம் இருக்க வேண்டும் என்று கூறியதுடன் சேர்த்து பிப்ரவரி இதழில் பல சுவையான விஷயங்கள் இருந்தன. ரோட்டரி கிளப்புகளால் செய்யப்படும் குறிப்பிடத்தக்க மற்றும் ஊக்கமளிக்கும் திட்டங்களின் அம்சங்களை உள்ளடக்கிய ஒரு சுவையான மற்றும் தகவலறிந்த பத்திரிகையை எங்களுக்கு வழங்கும் சிறந்த பணிக்காக ஆசிரியரை பாராட்டுகிறேன்.

ஆசிரியரின் “நினைவில் கொள்ள ஒரு நிறுவனம்” (ஜனவரி இதழ்) மிகச் சிறப்பாக இருந்தது மற்றும் இந்தூர் நிறுவனம் பற்றிய கட்டுரைகள் அருமையாக இருந்தன. நவம்பர் மாதம் கொச்சியில் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஹார்ட் துவங்கும் என்ற RI இயக்குனர் கமல் சங்வியின் வாக்குறுதி இப்பகுதி மக்கள் மற்றும் ரோட்டேரியன்களுக்கு நற்செய்தியாகும்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருக்கும் ரோட்டேரியன்களின் கருத்துக்களை பிரசுரிக்க வாசகர் பக்கங்களை அதிகரிக்கவும்; மூத்த தலைவர்களின் படங்களை குறைக்கலாம்.

டேனியல் சிட்டிலாப்பிலிலி,
RC கல்லூர் — RID 3201

(தக்க மாற்றங்கள் செய்து வாசகர்களிட மிருந்து வரும் அனைத்து கடிதங்களுக்கும் இடமளிக் கிறோம்: ஆசிரியர்)

ரோட்டரி செய்திகளின் பிப்ரவரி இதழ் எவ்வளவு அழகாக தொக்கப் பட்டுள்ளது! திட சிந்தனை யுள்ள சாதனையாளர்களை இன்ஸ்டிட்யூட் மரியாதை செலுத்துகிறது மற்றும் இதய நோயாளிகளை மீட்பதற்கான வழிகள் போன்ற கட்டுரைகள் விஷயம் அறிந்து கொள்ள உதவியாக இருந்தன. ஏக் சம்மச் கம், சார் கதம் ஆகே என்ற முழக்கத்தோடு நேர்மறையான சுகாதார பிரச்சாரம் சிறப்பாக இருந்தது. இந்த பிரச்சாரம் உண்மையில் குடிமக்களின் ஆரோக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சித்ரஞ்சன் பன்சல்
RC ரூப்நகர் — RID 3080

RID பரத் பாண்டியாவின் இரண்டு வார்த்தை மந்திரம் - நம்பிக்கை மற்றும்

RI அசெம்பிளியில் புதிய நிகழ்ச்சிகள் மற்றும் முன்னுரிமைகள் பற்றி அறங்காவலர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட K R ரவீந்திரனின் கருத்துக்கள் ஊக்கமளிப்பவையாக இருந்தன. ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ம் தேதி TRF-க்கு சிறிய தொகையை நான் அளிக்கிறேன். அதை ஒரு பழக்கமாக வைத்திருக்கிறேன். சில நேரங்களில் எனது பங்களிப்பு நம் TRF-ஐ எவ்வாறு ஆதரிக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் இந்த கட்டுரை படித்த பிறகு, TRFகள் செய்யும் நன்மைகளில் நானும் பங்காக இருப்பதை உணருகிறேன். ரோட்டரி செய்திகள் படிக்கும் அனைவரும் அவ்வாறே செய்து மற்றவர்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். இது அதிக ஊக்கமுள்ள நன்கொடை யாளர்களுடன் 2025ம் ஆண்டிற்கான எங்கள் எண்டோவ்மெண்ட் இலக்கை அடைய உதவும்.

லக்ஷ்மன் ஸ்ரீதராலா
RC அனகபள்ளே — RID 3020

ரோட்டரி இந்தியா நூற்றாண்டு உச்சி மாநாடு 2020 இன் பகுதியாக இருப்பது பிரமிப்பாக இருக்கிறது. கொல்கத்தாவின் இந்த நிகழ்வில் பார்வையாளராகும் இருப்பதை நான் பாக்கியமாக கருதுகிறேன்.

வண்ணப்படங்களுடன் பலரையும் உற்சாகமளிக்கும் விதமாக வெளியாகும் ரோட்டரி நியூஸ் பத்திரிகைக்கு என்னுடைய பாராட்டுகள். பூனே விவசாயிகள் வருமானத்தை உயர்த்த தேனீ வளர்த்தல், இதய நோயாளியைக் காக்க எளிய வழிகள் மற்றும் மன நோயால் பாதித்த குழந்தைகளுக்காக சான்டா கிளாஸாக மாறிய RC நாக்பூர் ஆகிய கட்டுரைகள் தற்போதைய பிரச்சினைகளில் கவனம் செலுத்தியுள்ளன.

சவ்மித்ரா சக்ரவர்த்தி
RC கொல்கத்தா
இன்னொவேஷன் — RID 3291

## ரோட்டேரியன்கள் அல்லாதவர்களுக்கும் தகுந்த பத்திரிகை

ரோட்டரியர்கள் அல்லாதவர்களும் படிக்க விரும்பும் வகையில் ரோட்டரி நியூஸை உருவாக்கும் உங்களுக்கு என்னுடைய பாராட்டுகள். மற்ற ரோட்டரி கட்டுரைகளுக்குச் செல்வதற்கு முன் முதலில் LBW மற்றும் வேர்ட்ஸ்வேர்ல்ட் பகுதிகளை படிக்க விரும்புகிறேன்.

*வாய்ப்புகள் - RIPE ஹோல்கர் நாக்கின் ரோட்டரி வாய்ப்புகளைத் திறக்கிறது கருப்பொருளுடன் ஒத்திசைந்துள்ளது. RIPN ஷேகர் மேத்தா தனது ஆலோசனையுடன் '10 சதவீத அரசுப் பணிகளைப் பிரதிபலிக்கும் சேவைத் திட்டங்களைச் செய்வோம்' என்று ஒரு அற்புதமான பாதையை நமக்குக் காட்டியுள்ளார். ரோட்டரி செய்திகள், பல்வேறு செய்திகளுடன் ஒரு களஞ்சியமாகத் திகழ்வதோடு அதை தமிழில் வாசிக்கும் போது என்னால் அந்தப் இதழின் ஒவ்வொரு பக்கத்தையும பாராட்ட முடிகிறது.*

Dr *சுப்பிரமணியன்*
RC *புளியங்குடி,* RID 3212

*நான்* 1972–73*ல் ரோட்டரியில் சேர்ந்ததிலிருந்து கடந்த 47 ஆண்டுகளாக ரோட்டரி செய்திகள் படித்து வருகிறேன். இந்த வெளியீடு ரோட்டரி செய்திகளை பரப்பி, சமூகத்தின் செய்திகளை வெளியிடுவதன் மூலம் ரோட்டேரியன்கள் பொது மக்கள் ஆகியோரை ரோட்டரி திட்டங்களில் செயல்பட உற்சாகப்படுத்துகிறது. குறிப்பிட்ட ஊதியம் பெறும் வாத்தியாராக இருந்தாலும் இப்பத்திரிகையை படித்த பின் நான் முதலில் பால் ஹாரில் ஃபெல்லோவாகவும் பின் மேஜர் டோனராகவும் மாற எனக்குள் உற்சாகம் பிறந்தது.*

RID *பரத் பாண்டியாவின் பிராந்தியவாதம் மற்றும் ஃபெடரலிசம் பற்றிய கட்டுரை எனக்கு பிடித்திருந்தது. புத்தகங்கள் பற்றிய வழக்கமான பகுதிகள், கிளப் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளுடன் தேனீ வளர்ப்பு, சுகாதாரப் பணியாளர்களுக்கான பாதுகாப்பான ஆடைகளை, மற்றும் சென்னை ஏரிகள் மறுசீரமைப்பு கட்டுரைகள் சுவையாக இருந்தன.*

*மாதவ் காஷாலிகர்*
RC *சங்கிலி*
*மிட்டவுன்* — RID 3170

ஜனவரி இதழில் இந்தூரின் தெரு உணவு பற்றிய கட்டுரை சுவையாக இருந்தது. எங்கள் தலைமுறைக்கான ஒரு புத்தகம் என்ற தலைப்பில் சந்தியா ராவின் புத்தக மதிப்புரை சரியான நேரத்தில் பிரசுரமாகியிருப்பதோடு ரோட்டரி இயக்கத்தின் உண்மை தத்துவத்தை பிரதிபலிக்கிறது.

வழக்கமான பகுதியான உங்கள் கவர்னர்களை சந்தியுங்கள், மாவட்ட தலைவர்களின் வாழ்க்கை மற்றும் வேலையை அறிய உதவுவதால் நான் அதை விரும்புகிறேன். ஒரு வகையில், இது ஒரு வெற்றிடத்தை நிரப்பியுள்ளது. கிளப் மேட்டர்ஸின் வடிவம் மகிழ்ச்சி அளிப்பதோடு நாடு முழுவதும் உள்ள கிளப்களால் செய்யப்படும் மாறுபட்ட பணிகளின் சாரத்தை வெளிப்படுத்துகிறது.

PDG லலித் சுர்ஜன் — RID 3261

## Evanston/RISAOவின் உதவிகரமான, RI ஊழியர்கள்

GGக்களை பரீசிலிக்கும் TRF ஊழியர்கள் அதை மறுக்காமல் ஏற்க வேண்டும் என்ற RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோவின் கட்டளை நிறைவாக இருந்தது.

நான் ஓர் இணையான கிராண்ட் மற்றும் இரண்டு குளோபல் கிராண்டுகளுக்கு முதன்மை தொடர்பாளராக இருந்திருக்கிறேன். இந்த கிராண்டுகளுக்கு ஒப்புதல் நாங்கள் எதிர்பார்த்ததை விட விரைவாக வந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். Evanston மற்றும் RISAOவில் உள்ள TRF ஊழியர்கள் மரியாதையாகவும் உதவியாகவும் இருந்தனர். பணத்தை தருவதற்கு முன்பு யாரும் செய்வதைப் போலவே அவர்கள் சில விளக்கங்களை கேட்டனர். அவர்களின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தவுடன் ஒப்புதல்கள் விரைவாக வந்தன. அவர்களின் முயற்சி களையும் ஒத்துழைப்பையும் நாங்கள் பாராட்டுகிறோம். கிளப்கள் தங்கள் GG விண்ணப்பங்களில் உண்மைகளை கூறுதல் வேலை விரைவில் நடக்க வழி வகுக்கும்.

K ரவீந்திரகுமார்
RC கரூர் — RID 3000

அட்டைப்படம் தற்கொலை என்பது உதவிக்கான அழுகை (டிசம்பர் இதழ்) சிறந்த விழிப்புணர்வு கட்டுரையாக இருந்தது. நாம் அனைவரும் காரணங்களை தீவிரமாக ஆராய்ந்து பாதிக்கப்பட்ட இளைஞர்களை விபரீத முடிவை எடுக்க தூண்டும் வெளிப்புற சூழ்நிலைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாயல் அகர்வால், RC கொல்கத்தா
மகாநகர் — RID 3291

## அழகு ஸ்டீரியோடைப்களை நிராகரித்தல்

உங்கள் டிசம்பர் இதழின் தலையங்கம் "அழகு கட்டுக்கதை" பற்றியது இது. ஸ்டீரியோடைப்களை நிராகரிப்பதற்கு நிறைய தைரியங்களும் சவால்களும் தேவை. அழகு என்பது நிறத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதை இன்றைய இளைஞர்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

அருண் குமார் தாஷ்
RC பரிபாதா — RID 3262

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org.*



# ரோட்டராக்டை வளர்ப்போம்

*அன்புள்ள சக ரோட்டரியர்கள் மற்றும் ரோட்டரியின் குடும்ப உறுப்பினர்களே,*

மார்ச் என்பது நாம் ரோட்டராக்டைக் கொண்டாடும் மாதமாகும் - மேலும் இது சிறந்த வருடமாக இருந்துள்ளது.

லெஜிஸ்லேஷன் கவுன்சில் (CoL) ரோட்டராக்டை நம்முடைய கான்ஸ்ட்டிட்டியூஷனில் உயர்த்தியதில் ரோட்டரி கிளப்புகள் மற்றும் ரோட்டராக்ட் கிளப்புகள் இரண்டின் அங்கமாக ரோட்டரி இன்டர்நேஷனல் ஆகிவிட்டது. அக்டோபரில், ரோட்டரி இயக்குனர்கள் பல மாற்றங்களை செய்து உலகின் சில பகுதிகளில் ரோட்டராக்ட் வளரவிடாமல் தடுக்கும் தடைகளை களைத்தனர்.

இளைஞர்களை வரவேற்பதோடு, அவர்களை ஈர்க்கக்கூடிய ரோட்டரி அனுபவத்திற்கும் நாம் வழி வகுப்பது. ரோட்டரியை நாம் அர்த்தமுள்ளதாக வளர்க்கும் வழிகளில் ஒன்றாக இருக்கும்.

ரோட்டரி வளர்வது பல வழிகளில் வளர்ச்சி என்பதாகும். உறுப்பினர்களை வளர்ப்பதும் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.தங்களுக்கு சரியென்று தோன்றுவதினாலேயும் மற்றவர்களை எது ஈர்க்கும் என்பதையும் புரிந்து ரோட்டரேக்டர்கள் இந்த வாய்ப்பை வழங்குகின்றனர்.

வழக்கம் போல் பணி செய்வதோடு நிற்காமல் கூடுதல் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும். உலகெங்கிலும் நம் உறுப்பினர்களை ஏன் விலகுகிறார்கள் என்பதற்கான அடிப்படை காரணத்தையும் அறிய வேண்டும்.

உறுப்பினர்களுக்குள்ள தடைகளை நீக்க வேண்டிய நேரம் இது: கிளப்புகள் இன்றைய தேவைகளை பூர்த்தி செய்யாததால் புதிய உறுப்பினர் மாதிரிகளை உருவாக்குதல், உறுப்பினர்களுக்கு புதிய பாதைகளைத் திறத்தலோடு புதிய ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் கிளப்புகளை உருவாக்க வேண்டும்.

புதிய கிளப் மாதிரிகள் குறிப்பாக நம் பாரம்பரிய கிளப்புகளில் சேர விரும்பாதவர்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றன. புதிய கிளப் மாதிரிகள் உருவாகி வருகின்ற நிலையில், அவற்றை செயலாக்குவது மாவட்ட கவர்னர்களே. ஜனவரி மாத இன்டர்நேஷனல் அசெம்பிளியில், புதிய கவர்னர்கள் பில்ட் யுவர் ஓன் கிளப் (நீங்களே உங்கள் சங்கத்தை உருவாக்குங்கள்) என்ற பயிற்சியில் பங்கேற்றனர். ஓர் அற்புதமான அனுபவமான, இது அவர்களை முன்னோக்கிப் பார்க்க வைத்தது.

எவ்வாறாயினும், அடுத்த தலைமுறைக்கு அர்த்தமுள்ள புதிய கிளப் மாதிரிகளை உருவாக்குவது ரோட்டராக்டர்கள் மற்றும் இளம் ரோட்டேரியன்கள் பொறுப்பாகும். எதிர்காலத்தில் ரோட்டரி கிளப்புகளிலிருந்து இளைஞர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதை அவர்கள் கூறினால் அது நம்மை ஆச்சரியப்படுத்தும். அவர்களின் புதுமையான எண்ணங்களை நாம் வரவேற்று ஆதரவளிக்க வேண்டும்.

**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# நூற்றாண்டு விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடும் ரோட்டரி இந்தியா

கடந்த ஐந்தாண்டுகளில் அநேகமாக எல்லா RI தலைவர்களும் என்னிடம் சொல்லியிருக்கிற ஒரு விஷயம், ரோட்டரி நிகழ்வுகளை வண்ணமயமாகவும் பிரமாண்டமாகவும் கொண்டாடுவதில் உலகில் வேறெந்த நாட்டினரும் இந்திய ரோட்டரியன்களுக்கு இணையாக மாட்டார்கள்!

ரோட்டரி இந்தியாவின் நூற்றாண்டு தொடங்குகிறது, 100 ஆண்டுகளுக்கு முன்னால் கொல்கத்தா ரோட்டரி சங்கத்தின் மூலம் தான் இந்த அமைப்பு இந்தியாவில் கால் பதித்தது என்பதால், இந்த நூற்றாண்டு விழா கொல்கத்தாவில்தான் நடைபெறவேண்டும். நூற்றாண்டுக் குழுவின் தலைவர், RIPN சேகர் மேத்தா. அப்படியானால் இந்தக் கொண்டாட்டம் மிகப்பெரியதாகதானே இருக்கவேண்டும்!

ஆம். அந்தக் கொண்டாட்டம் மிகப்பெரியதாகதான் இருந்தது. மகிழ்ச்சி நகரத்தில், பரந்து விரிந்த பிஸ்வ பாங்க்ளா மாநாட்டு மையத்தில் இந்தச் சிறப்பான மூன்று நாள் விழா நடைபெற்றது. RI தலைவர் மார்க் மலோனியில் தொடங்கி, அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங், உள்வரும் அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன், பெரும் எண்ணிக்கையிலான RI இயக்குநர்கள் என ஏராளமான மூத்த RI தலைவர்கள் இவ்விழாவில் பங்கேற்றார்கள்.

இந்தியாவில் நடைபெறும் முக்கியமான ரோட்டரி நிகழ்வுகள் பெரும்பாலானவற்றில் மூத்த தலைவர்களுடைய தொடக்கப் பேரணி பிரமாண்டமாக இருக்கும். ஆனால், கொல்கத்தாவில் நடைபெற்ற தொடக்கப் பேரணி மிகப் பிரமாண்டமாக இருந்தது. அதை மேலும் இனிமையாக்கியது, A R ரஹ்மானின் மயக்கும் இசை. வருங்காலத்தில் இந்தியாவில் நிகழவிருக்கும் ஓர் RI சந்திப்புக்கான முன்னோட்டம்போல் இது அமைந்தது, இதை மேத்தாவே குறிப்பிட்டுக்காட்டினார்.

32 நாடுகளிலிருந்து இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சுமார் 4,000 பிரதிநிதிகள் வந்திருந்தனர். சமூகத் திட்டங்களின் வழியாக இந்திய ரோட்டரியன்கள் செய்துள்ள மிகச்சிறந்த பணி, உறுப்பினர் எண்ணிக்கை, TRF வழங்கல் இரண்டிலும் இந்தியாவின் மிகச்சிறந்த வளர்ச்சி. கடந்த 10 ஆண்டுகளாக இந்திய உறுப்பினர் எண்ணிக்கை தொடர்ந்து வளர்ந்துவந்துள்ளது, நம்முடைய உறுப்பினர் எண்ணிக்கை இப்போது உலக உறுப்பினர் எண்ணிக்கையில் 12.07 சதவிகிதமாக உள்ளது என்றார் மேத்தா.

TRF வழங்கலில் இந்தியா இப்போது 2ம் இடத்தில் உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் நாம் தலா 20 மில்லியனுக்குமேல் வழங்கியுள்ளோம். இந்தியாவில் ரோட்டராக்டும் நன்கு வளர்ந்துவருகிறது, உலக அளவிலான ரோட்டராக்ட் சங்கங்களில் 24 சதவிகிதமும் ரோட்டராக்ட் உறுப்பினர்களில் 41 சதவிகிதமும் இங்குள்ளன.

இந்த எண்கள் ஈர்க்கத்தக்கவையாக இருந்தால், சமூக சேவைத் திட்டங்களின்வழியாக இந்திய ரோட்டரியன்கள் செய்துள்ள பணி இன்னும் சிறப்பானது. இதுபற்றிய சில எண்களைச் சிந்தியுங்கள்: கடந்த 10 ஆண்டுகளில், ரோட்டரியன்கள் இந்தியாவில் இயக்கும் 200க்கும் மேற்பட்ட கண் மருத்துவமனைகளில் இரண்டு மில்லியன் மக்கள் தங்களுடைய கண்பார்வையைப் பெற்றுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது, 20,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் இதய அறுவைச்சிகிச்சை செய்துகொண்டுள்ளார்கள், ரோட்டரியின் சேவை அவர்கள் உயிரைக் காத்துள்ளது. இந்தியாமுழுக்க ரோட்டரி 30 ரத்த வங்கிகளை இயக்குகிறது, 30,000 கைம்பெண்கள், அவர்களுடைய குழந்தைகளின் திறன் மேம்பாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது.

100 ஆண்டுகளுக்குமுன் ரோட்டரி மாயாஜாலம் தொடங்கிய RC கல்கத்தா-வின் முன்னாள் தலைவர் நீலிமா ஜோஷி, தன்னுடைய தலைமை ஆண்டின் மிகச் சிறந்த பகுதி, ரோட்டரியன்களால் சரிசெய்யப்பட்ட இதயங்களைக் கொண்ட சிறு குழந்தைகளுடைய பெற்றோர் வெளிப்படுத்திய நன்றியுணர்வும் மகிழ்ச்சியும்தான் என்கிறார், “அந்த மன நிறைவுக்கு இணை ஏதுமில்லை” என்று அவர் அமைதியாகச் சொல்வதில் வியப்பென்ன!



ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

# RI இயக்குனர்



## ஒருவருக்கொருவர்

100 ஆண்டுகளை நிறைவு செய்வதென்பது எந்தவொரு நிறுவனத்துக்கும் முக்கியமான கணமாகும். ஒரே ஒரு சங்கம், சில ரோட்டரியன்கள் என்கிற ஒரு மிகச் சிறிய தொடக்கத்திலிருந்து, இன்றைக்கு இந்திய ரோட்டரி 3,860 சங்கங்கள், 151,160 ரோட் டரியன்கள் என்ற நிலைக்கு வளர்ந்துள்ளது. இந்திய ரோட்டரி நூற்றுக்கணக்கான மனிதாபிமானத் திட்டங்களைத் நடத்து கிறது, பாதுகாப்பான குடிநீர், தூய்மை, வறுமையை விரட்டுதல், எழுத்தறிவை ஊக்குவித்தல், நலனை மேம்படுத்துதல், சூழலைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் பணியாற்றுகிறது. இந்தியாவிலிருந்து இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் இந்திய ரோட்டரி ஒரு முக்கியப் பங்காற்றியுள்ளது.

நம் பிராந்தியங்களைச் சேர்ந்த ரோட்டரியின் மூத்த தலைவர்களுடைய வழிகாட்டுதலுடன் ரோட்டரியன்கள் மற்றும் ரோட்டரி குடும்பங்களுடைய வலிமை, அர்ப்பணிப்பை அணிதிரட்டுவதில் ரோட்டரி இந்தியா நல்ல பங்காற்றியுள்ளது. ரோட்டரியை உருவாக்க உதவிய, ரோட்டரிக்காகப் பணியாற்றிய முன்னாள், இந்நாள் ரோட்டரியன்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

ரோட்டரி இந்தியாவின் நூற்றாண்டுச் சந்திப்பில் 4,200க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள், குடும்பங்கள் ஒன்றுதிரண்டார்கள். ரோட்டரியன்கள் தொடர்ந்தும் நம்பகத்தன்மையுடனும் பணியாற்றவேண்டும் என்று பல பேச்சாளர்கள் ஊக்குவித்தார்கள். இந்த நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற்றது.

மார்ச் மாதம், நீர் மற்றும் தூய்மைக்கான மாதம். கிணறு வற்றினால்தான் நாம் நீரின் மதிப்பைக் கற்றுக்கொள்கிறோம் என்கிற உண்மை நீர்ப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நன்கு சொல்லித்தருகிறது.

ரோட்டரி இந்தியா நீர்த் திட்டம் மற்றும் ரோட்டரி இந்தியாத் தூய்மைத் திட்டத்தின் ஆதரவுடன் இந்த இரண்டு அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றுவதற்காக ரோட்டரி பணியாற்றுகிறது, அரசாங்கங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

மார்ச் மாதத்தில் நாம் உலக ரோட்டராக்ட் மாதத்தைக் கொண்டாடுகிறோம். ரோட்டரியின் நோக்கம், நம்முடைய நாட்டின் எதிர்காலத்துக்காக ஒரு வலுவான, துடிப்பான, நல்ல மதிப்பீடுகளைக் கொண்ட ஓர் இளைஞர் படையை உருவாக்குவது. என்னைப் பொறுத்தவரை ரோட்டராக்ட் என்பது, இளைஞர்களுடைய தலைமைப் பண்புகளை வளர்ப்பது, ஒவ்வோர் இளைஞரும் தனக்கும் பிறருக்கும் ஆற்றவேண்டிய பொறுப்புகளைப்பற்றி அவர்களுக்குக் கற்பிப்பது, மறக்கச்செய்வது, மீண்டும் கற்பிப்பது, வாழ்நாள் முழுக்க நீடிக்கக்கூடிய மதிப்பீடுகளை அவர்கள் மனத்தில் பதிப்பது. ரோட்டராக்டும் ரோட்டரியும் இணைந்து செயல்படுவதைப் பார்க்கும்போது, அவர்கள் இருவருக்கும் இது நல்ல முன்னேற்றத்தைத் தரும் என்று நான் நம்புகிறேன். இதுதான் நம்முடைய எதிர்காலம் என்று என்னால் புரிந்துகொள்ள இயலுகிறது.

**Dr பரத் பாண்ட்யா**
RI இயக்குனர், 2019–21

# களின் செய்திகள்

## ரோட்டரியின் நீர் பணி 2025



அன்புள்ள ரோட்டரியினரே,

சுத்தமான தண்ணீர் கிடைப்பதால் ஆரோக்கியமான மற்றும் அதிக பயனுள்ள வாழ்க்கை உறுதியாகிறது. ஆனால் இந்தியாவில், பாதுகாப்பற்ற நீரினால் ஏற்படும் நோய்களால் தினமும் குறைந்தது 3,000 குழந்தைகள் இறக்கின்றனர்.

மிகச் சிலரே தாகத்தால் இறக்கின்ற நிலையில், கோடிக்கணக்கான மக்கள் நீரினால் பரவும் நோய்களால் இறப்பதால், வளர்ச்சியடையாத நாடுகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான சவாலையும் வாய்ப்பையும் வழங்குகிறது. ரோட்டரி உறுப்பினர்கள் கழிவுநீரை பாதுகாப்பாக வெளியேற்றும் வழியின் மூலமும் நல்ல சுகாதார பழக்கங்களை கற்றுக் கொடுப்பதன் மூலமும் இந்தப் பணியை செய்கிறார்கள்.

நீர் மற்றும் சுகாதார பிரச்சினைகளை தீர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, ரோட்டரி இந்தியா, இயக்குநர் பரத் பாண்ட்யாவும் நானும் சமீபத்தில் முடிவடைந்த ரோட்டரி இந்தியா நூற்றாண்டு உச்சி மாநாடு 2020ல் PDG ரஞ்சன் திங்க்ரா PDG ரமேஷ் அகர்வால் தலைமையில் ரோட்டரி இந்தியா நீர் மிஷன் (RIWM) ரோட்டரி இந்தியா ஸானிடேஷன் மிஷனை (RISM) துவக்கியுள்ளோம்.

RIWMன் அடுத்த ஐந்தாண்டு இலக்கு 500 மில்லியன் ஏக்கர் நிலத்தை பாதிக்கும் 10,000 அணைகளை நிர்மாணித்தல்; 165 கோடி ரூபாய் செலவில் நீர்வளங்களின் அருகே ஐந்து மில்லியன் மரங்களை நடவு செய்வது ஆகியவையாகும்.

- எடுத்துச்சொல்லுதல்/விழிப்புணர்வு ஏற்படுத்துதல்/செயல்பாட்டு இலக்கு: 500 மில்லியன் நபர்களை பாதித்தல்.
- மாற்றம்/நீர்நிலைகளின் தண்ணீர் வளத்தை அதிகரிக்கும் இலக்கு: இந்தியா முழுவதும் 10,000 பரந்த நீர்நிலைகளை புத்துயிர் பெறச் செய்தல்.
- திறமையான மழை நீர்அறுவடை (நகர்ப்புறத்தில்) இலக்கு: 50,000 நகர்ப்புற மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மற்றும் செயல்படாத RWHSஇன் மறுமலர்ச்சி.
- நீரின் குறைப்பு/மறுபயன்பாடு/உரிய மரியாதை/மீட்டெடுத்தல்/ரீசார்ஜ்/மறு சுழற்சி இலக்கு: 25,000 கிராமங்கள்.

RIWMஐ ஜல் சக்தி அமைச்சினால் தொடங்கப்பட்ட ஜல் சக்தி அபியான் உடன் இணைப்பதே இதன் நோக்கமாகும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான RISMஇன் இலக்குகளில் சுகாதார மற்றும் மாதவிடாய் பற்றியக் கல்வி மற்றும் பயிற்சிக்காக 1.5 லட்சம் பள்ளிகளை உள்ளடக்கியது. சுமார் 5,000 கிராமங்களில் செய்யப்படும் ODF-பிளஸ்ஸாக்கப்படும்: வீடுகள், பள்ளிகள், சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி போன்றவற்றில் சரியான கழிப்பறைகள், குழாய் நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள் அமைக்கப்படும்.

நண்பர்களே நாம் ஏறும் பாதை செங்குத்தானது ஆனால் நாம் அதில் ஏறித்தான் ஆக வேண்டும் தயாராகுங்கள்.



**கமல் சங்வி**
RI இயக்குனர், 2019–21


### Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



### ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



### ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

# $300 மில்லியன் மதிப்புள்ள சேவைத் திட்டங்களுடன் நூற்றாண்டைக் கொண்டாடுகிறது ரோட்டரி இந்தியா

ரஷீதா பகத்

கொல்கத்தாவில் நட்சத்திரமயமான நூற்றாண்டுச் சந்திப்பின்போது, ரோட்டரி இந்தியாவின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் தொடங்கின. இதில் 32 நாடுகளைச் சேர்ந்த சுமார் 4,000 பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். இதில் RIயின் பல இப்போதைய, எதிர்வரும் இயக்குநர்கள் மற்றும் அறங்காவலர்களும் உண்டு. இந்தக் கூட்டத்தில் பேசிய RIPN சேகர் மேத்தா, தான் ரோட்டரி இந்தியாவை ரோட்டரியின் வைரம் என்று அழைப்பது ஏன் என்று தகவல்களை புள்ளிவிவரங்களுடன் விளக்கினார்.

இந்த ஆண்டு, இந்திய ரோட்டரியன்களுக்கு உண்மையிலேயே ஒரு சிறப்பான ஆண்டு; 100 ஆண்டுகள் என்பது எந்தவோர் அமைப்புக்கும் நினைவில் நிற்கிற தருணம்; நூற்றாண்டுக் குழுவின் தலைவர் என்றமுறையில், நாம் செய்கிற




**இடதிலிருந்து:** *ராஷி, RIPN சேகர் மேத்தா, சோனல் சங்வி, RI தலைவர் மார்க் மலோனி மற்றும் கேய்.*

சேவையை மதிப்பிட்டுப் பார்க்கும்போது, நான் சிலிர்த்து நிற்கிறேன். தன்னைத் தாண்டிய சேவை என்ற நோக்கத்தைக் கொண்ட ஓர் அமைப்புக்கு, நம்முடைய சேவைப் பணிகளை மேம்படுத்துவதுதான் சிறந்த கொண்டாட்டம்.

ரோட்டரி உலகத்தில் மிகவும் புகழ்பெற்ற, மதிப்புமிக்க மாணிக்கமாக ரோட்டரியை ஆக்குவதற்காக இந்திய ரோட்டரியன்கள் மிகவும் உழைத்துள்ளார்கள். இந்திய உறுப்பினர் சேர்க்கைகள், ரோட்டராக்ட், நிகழ்ச்சிகள், திட்டங்கள், TRF வழங்கல் மற்றும் தலைமைப்பண்புகள் ஆகியவற்றின்மூலம் தரத்தை உயர்த்தியுள்ளார்கள். இளம்பிள்ளை வாதத்தை ஒழிக்கும் திட்டம் 2011ல் வெற்றியடைந்தது, (அப்போது தான் இந்தியாவில் கடைசி இளம்பிள்ளைவாதப் பாதிப்பு நிகழ்ந்தது), அந்த ஊக்கத்தில் இந்திய ரோட்டரியன்கள் ஒவ்வொரு




ஹேமந்த் குமார்

பகுதியிலும் பெரிய சவால்களைக் கையிலெடுத்துக்கொண்டுள்ளார்கள்.

## உறுப்பினர் சேர்க்கை

ரோட்டரியின் வளர்ச்சிபற்றிய புள்ளிவிவரங்கள் ஊக்கம் தரும் வகையில் இல்லாத இந்த நேரத்தில், இந்தியாவில் உறுப்பினர் எண்ணிக்கை சிறப்பாக வளர்ந்துவருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் நம்முடைய வளர்ச்சி 44 சதவிகிதம், நம்முடைய உறுப்பினர் எண்ணிக்கை, உலக அளவிலான உறுப்பினர் எண்ணிக்கையில் 12.07 சத விகிதமாகும்.

இந்திய ரோட்டரியன்கள் ஒவ்வொருவரும், அடுத்த 30 ஆண்டுகளில் தலா ஓர் உறுப்பினரைச் சேர்ப்பதாக உறுதியளித்திருக்கிறார்கள், ஆகவே, இந்தியாவின் வளர்ச்சி இன்னும் விரைவாகவிருக்கிறது. கடந்த மூன்று மாதங்களில் அவர் இந்தக் கேள்வியை 15,000க்கும் மேற்பட்ட ரோட்டரியன்களிடம் கேட்டுள்ளார்; அவர்களுடைய பதில்கள் எப்போதும் ஊக்கம் தரும் வகையில் அமைந்துள்ளன.

தொடக்க விழாவில் நிறைந்திருந்த மக்களைப் பார்த்து, ‘நீங்கள் ஒவ்வொருவரும் இதைச் செய்வீர்களா?’ என்று அவர் கேட்டபோது, மக்கள் பலமாகக் குரலெழுப்பி அதற்குச் சம்மதித்தார்கள். இதைக் கேட்டு மகிழ்ந்த மேத்தா, இவ்வாறு குறிப்பிட்டார்: இந்த வாக்குறுதி, ‘ரோட்டரியை வளர்க்க’ விரும்பும் ஒரு மனிதருக்கு (தலைவர் மலோனி) முன்னால் வழங்கப்படுகிறது. இதுதான் அவருடைய முழக்க அழைப்பு.’’

உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்வதும் இந்திய ரோட்டரியன்களின் பணிகளில் முக்கியமாக இருக்கும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

## ரோட்டராக்ட்

இந்தியாவில் ரோட்டராக்ட் சிறப்பாகச் செயல்பட்டுவருவதாக RIPN குறிப்பிட்டார். ரோட்டராக்ட் சங்கங்களில் 24 சதவிகிதம் இந்தியாவில் உள்ளது, உலக ரோட்டராக்டர்களில் 41 சதவிகிதத் தினர் இங்கு உள்ளார்கள். மாற்ற எண்ணிக்கைகளும் ஊக்கம் தருகின்றன. சென்ற வாரம், நான் PRIP கல்யாண்பேனர்ஜியின் மாவட்ட (RID 3060)க் கருத்தரங்குக்குச் சென்றிருந்தேன், முன்னாள் ரோட்டராக்டர்கள் மாவட்ட ஆளுநர்களாக வளர்ந்திருப்பதைக் கண்டேன். கடந்த 10 ஆண்டுகளில், RID 3060லிருந்து ஏழு ரோட்டராக்டர்கள் (அவர்களில் நால்வர் DRRகளாக இருந்தவர்கள்) DGக்களாகியுள்ளார்கள்.

ரோட்டராக்டின் புதிய விதிமுறைகளின்படி இந்தியாவில் இன்னும் அதிக ரோட்டராக்டர்கள் உண்டாவார்கள், அவர்களில் பலர் ரோட்டரியன்களாகவும் மாறுவார்கள் என்று தான் நம்புவதாக மேத்தா தெரிவித்தார்.

## நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்கள்

நம்முடைய உறுப்பினர் எண்ணிக்கையும் ரோட்டராக்டும் வலுவாக உள்ளன என்றால், நம்முடைய சமூகங்களுக்கு நாம் செய்கிற சேவைகள் இன்னும் வலுவாக உள்ளன. இந்திய ரோட்டரி சங்கங்கள், மாவட்டங்கள் செய்யும் பணிக்கு இணையே கிடையாது. இதைப் புரிந்துகொள்வதற்கு ஒரு புள்ளிவிவரம், இந்தியாவைச் சேர்ந்த 38 DGக்களும், நேபாளத்தைச் சேர்ந்த ஒருவரும் இந்த ஆண்டு $300 மில்லியனுக்கு மேற்பட்ட மதிப்புள்ள திட்டங்களைச் செய்வதாக உறுதியளித்துள்ளார்கள். ஒருவேளை அவர்கள் இந்த இலக்குகளைக் குறைத்துவிடுவார்களோ என்று நான் மூன்று மாதத்துக்கு ஒருமுறை சரிபார்த்துவருகிறேன், ஒருவர் கூட அப்படிக் குறைக்கவில்லை. அவர்கள் தங்களுடைய அர்ப்பணிப்பில் உறுதியுடன் இருக்கிறார்கள்.’’

இந்த விழாவில் கலந்துகொண்ட மேற்கு வங்க ஆளுநர் ஜக்தீப் தன்கரை வரவேற்றுப் பேசிய அவர், முந்தைய 10 ஆண்டுகளில், இந்தியாவில் நாங்கள் இயக்கும் 200க்கும் மேற்பட்ட கண் மருத்து வமனைகளில் இருபது லட்சம் பேர் தங்களுடைய கண்பார்வையைப் பெற்றுள்ளார்கள். நம் குடும்பத்தில் ஒரு குழந்தையின் இதயத்தில் ஓர் ஓட்டை விழுந்தால், நம் உலகம் தலைகீழாகிவிடுகிறது. கடந்த 10



*RI தலைவர் மலோனி மேற்கு வங்க ஆளுநர் ஜகதீப் தன்கரை வரவேற்கிறார். நூற்றாண்டு மாநாட்டின் துணைத்தலைவர் அனிருதா ராய் சவுத்ரி, கேய், சுதேஷி தன்கர் மற்றும் RIPN மேத்தா ஆகியோரும் உடன் உள்ளனர்.*

ஆண்டுகளில், 20,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் இதய அறுவைச்சிகிச்சை களைச் செய்துகொண்டுள்ளார்கள், ரோட்டரி அவர்களின் உயிரைக் காக்க உதவியுள்ளது.

இந்தியாமுழுவதும், ரோட்டரி 30க்கும் மேற்பட்ட ரத்த வங்கிகளை நடத்துகிறது, 30,000 கைம்பெண்கள், அவர்களுடைய குழந்தைகளுடைய திறன் மேம்பாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது, இதில் இருபது சதவிகிதம் ஏற்கெனவே நிறைவேறிவிட்டது.

நாங்கள் 25,000 காப்பகப் பொதிகளை வழங்கியுள்ளோம், இதன்மூலம் 125,000 பேர் பலன் பெற்றுள்ளார்கள்; 20,000 கிராமப்புறக் கழிப்பறைகளைக் கட்டி 100,000 பேருக்குக் கண்ணியத்தை வழங்கியுள்ளோம். 25,000க்கும் மேற்பட்ட மின் கற்றல் அலகுகளை நாங்கள் அமைத்துள்ளோம், இதன்மூலம் 7.5 மில்லியன் மாணவர்களுடைய கற்றல் அனுபவத்தை மேம்படுத்தியுள்ளோம். 70,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தங்களுடைய பணிக்கேற்ற பயிற்சி யைப் பெற்றுள்ளார்கள்.

85,000க்கும் மேற்பட்ட வயதுவந்தோருக்கு நாங்கள் எழுதப் படிக்கக் கற்றுத்தந்து கண்ணியம் வழங்கியுள்ளோம், இவர்களுக்குக் கற்றுத்தருகிறவர்கள் யார் தெரியுமா? சிறு குழந்தைகள்.

இந்தியாவில், பிச்சைக்காரர் ஒருவருடைய குழந்தையைத் திரும்பப் பள்ளிக்கு அனுப்ப முயன்றால், அது ஒரு கடினமான செயல். பாலியல் தொழிலாளி ஒருவருடைய குழந்தையைப் பள்ளிக்கு அனுப்ப முயன்றால், அது மிகவும் கடினமான செயல். ஆனால், இந்திய ரோட்டரியன்கள் 50,000க்கும் மேற்பட்ட குழந்தைகளைத் திரும்பப் பள்ளிக்கு அனுப்பியுள்ளார்கள் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

இந்திய ரோட்டரியினர் நூலகங்களைக் கட்டியுள்ளார்கள், 2,500க்கும் மேற்பட்ட பள்ளிகள் முழுதும் புதுப்பிக்கப்பட்டுள்ளன, 75,000 மாணவர்களுக்கு நன்மை தரும் மகிழ்ச்சிப் பள்ளிகளாகியுள்ளன. நம்முடைய திட்டங்கள் இப்போது நாடுமுழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன; மாநில, மத்திய அரசுகளுடன் நாம் பணியாற்றுகிறோம்.

எழுத்தறிவைப் பொறுத்தவரை, ரோட்டரி இந்தியாவின் எழுத்தறிவு வரலாறு இணையற்றது என்றார் மேத்தா. இந்திய ரோட்டரியைப்போல் வேறு எந்த அமைப்பும் இந்த அளவு முழுமையான முழு எழுத்தறிவுத் திட்டத்தை நிறைவேற்றியதில்லை.

ரோட்டரியன்கள் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுகிறார்கள்; பல மாநில அரசுகள் தங்கள் மாநிலங்களில் தங்களுடன் இணைந்து பணியாற்றுமாறு ரோட்டரியை அழைத்துள்ளன. நாம் 30,000க்கும் மேற்பட்ட பள்ளிகளில் பணியாற்றியுள்ளோம், இதனால் 100 மில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பலன் பெற்றுள்ளார்கள். 2025க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக்கவேண்டும் என்பதற்காக நாம் நம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம், அதற்காக அரசுடன் பணியாற்றுகிறோம். நமக்கு இந்தக் கனவை வழங்கியவர், PRIP பேனர்ஜி.

### நலன் மற்றும் WASH

நலப்பராமரிப்பு, WASH ஆகிய



ரஷீதா பகத்

இரண்டிலும், இந்திய ரோட்டரியன்கள் மிக உயர்ந்த இலக்குகளைக் கொண்டுள்ளார்கள்; இதனால், சென்ற வாரம் நான் இந்தியக் குடியரசுத் தலைவரையும் உள்துறை அமைச்சரை யும் சந்தித்தபோது, தேர்ந்தெடுக்கப் பட்ட பகுதிகளில் அரசாங்கம் செய்யும் பணியில் 10 சதவிகிதத்தை ரோட்டரி செய்யும் என்று நான் அவர்களுக்கு உறுதியளித்துள்ளேன்.

அவர் இந்த உறுதியை வழங்கக் காரணம், சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் ரோட்டரியன்கள் ஏற்கெனவே இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் மற்றும் தூய்மையைப் பொறுத்தவரை, அரசின் இலக்காகிய 100,000 நீர்நிலைகளில் 10,000 நீர் நிலைகளைப் புதுப்பிக்க அவர்கள் உறுதிகொண்டுள்ளார்கள்; அரசாங்கத்தின் இலக்காகிய 100,000 தடுப்பணைகளில் 10,000 தடுப்பணை களை அமைக்கவும் அவர்கள் உறுதிகொண்டுள்ளார்கள்.

நண்பர்களே, இவை கடினமான இலக்குகள்தான், ஆனால், நாம் இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் இலக்குகளை வென்றவர்களாயிற்றே.

இன்றைக்கும், NIDக்களின்போது பெரும் எண்ணிக்கையிலான ரோட்டரியன்கள் இளம்பிள்ளை வாதத்தை அகற்றுவதற்காகத் தங்களுடைய நேரத்தைத் தன்னார் வத்துடன் வழங்குகிறார்கள்; அவர்களே தடுப்பு மருந்துகளை வழங்கி அனைத்துக் குழந்தைகளையும் இந்த நன்மை சென்றடைய உதவுகிறார்கள்.

## TRF பங்களிப்பு

ரோட்டரியின் வைரமாக இந்தியா திகழ்வதற்கு இன்னொரு காரணம், நம்முடைய TRF பங்களிப்பு. கடந்த மூன்றாண்டுகளாக, TRFக்குப் பங்களிப்போரில் நாம் தொடர்ந்து இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளோம்... ஆண்டுக்கு $22 மில்லியனை நாம் வழங்குகிறோம். US டாலர் ரூ.70க்கு அருகில் இருக்கிற சூழலில், இதற்கு இணையான இந்திய மதிப்பு, ஆண்டுக்கு ரூ. 1,500 கோடி என்கிற மிகச்சிறந்த எண்ணிக்கையாகும்.

இந்தியாவில் பல ஆர்ச் க்லம்ஃப் உறுப்பினர்கள் சேர்கிறார்கள்; உலக அளவில் அதிக AKS உறுப்பினர்களைக் கொண்டுள்ள இரண்டாவது நாடு நம்முடையது; நமக்கு முன்னால் உள்ள ஒரே நாடு, அமெரிக்கா.

நன்கொடை நிறுவல் எண்ணிக்கையில் நாம் முதலிடத்தில் உள்ளோம். ரோட்டரி உலகத்தில், வாரி வழங்குவதில் புகழ் பெற்றுள்ள புதிய ஆளுமையான D ரவிஷங்கர் நம்மிடையே இங்கு உள்ளார். இந்த மனிதர்மட்டும் ரூ.100 கோடி என்கிற மிகப்பெரிய தொகையை வழங்க உறுதிகூறியுள்ளார்.

## தலைமைப்பண்புகள்

உலக அளவில் ரோட்டரி இந்தியாவில் தான் மிகச்சிறந்த தலைமைப்பண்புகள் உள்ளதாக மேத்தா கூறினார். 86 வயதில் PRIP ராஜேந்திர சாபூ ஆப்பிரிக்காவில் மருத்துவப் பணிகளை வழிநடத்துகிறார், ஒரு முறையோ, இருமுறையோ இல்லை, சில சமயங்களில் ஆண்டுக்கு மூன்று முறைகூட. PRIP கல்யாண் பேனர்ஜி முழு எழுத்தறிவுபெற்ற இந்தியாவைப் பற்றிக் கனவு காண்பதுடன் நிறுத்தாமல், அதற்காகப் பணியாற்றுகிறார்; அந்த இலக்கை நிறைவேற்றுவதற்காக அவர் எதையும் செய்யத் தயாராக உள்ளார், எங்கும் செல்லத் தயாராக உள்ளார். முன்னாள் இயக்குநர் சுஷீல் குப்தா இந்திய ரோட்டரியின் WASH மனிதராக அறியப்பட்டவர்; ஏதாவது இயற்கைப் பேரழிவுகள் வந்தால், உடைசல்களை உயர்ந்த மண்டபங்களாக மாற்றவல்ல மனிதர் PRID யஷ்பால் தாஸ்.

ஒரு நல்ல நோக்கத்துக்காக பணம் தேவைப்பட்டால், PRID அசோக்மகாஜனைத் தொலைபேசியில் அழைத்தால் போதும்; PRID P T பிரபாகர் WinSக்காக மிகச் சிறந்த பணியாற்றியுள்ளார்; எலும்பியல் அறுவைச்சிகிச்சை வல்லுனரான PRID மனோஜ் தேசாய், அந்தத் திறனைக்கொண்டு, இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப் பட்டோருக்கு நூற்றுக்கணக்கான திருத்த அறுவைச்சிகிசைகளைச் செய்து ள்ளார். இன்று நாம் PRIDகள் சுதர்ஷன் அகர்வால் மற்றும் O P வைஷ் ஆகியோருடைய சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ள இயலாமல் வருந்துகிறோம். PRID C பாஸ்கர், அறங்காவலர் குலாம்




ஜெய்ஸ்ரீ

**இடதிலிருந்து:** RID *பரத் பாண்டியா,* RI *தலைவர் மலோனி,* TRF *அறங்காவலர் தலைவர் கேரி ஹீவாங், கேய், ராஷி,* RID *கமல் சங்வி, மாநாட்டுத் தலைவர் வினோத் பன்சல் மற்றும் செயலாளர் கிஷோர் குமார்.*

வஹன்வதி, RI இயக்குநர்கள் கமல் சங்வி மற்றும் பரத் பான்ட்யா ஆகியோர் RI வாரியத்திலும் நம் அறக்கட்டளையிலும் இந்தியாவின் பிரதிநிதிகளாக மிகச் சிறந்த தலைமைப்பண்புகளை வழங்கியுள்ளார்கள்.

'இந்தியாவைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் கலங்கரை விளக்கங்களாகச் செயல்படுகிற நேரத்தில், நூற்றுக்கணக்கான முன்னாள் ஆளுநர்கள், ஆயிரக்கணக்கான ரோட்டரியன்கள் நம்முடைய நாட்டு மக்களுடைய முகங்களில் புன்னகையைக் கொண்டுவரும் ஆர்வத்துடன் மிகச்சிறப்பாகப் பணியாற்றிவருகிறார்கள். ரோட்டரியின் கனவுகள் பெரியவை என்பதில் ஐயமில்லை, அவற்றை எதார்த்தத்தில் நிறைவேற்ற நாம் முயல்வோம்.

நிறைவாக, மேத்தா இந்த விழாவில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு நன்றி தெரிவித்து இவ்வாறு பேசினார்: இதற்கு முன் வேறு எந்தத் தன்னார்வலர் நிகழ்ச்சியிலும் மூத்த தலைவர்கள் இத்தனைப் பேர் கலந்து கொண்டதில்லை. இந்த எண்ணிக்கை இன்னும் உயரவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்; விரைவில் தில்லியில் நடைபெறும் ஒரு ரோட்டரிச் சந்திப்பில் அது நிகழும் என்று நம்புகிறோம்.

இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்த கமல் சங்வி, 32 நாடுகளைச் சேர்ந்த ரோட்டரி தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளைக் கண்டு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் நெகிழ்ச்சியில் திகைத்துப்போனதாகக் குறிப்பிட்டார்; இவர்களைப் பெருமைப்படுத்துவதற்காக, இவர்களுடைய நாடுகளின் கொடிகள் மேடையில் காட்சிப்படுத்தப்பட்டன.

மிக விரைவாக மாறிவருகிற, அதிகம் இணைந்து செயல்படுகிற ஓர் உலகத்தில் நாமெல்லாம் வாழ்கிறோம். பன்னாட்டுச் சவால்களின் அளவு, சிக்கல்தன்மையால், ஒவ்வொரு வடிவத்திலும் ஒவ்வோர் அளவிலுமான மாற்றத்தைக் கொண்டுவருவோர் தேவைப்படுகிறார்கள். என்றார் அவர். நூற்றாண்டுச் சந்திப்பை, இந்தப் பார்வையாளர்களிடையே உள்ள மாற்றத்தைக் கொண்டுவருவோருக்கு அர்ப்பணித்தார், அவர்களுடைய ஒட்டுமொத்தத் துணிச்சலான செயல்பாடுகள் நம் சமூகங்களில் கவனம் செலுத்துகின்றன, அவற்றுக்குப் பயன்படுகின்றன. நாம் வந்தபோது இந்த உலகம் எப்படி இருந்ததோ, அதைவிட மேம்பட்ட ஓர் இடமாக அதை மாற்றிவிட்டுச் செல்வோம் என்று நாம் அனைவரும் இன்னொருமுறை உறுதிகூறிக்கொள்வோம்.

வந்திருந்த அனைவரையும் வரவேற்ற சந்திப்புத் தலைவர் வினோத் பன்சால், இந்த நிகழ்ச்சி யைப் பயன்படுத்திக்கொண்டு, சமூக நலனுக்கு நம்மை இன்னொருமுறை அர்ப்பணித்துக்கொள்வோம், பன்முகத்தன்மை கொண்ட ஓர் உலகைக் கூடுதலாகப் பிரதிநிதித்துவப் படுத்துவோம், மனிதகுலத்துக்கான நம்முடைய சேவையில் இன்னும் செயல்திறனோடு இருப்போம், இரக்கமும் மனிதத்தன்மையும் கொண்ட ஓர் அமைப்பான ரோட்டரியின் சிறந்த பண்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டுவோம் என்று விழாவில் கலந்துகொண்டோரைக் கேட்டுக்கொண்டார்.

## ரோட்டரி இந்தியா பிற நாடுகளுக்கு உதவவேண்டிய நேரம் இது

கொல்கத்தா நூற்றாண்டுச் சந்திப்பில் RIPN சேகர் மேத்தா இந்திய ரோட்டரியன்களுக்கு ஒரு சவாலை வழங்கினார்: பிற நாடுகளில் சேவைத் திட்டங்களை நிறைவேற்றுங்கள்.

இந்தியாவில் ஆயிரக்கணக்கான சேவைத் திட்டங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றியுள்ள நாம், பன்னாட்டுச் சேவைத்துறையில் ஒரு முதிர்ந்த செயல்பாட்டாளராகியுள்ளோம், நம்முடைய வளங்கள், திறமையைப் பிற நாடுகளுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம். அடுத்த ஆண்டு, இந்தியாவில் நாம் செய்யும் மொத்த நல்கைகளில் ஐந்து சதவிகிதத்தைப் பிற நாடுகளுடன் செய்ய விரும்புகிறோம், அடுத்த ஆண்டில் இந்த எண்ணிக்கை பத்து சதவிகிதமாகும். இப்போது இந்தியா தானே முன்வந்து தன்னுடைய பங்கைப் பொறுப்புடன் நிறைவேற்ற விரும்புகிறது, உலக அளவில் ரோட்டரியின் வளர்ச்சிக்குப் பங்களிக்க விரும்புகிறது என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.■

# District Wise TRF Contributions as on January 2020

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 25,913 | 5,986 | 0 | 8,480 | 40,378 | 131 | 2.9 |
| 2982 | 23,639 | 16,036 | 161,362 | 720 | 201,757 | 109 | 3.6 |
| 3000 | 69,727 | 2,403 | 29,314 | 296 | 101,740 | 93 | 1.8 |
| 3011 | 80,045 | 1,189 | 31,816 | 0 | 113,049 | 57 | 1.6 |
| 3012 | 161,284 | 10,715 | 136,902 | 58,986 | 367,887 | 143 | 3.9 |
| 3020 | 25,800 | 35,437 | 0 | 12,029 | 73,265 | 100 | 2.6 |
| 3030 | 2,203 | 7 | 1,423 | 2,000 | 5,633 | 8 | 0.2 |
| 3040 | 7,084 | 245 | 8,949 | 0 | 16,278 | 11 | 0.5 |
| 3053 | 36,059 | 32 | 64,331 | 0 | 100,422 | 80 | 2.8 |
| 3054 | 5,848 | 168 | 35,809 | 0 | 41,825 | 19 | 0.3 |
| 3060 | 52,894 | 57,014 | 125,678 | 21,876 | 257,463 | 647 | 16.0 |
| 3070 | 22,909 | 705 | 9,884 | 0 | 33,498 | 86 | 2.8 |
| 3080 | 48,706 | 6,017 | 14,219 | 1,013 | 69,956 | 131 | 3.8 |
| 3090 | 11,928 | 1 | 0 | 0 | 11,930 | 32 | 1.6 |
| 3100 | 25,908 | 0 | 0 | 0 | 25,908 | 76 | 4.0 |
| 3110 | 17,021 | 1,710 | 1,045 | 0 | 19,776 | 30 | 0.8 |
| 3120 | 59,715 | 141 | 4,565 | 0 | 64,421 | 138 | 4.1 |
| 3131 | 148,421 | 4,077 | 256,246 | 43,000 | 451,743 | 544 | 10.4 |
| 3132 | 7,276 | 292 | 11,538 | 30,000 | 49,105 | 45 | 1.2 |
| 3141 | 520,658 | 12,648 | 671,528 | 86,392 | 1,291,226 | 653 | 11.9 |
| 3142 | 111,829 | 1,916 | 80,282 | 16,763 | 210,789 | 343 | 10.6 |
| 3150 | 63,004 | 6,486 | 35,504 | 170,368 | 275,363 | 480 | 13.5 |
| 3160 | 2,107 | 3,057 | 0 | 0 | 5,165 | 13 | 0.5 |
| 3170 | 53,145 | 5,450 | 23,921 | 0 | 82,516 | 192 | 3.4% |
| 3181 | 146,771 | 13,685 | 0 | 0 | 160,456 | 313 | 8.8 |
| 3182 | 43,800 | 7,606 | 4,723 | 0 | 56,128 | 228 | 7.3 |
| 3190 | 104,623 | 21,145 | 67,025 | 0 | 192,793 | 537 | 11.3 |
| 3201 | 38,367 | 26,291 | 120,866 | 30,431 | 215,954 | 122 | 2.3 |
| 3202 | 60,365 | 53,211 | 169,525 | 1,000 | 284,101 | 91 | 1.8 |
| 3211 | 15,319 | 57 | 52,829 | 436 | 68,641 | 26 | 0.6 |
| 3212 | 41,780 | 19,612 | 7,488 | 0 | 68,880 | 70 | 1.7 |
| 3231 | 2,940 | 1,720 | 3,083 | 0 | 7,742 | 38 | 1.0 |
| 3232 | 43,309 | 45,150 | 157,547 | 7,500 | 253,507 | 147 | 2.8 |
| 3240 | 143,671 | 34,660 | 33,004 | 0 | 211,334 | 246 | 8.1 |
| 3250 | 24,899 | 0 | (85) | 10,000 | 34,814 | 44 | 1.1 |
| 3261 | 5,261 | 0 | 28,670 | 0 | 33,931 | 6 | 0.2 |
| 3262 | 37,112 | 3,848 | 5,507 | 0 | 46,467 | 69 | 2.1 |
| 3291 | 62,287 | 3,038 | 33,250 | 0 | 98,576 | 65 | 1.8 |
| **India Total** | **2,353,627** | **401,753** | **2,387,747** | **501,289** | **5,644,416** | **6,163** | **4.2** |
| 3220 **Sri Lanka** | 49,996 | 7,807 | 47,564 | 1,000 | 106,367 | 81 | 4.1 |
| 3271 **Pakistan** | 3,401 | 8,167 | 20 | 0 | 11,588 | 10 | 0.7 |
| 3272 **Pakistan** | 10,849 | 992 | 300 | 0 | 12,141 | 42 | 2.5 |
| 3281 **Bangladesh** | 95,593 | 4,100 | 106,051 | 6,000 | 211,744 | 210 | 3.7 |
| 3282 **Bangladesh** | 25,461 | 14,157 | 0 | 2,000 | 41,618 | 35 | 0.7 |
| 3292 **Nepal** | 160,602 | 13,490 | 399,511 | 0 | 573,603 | 290 | 6.2 |
| **South Asia Total** | **2,699,528** | **450,466** | **2,941,193** | **510,289** | **6,601,476** | **6,831** | **4.1** |
| **World Total** | **68,793,808** | **18,780,776** | **14,147,611** | **24,778,180** | **126,500,375** | | |

Source: RI South Asia Office

Rotary India Centennial Summit 2020

# ரோட்டரி இந்தியாவின் இரு மாணிக்கங்கள்

ரஷீதா பகத்



*முன்னாள் RI தலைவர்கள் ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண பானர்ஜி.*

கொல்கத்தாவின் பிஸ்வ பாங்க்ளா மாநாட்டு மையத்தில் ரோட்டரி இந்தியாவின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. 32 நாடுகளைச் சேர்ந்த 4,000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட பிரமாண்டமான இந்தக் கருத்தரங்கத்தின் போது, மக்கள் நிரம்பிய கூடத்தில் இந்த நெகிழவைக்கும் கணத்தைப் பார்க்கமுடிந்தது. RIயின் முன்னாள் தலைவர்களான ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண் பேனர்ஜி ஆகிய இருவரும், இந்திய ரோட்டரிக்குத் தாங்கள் வழங்கிய பங்களிப்புகளுக்காகப் பெருமையுடன் பாராட்டப்பட்டார்கள்.

RIயின் முன்னாள் தலைவர், வரப்போகும் அறங்காவலர் தலைவரான K R ரவீந்திரன் சாபூவை அறிமுகப்படுத்திப் பேசினார், அவர் RI தலைவராக இருந்தபோது, தலைமையின் தரத்தையே உயர்த்தினார். அவர் RI இயக்குநராக இருந்தபோது, RI அலுவலகத்தை நம் பகுதிக்குக் கொண்டுவந்தார். அவருடைய ஆளுநர் என்றமுறையில், ரோட்டரி என்கிற மந்திர உலகத்துக்குள் நான் வந்துசேர்ந்தேன். அறங்காவலர் தலைவர் என்றமுறையில் சாபூ வழங்கிய யோசனைதான், அமைதி மையங்களை அமைப்பது. இந்த யோசனையால், நாம் இப்போது பல முன்னணிப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆறு ரோட்டரி அமைதி மையங்களை அமைத்துள்ளோம். இது நம்முடைய முன்னணித் திட்டங்களில் ஒன்றாகிவிட்டது.''

ஆனால், சாபூவுடைய மிகப்பெரிய பணிகளெல்லாம், அவர் ரோட்டரியின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிய பிறகு தான் நிகழ்ந்துள்ளன. கடந்த 20 ஆண்டுகளில் ஆப்பிரிக்க நாடுகளில் 30க்கும் மேற்பட்ட மருத்துவப் பணிகளை அவர் வழிநடத்தியுள்ளார்.''

ஆனால், நான் ராஜாவைப்பற்றிப் பேசும்போது உஷாவைப்பற்றியும் பேசவேண்டும். உஷா இல்லாமல் ராஜா இல்லை. அவர் தன்னளவில் ஒரு சிறந்த ஆற்றல் மிகுந்த ஆளுமையாவார். ரோட்டரி சந்திப்பு மற்றும் IAவில் நான் உஷாவின் பேச்சைக் கேட்டுள்ளேன்; ரோட்டரி இந்தியாவின் மகுடத்தில் ராஜா

ஒரு மாணிக்கம், அல்லது, அவரை ரோட்டரியின் ராஜா என்று சொல்லலாம். அப்படியானால், என்னைப் பொறுத்தவரை உஷா சாபூ இந்திய ரோட்டரியின் அன்னை தெரசா, நைட்டிங்கேல். ஏனெனில், பல மருத்துவப் பணிகளில் அவர் பணியாளராக, செவிலியராக, ஆலோசகராக, தாயாகச் சேவைபுரிந்துள்ளார் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் ரவீந்திரன்.

இந்த அங்கீகாரத்தையும் விருதையும் பணிவோடு ஏற்றுக்கொண்ட PRIP சாபூ ஓர் எளிய செய்தியைத் தெரிவித்தார்: ''ரோட்டரிதான் என்னுடைய ஆசிரியர். நான் என்னைமட்டும் மையமாக வைத்துச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்: என் தொழில், என் குடும்பம், என் லட்சியங்கள் என்று வாழ்ந்தேன். அதன்பிறகுதான், ரோட்டரி என் வாழ்வில் வந்தது, என்னை மாற்றியது.''

ரோட்டரியின் கதவு அவருக்காகத் திறந்தபிறகு, அவர் வெறும் இந்தியராக வாழவில்லை. நான் ஓர் உலகக் குடிமகனானேன். என்னுடைய பார்வை விரிவடைந்தது, உறுதியானது, மனிதாபிமானத்தின் பொருளைப் புரிந்துகொள்ளத் தொடங்கினேன்.''

நாங்கள் இளம் பிள்ளை வாதத்துக்கான தடுப்புமருந்துகளை வழங்கிக்கொண்டிருந்த நேரம், அழுக்கான உடைகளை அணிந்த, மூக்கு ஒழுகுகிற ஒரு சிறுமியைத் தூக்கிப்பிடித்து அவளுடைய வாயில் இளம்பிள்ளைவாதச் சொட்டுமருந்தை வழங்கினேன். அப்போது, அந்த விலைமதிப்புமிக்க துளிகள் அந்தச் சிறுமியின் வாழ்க்கையையே முடக்கிப்போடக்கூடிய ஓர் ஆபத்திலிருந்து அவளைக் காக்கும் என்று அறிந்தேன், ரோட்டரியிடமிருந்து இன்னொரு பாடம் கற்றுக்கொண்டேன்.

மருத்துவப்பணிகளுக்காகத் தான் ஆப்பிரிக்காவுக்குச் செல்லும் போது, இந்தியரானாலும் சரி, ஆப்பிரிக்கரானாலும் சரி, ரத்தத்தின் நிறம் சிவப்புதான் என்று கற்றுக்கொள்வதாகச் சாபூ தெரிவித்தார். சில ஆண்டுகளுக்குமுன்னால், 2-வயதான ஒரு நைஜீரியப் பெண் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டியிருந்தது. அதற்காக, அந்தக் குழந்தையை அறுவைச்சிகிச்சை மேசையில் படுக்கச்செய்ய முயன்றார் சாபூ. ஆனால் அந்தக் குழந்தையோ, அவருடைய மடியிலிருந்து இறங்க மறுத்துவிட்டது.

அந்த நேரத்தில், அந்தக் குழந்தையின் முகத்தில் தன்னுடைய பேத்தியின் முகத்தைக் கண்டார் அவர். அப்போது, ரோட்டரி எனக்குப் பச்சாத்தாபத்தின் பொருளைக் கற்றுத்தந்தது.''

ஒரு முறை, அவருடைய தொழிலில் சில பிரச்னைகள் முளைத்தன. நான் ஒவ்வொரு செங்கல்லாகப் பார்த்துப்பார்த்துக் கட்டிய தொழிற்சாலையிலிருந்து நான் விலகவேண்டியிருந்தது. ஆகவே, இனி சாபூவின் அடையாளம் என்ன என்று எல்லாரும் யோசிக்கத் தொடங்கினார்கள்.

ஆனால், எனக்கு அப்போது எந்தத் துன்பமும் ஏற்படவில்லை. நல்லொழுக்கம், நேர்மை என்கிற ரோட்டரியின் பாடங்களை நான் கற்றிருந்தேன், பின்பற்றினேன். அதுவே எங்கள் குடும்பத்தின் அடையாளமானது. ரோட்டரி எனக்கு வழங்கிய இன்னொரு பரிசு அது.''

இப்படி ரோட்டரியால் எனக்குக் கிடைத்த, என் வாழ்க்கையை மாற்றிய பலப்பல தனிப்பட்ட அனுபவங்களை என்னால் எடுத்துக்காட்ட இயலும். மிகச்சிறந்த வைரம்கூட இருட்டில் ஒளிர்வதில்லை. அதன்மீது வெளிச்சம் பட்டால்தான் வைரம் ஒளிரும், அதன் மதிப்பு பிறருக்குத் தெரியும். நாம் எல்லாரும் வைரங்களாக இருக்கலாம். ஆனால், ரோட்டரி என்கிற ஒளி நம்மீது விழுந்தால்தான் நமக்கே நம்முடைய மதிப்பு தெரியும்.''

நூற்றாண்டுக் கொண்டாட்டக் குழுவின் தலைவரான RIPN சேகர் மேத்தாவுக்கு நன்றி தெரிவித்த சாபூ இவ்வாறு தொடர்ந்து கூறினார்: இங்கு ரோட்டரியை நான் என்னுடைய ஆசிரியராக, என்னுடைய வழிகாட்டியாக, என்னுடைய வாழ்க்கையின் பற்றுக்கோடாகக் காண்கிறேன்.''

PRIP கல்யாண் பேனர்ஜியை PRID மனோஜ் தேசாய் அறிமுகப்படுத்திப் பேசினார். நான் ஒரு தேவதைக்கதை சொல்கிறேன். IITயில் படித்த ஓர் அறிவாளியான, இளம் வேதியியல் பொறியாளர் கல்கத்தாவில் இருந்தார், அங்கு அவர் ஓர் அழகிய செவிலியரை (பினோடா)ச் சந்தித்தார், காதலித்தார். அவர்கள் திருமணம் செய்துகொண்டார்கள்; குஜராத்திலுள்ள வாபி என்ற சிற்றூரில் குடும்பம் நடத்தினார்கள்.

அந்த மனிதருக்குப் பல கனவுகள் இருந்தன, அழகான அவருடைய மனைவி, புன்னகையோடு அவருக்கு உறுதியான ஆதரவை வழங்கினார். அவர் சக மனிதர்களுக்கு உதவ விரும்பினார்; தன்னுடைய சொந்த ஊரான வாபியில் அதைச் செய்யத் தொடங்கினார்.

இன்றைக்கு நீங்கள் வாபிக்குச் சென்றால், அவருடைய உழைப்பின் பலனைப் பார்க்கலாம்: அங்குள்ள பெரும்பாலான பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகளிலும் ரோட்டரியின் சக்கரச் சின்னம் கம்பீரமாகத் தோன்றும்.

அடுத்து, வாபியிலிருந்து 150 கிமீ தொலைவிலிருக்கும் டாங் என்ற காட்டுப்பகுதிக்குச் சென்றார் பானர்ஜி. அங்கிருந்த பழங்குடியினர் ஒரு நாளைக்கு இரண்டு வேளை கூட ஒழுங்காகச் சாப்பிட இயலாமல் ஏழைமையில் இருந்தார்கள். அங்கு சென்ற பானர்ஜி, நம்முடைய நோக்கச் சொற்றொடரில் வரையறுக்கப் பட்டுள்ளது போலவே ஒரு நீடித்திருக்கும் மாற்றத்தைக் கொண்டுவந்தார்.

இந்தத் தேவதைக்கதையின் நாயகர், அதிகம் பேசமாட்டார் பிறருடைய பிழைகளிலும் அழகைக் காணும் தனித்துவமான திறமை கொண்டவர் அவர் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் தேசாய்.

ஷர்மிஷ்தாவும் நானும் 25 ஆண்டுகளாக அவரை அறிவோம். அவர் ஒரு சாதனையாளர் உயர்ந்த கொள்கைகள், சிறந்த தீர்மானமெடுக்கும் திறன், பல விஷயங்களை நன்கு ஏற்பாடுசெய்யும் திறன் கொண்டவர், மிகச்சிறந்த தலைவர்.''

மனைவி பினோடாவுடன் இந்த விழாவுக்கு வந்திருந்த பேனர்ஜி, ரோட்டரியில் என்னுடைய அண்ணன், முன்னாள் தலைவர் ராஜா சாபூவுடன் எங்களுக்கும் இந்திய ரோட்டரியின் மாணிக்கம் என்கிற விருதை நீங்கள் வழங்கியுள்ளீர்கள். இந்தப்

பெருமதிப்பைக் கண்டு நாங்கள் நெகிழ்ந்து நிற்கிறோம். இந்த மகிழ்ச்சியான தருணத்தில் நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் இருவரைப்போலவே, நம்முடைய முதல் இந்திய மாணிக்கம், முன்னாள் தலைவர் நிதீஷ் லஹார்ரியும் கொல்கத்தாவைச் சேர்ந்தவர்தான்.

மேலுலகில் அவர் இப்போது எங்கிருந்தாலும் சரி, புன்னகையுடன் எங்கள் இருவரையும் வாழ்த்திக் கொண்டிருப்பார் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் பெருமை ஒட்டுமொத்த இந்திய ரோட்டரிக் குடும்பத்துக்கும் சேரவேண்டியது என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர். இந்தியாதான் RIன் மாணிக்கம். 'ரோட்டரி இந்தியா' என்ற சொற்றொடர் பல காரணங்களால் எனக்குப் பிடிக்கும்; முதலில், நம்முடைய இந்தியப் பண்பாட்டில் ரோட்டரியின் கொள்கைகள் அனைத்தும் உள்ளடங்கியுள்ளன. இந்தப் பண்பாடு அனைத்து மதங்களையும் ஏற்கிறது, ஒவ்வொரு மத நம்பிக்கையையும் ஏற்கிறது, ரோட்டரியில் நாமும் அதைத்தான் செய்கிறோம். இந்தியப் பண்பாடு, இந்தியர்களையும் ஒட்டுமொத்த உலகத்தைச் சேர்ந்த அனைவரையும் நேசிக்கச்சொல்லும் மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறது. ரோட்டரியும் அதையேதான் செய்கிறது.''

வசுதைவ குடும்பகம் என்ற சமஸ்கிருதச் சொற்றொடர், ஒட்டுமொத்த உலகமும் ஒரு பெரிய குடும்பம்தான் என்கிற கருத்தைச் சுருக்கமாகச் சொல்கிறது. ரோட்டரியைப்போலவே, இந்தியர்களும் இதை நம்பி ஏற்றுக்கொள்கிறோம். நாம் நிஷ்காம கர்மாவையும் நம்புகிறோம். அதாவது, ஆசையில்லாமல் பணியாற்றுவது, எந்தப் பலனையும் எதிர் பார்க்காமல் நம்முடைய பணியை/ சேவையைச் செய்வது. ரோட்டரியும் அதைத்தானே செய்கிறது? அதனால்தான் நான் சொல்கிறேன், ரோட்டரிதான் இந்தியா, இந்தியாதான் ரோட்டரி.''

ரோட்டரி இந்தியா என்ற சொற்றொடரைத் தான் விரும்புவதற்கு இன்னொரு காரணத்தையும் குறிப்பிட்டார் பானர்ஜி: பெரிய குடும்பங்களாகக் கூடி வாழ்வதை இந்தியா விரும்புகிறது. இதன்மூலம் நாம் நம்முடைய மகிழ்ச்சிகளைப் பகிர்ந்துகொள்கிறோம்.''

'ரோட்டரி இந்தியா' என்ற சொல் அவருக்கு மகிழ்ச்சி தருவதற்கான நிறைவுக் காரணம், '21ம் நூற்றாண்டில் ரோட்டரி மிகப்பெரிதாக வளர்வதை உறுதிசெய்யும் உண்மையான நிலையில் நாம் உள்ளோம், இந்த ஆண்டில் இளைஞர்கள் உலகைத் தங்கள் பொறுப்பில் ஏற்றுக்கொள்ளவேண்டும். எழுத்தறிவை முன்னிறுத்தும் மலாலா யூசுஃப்ஜாயின் காலம், சுற்றுச்சூழல் பிரச்னைகளுக்காகக் குரல்கொடுக்கும் க்ரெடா தன்பெர்கின் காலம், அவர்களும் அவர்களைப் போன்றவர்களும் நாளைய உலகை ஆள்வார்கள்.''

இந்தியா எப்போதுமே ரோடராக்டை மிக வலுவாக முன்னிறுத்தும் நாடுகளில் ஒன்றாக இருந்துவந்துள்ளது என்று தொடர்ந்து






*கேய் மலோனி பினோதா பானர்ஜியை கௌரவிக்கிறார். TRF அறங்காவலர் தலைவர் தேர்வு K R ரவீந்திரன், PRIP DK லீ, RI தலைவர் மலோனி, PRIP சாபூ, RIPN மேத்தா மற்றும் TRF அறங்காவலர் தலைவர் ஹிவாங் ஆகியோரும் உள்ளனர்.*



*RI தலைவர் மார்க் மலோனி PRIP ராஜேந்திர சாபூவை கௌரவிக்கிறார். PRIPs DK லீ, கல்யாண் பானர்ஜி, TRF அறங்காவலர் தலைவர் கேரி ஹீவாங் மற்றும் RIPN சேகர் மேத்தா ஆகியோரும் உடன் உள்ளனர்.*



குறிப்பிட்டார் பேனர்ஜி. இன்றைக்கு, உலகத்திலேயே ரோடராக்ட் நியூஸ் என்ற பெயரில் ரோடட்ராக்டுக்காக ஒரு காலாண்டிதழை நடத்திவரும் ஒரே நாடு இந்தியாவாகதான் இருக்கும்.

தங்கள் பிள்ளைகள் முதலில் ரோட்டராக்டில் சேரவேண்டும், பிறகு ரோட்டரிக்கு வரவேண்டும் என்று தான் இந்தியாவின் மூத்த ரோட்டரியன்கள் எப்போதும் விரும்பிவந்துள்ளார்கள். அது நம்முடைய வீச்சை உண்மையாகவே விரிவாக்குகிறது. இன்றைக்கு, ரோட்டரி உலகம் ரோட்டராக்டின் வழியில் செல்லத் தொடங்குவதைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது. ரோட்டரியின் எதிர்காலத்தையும் உலகின் எதிர்காலத்தையும் கட்டமைப் பதற்கான மிகச்சிறந்த வழி அது.''

PRIP சாபூவுக்கு RIயின் முன்னாள் தலைவர் DK லீயும், PRIP பேனர்ஜிக்கு அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங் விருது வழங்கினார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# மாறுபட்ட மற்றும் வளைந்து கொடுக்கும் ரோட்டரிக்கு வேலை செய்வோம்: மலோனி

ரஷீதா பகத்




கொல்கத்தா ரோட்டரி இந்தியா நூற்றாண்டு உச்சி மாநாட்டில் தலைமை உரையை மார்க் மலோனி பிரமிப்புணர்வுடன் ஆற்றினார். "15 ஆண்டுகளுக்கு முன்பு தான் ரோட்டரி சிகாகோவில் தனது 100வது ஆண்டுவிழாவை கொண்டாடியது. சிகாகோவின் சிறிய கிளப் நான்கே உறுப்பினர்களுடன் 115 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது; இத்தனை சிறிய கிளப் இன்று எவன்ஸ்டனில் இருந்து ஒரு கிளப் சாசனத்திற்கு கூட தகுதி பெறாது!

1920 ஜனவரி 1ல் துவங்கிய கொல்கத்தா ரோட்டரி கிளப், அதன் 100வது ஆண்டினை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. ஜிம் டேவிட்சன் இந்தியாவில் ரோட்டரியை நிறுவும்ச் செய்யும் பணியை மேற்கொண்டார். டேவிட்சன் இரண்டு ஆண்டுகளில் 240,000 கிமீ பயணம் கப்பல், யானை என்று பிரயாணம் செய்து பிப்ரவரி 1929ல் தனது மனைவி மற்றும் மகளுடன் இங்கு ஒரு கிளப்பை துவங்கும் எண்ணத்தில் வந்தார். 1.2 மில்லியன் மக்கள் வசிக்கும் இந்த பெரிய நகரத்தில் ஒரு கிளப்பைத் தொடங்குவது எளிதான காரியமல்ல. பம்பாயில் இப்போது 18 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை இருப்பதை அறிந்து டேவிட்சன் ஆச்சரியப்பட மாட்டாரா?

பம்பாயில் ரோட்டரி கிளப் துவங்கும் மூன்று முயற்சிகளின் தோல்விக்குப்பின் அந்த ஆண்டு மார்ச்சில், டேவிட்சன் வெற்றிகரமாக கிளப்பை துவக்கி அதன் சார்டரை மே 8ஆம் தேதி பெற்றார். NC லஹரி கிளப் செகரட்டரியாக பணியாற்றும் கொல்கத்தாவிற்கு செல்வதற்கு முன்பு தில்லியில் கிளப்பை துவக்கினார். "லஹரி, 1962–63ல் RI தலைவரானார். இது இந்தியாவின் ரோட்டரியின் மிக முக்கியமான பகுதிக்கு என்னைக் கொண்டுவருகிறது. அது உங்கள் கடந்த காலமல்ல மாறாக உங்கள் எதிர்காலம். "ஜூலை 1, 2021ல் சேகர் மேத்தா இந்தியாவிலிருந்து நான்காவது ரோட்டரி பிரசிடெண்டாவார். சேகர் தலைமையில் பணியாற்றுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவரது அயராத உழைப்பு இந்தியாவின் பிரதிநிதியாகவும் உலகெங்கிலும் அதிகமான உறுப்பினர்களையும் அதிக தாக்கத்தையும் கொண்ட எதிர்காலத்தை நோக்கி நம்மை சுட்டிக் காட்டுவதற்கான சரியான நபராகவும் அவரை ஆக்குகிறது.

இந்தியாவில் ரோட்டரியின் 100 ஆண்டுகளை பார்க்கையில் நம் நிறுவனத்திற்கு இந்தியாவில் இருக்கும் முக்கயத்துவத்தையும் நாம் இணைந்து உலகில் ஆற்றிய அனைத்து நற்செயல்களையும் நினைத்து பார்க்க வைக்கிறது. அந்தச் செயல்கள் எல்லாம் ஒன்றாகி நம்மை மாற்றுகிறது என்று மலோனி கூறினார்.

உலகில் உள்ள அனைத்து தேவைகளின் சூழலில் தனி நபர்களின் சேவை முக்கியத்துவம் இழப்பதை காணலாம். "ஆனால் அனைத்து ரோட்டரியன்கள செயல்களை ஒன்றாக்கி

அவைகளை உலக ரோட்டரி கிளப்களுடன் இணைத்தால் நாம் ரோட்டரியுடன் இணைந்து செய்யும் சேவைகள் உலகில் ஏற்படுத்தும் தாக்கத்தை உணரலாம்''.

ஒரு வருடத்திற்குள் மேத்தா ஒரு கருப் பொருளையும் பேனர்களில் எளிதில் இடம் பெறத்தக்க ஒரு சிறிய வரியையும் தேர்ந்தெடுப்பார்; அந்த கருப்பொருள் உலகெங்கிலுமுள்ள அனைத்து ரோட்டரியன் களையும் ஊக்குவிக்க வேண்டும்.''

ஐந்தில் ஒரு ரோட்டரியன் பெண் என்பதில் மகிழ்ந்த RI தலைவராக வரவிருக்கும் ஆண்டுகளில் நாம் 50:50 இலக்கை நோக்கி செல்ல வேண்டும் என்று விரும்பினார்.

*ரோட்டரி வளர வேண்டுமானால் அது ஒரே அளவில் இருக்கக் கூடாது. அதற்கு நம் உறுப்பினர்களின் பின்னணி பல்வேறாக இருப்பது மிக முக்கியமானதாகும்.*

நம்முடன் இணையும் நபர்கள் பல்வேறு பின்னணியிலிருந்து இருப்பதோடு சேவை செய்யவும் விரும்ப வேண்டும் என்றார்.

ரோட்டரி வளர வேண்டுமானால் அது ஒரே அளவில் இருக்கக் கூடாது. அதற்கு நம் உறுப்பினர்களின் பின்னணி பல்வேறாக இருப்பது மிக முக்கியமானதாகும். சில கிளப்புகள் தங்களின் பாரம்பரிய மதிய உணவுக் கூட்டத்தை இன்னும் விரும்பக்கூடும். ஆனால் புதிய கிளப்கள் தங்கள் உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதிய வழிகளில் செயல்களைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளுக்கு நாம் தயாராக வேண்டும்.

ரோட்டரி புதிய நட்புகள், வாய்ப்புகள் மற்றும் அனுபவங்களுக்கு கதவுகளை திறக்கின்றன.

ரோட்டரி சேவை என்பது நாம் மற்றவர்களின் நலனுக்காக உழைக்கும் ஒரு வழிப் பாதையல்ல. ரோட்டேரியனாக இருப்பதில் கூட்டம் மற்றும் திட்டத்தை நிர்வகிப்பது, கூட்டத்தில் பேசுவது போன்று ஏராளமான தனிப்பட்ட வளர்ச்சி களுக்கும் வாய்ப்புண்டு. ரோட்டரியிலிருந்து புதிதாக நீங்கள் கண்டெடுக்க எடுக்க உங்கள் அனுபவம் மேம்படும்.■

# RID பாண்ட்யா RI பொருளாளர் (2020–21)




RI இயக்குநர் பரத் பாண்ட்யா 2020–21 ஆம் ஆண்டு RIன் பொருளாளராக உள்ள அதே சமயம், ஹோல்கர் நாக் RI தலைவராக இருப்பார் .

RID ஜோரீட்டா சொலாரி துணை தலைவராகவும் RID ஸ்டெஃபானி அர்ச்சிக், எக்ஸ்யூட்டிவ் கமிட்டி தலைவராகவும் இருப்பார்கள்.■

*RID பரத் பாண்ட்யா, RIPE ஹோல்கர் நாக், RIDs ஜோரீட்டா சொலாரி மற்றும் ஸ்டெஃபானி அர்ச்சிக்.*

# சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம், ரோட்டரியின் முன்னுரிமை

V முத்துக்குமரன்

கிராமங்கள் மற்றும் பள்ளிகளில் சுகாதார வசதிகளை உருவாக்குவதில் மட்டுமே பயனில்லை. மாறாக தொழில் முறை வல்லுனர்களை கொண்டு சமுதாயத்தில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்று PDG ரான் டென்ஹாம்,சேர் எமரிட்டஸ், நீர் மற்றும் சுகாதார ரோட்டேரியன் ஆக்ஷன் குழு (WASRAG) கூறினார்.

கொல்கத்தாவில் நடந்த நூற்றாண்டு உச்சி மாநாட்டில் தூய்மையான நீரை வழங்குவது குறித்த அமர்வில் பேசிய அவர், உள்ளூர் சமூகங்களுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளின் உரிமையை 'நிறைவேற்றுவதில் பங்காளிகளாக' மாற்ற WASRAG உதவுவதை கூறினார். கடந்த ஐந்து ஆண்டுகளில், அறக்கட்டளை $113 மில்லியனில் உலகம் முழுவதும் WASH திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. ரோட்டரி $23 மில்லியன் முதலீட்டில் நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான 316 உலகளாவிய மானிய திட்டங்களையும், இந்திய மண்டலங்களில் 250,000 டாலர் மதிப்புள்ள தனிநபர் திட்டங்களையும் செய்துள்ளது. உலகளாவிய மானிய நிதிகளுக்கான திட்டங்களை தயாரிப்பதில் WASRAG கிளப்புகளுக்கு உதவுகிறது மற்றும் கிளப்புகளை செயல் படுத்துவதற்கான சிறந்த நடைமுறைகளின் தொகுப்பை வழங்குகிறது, என்றும் கூறினார்.

RI வாட்டர் மிஷன் (RIWM) தலைவர் PDG ரஞ்சன் திங்க்ரா 2003 ஆம் ஆண்டு டெல்லி பிரகடனத்திற்கு பின் மறு ஆண்டு RI வாட்டர் மிஷன் அறக்கட்டளை உருவானதை நினைவு கூர்ந்தார். 'இதுவரை, ராஜஸ்தான், ஹரியானா மற்றும் பஞ்சாபில் 110க்கும் மேற்பட்ட அணைகளை நாங்கள் கட்டியுள்ளோம். RIWM இன் இந்த முழுமையான திட்டங்களின் கீழ் அரசாங்க திட்டங்களில் குறைந்தது 10 சதவீத மாவது செய்வோம் என்றார். 2025 வாக்கில், 10,000 அணைகளை உருவாக்க, 10,000 நீர்நிலைகளை புதுப்பிக்க, 50,000 நகர்ப்புற RWH கட்டமைப்புகளை உருவாக்க RIWM திட்டமிட் டுள்ளது.

பெரிய அளவில், ரோட்டரி இந்தியா ரூ.25 கோடி செலவில் 250,000 கிராமங்களை தன்னிறைவு மிக்க சமூகங்களாக மாற்றும்




PDGs *ரமேஷ் அகர்வால், ரஞ்சன் திங்ரா,* RIPN *சேகர் மேத்தா,* PRID Y P *தாஸ், மத்திய ஜல் ஷக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெக்காவத்,* PRID P T *பிரபாகர்,* PRIP *கல்யாண் பானர்ஜி,* DG *ஹரீஷ் கவுர் மற்றும்* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி.*



*மாக்சஸே விருது பெற்ற ராஜேந்திர சிங் அவர்களை PRID பிரபாகர் கௌரவிக்கிறார். நூற்றாண்டு மாநாட்டின் செயலாளர் கிஷோர் குமார், PRID ஜாக்சன் சேய் மற்றும் RID ஃப்ரான்செஸ்கோ அரேஸோ ஆகியோரும் உடன் உள்ளனர்.*

திட்டங்களை வகுத்துள்ளதுடன், நாடு முழுவதும். ₹2.5 கோடி மதிப்பீட்டில் 50 கோடி நபர்களை சென்றடையும் பிரச்சாரங்களை மேற்கொள்ளும். 700 வருவாய் மாவட்டங்களில் ஆறு லட்சம் கிராமங்களை உள்ளடக்கிய ஸ்வச்ச பாரத் அபியானின் கீழ் துப்புரவு பாதுகாப்பு 2019 ஜூன் மாதத்தில் 39லிருந்து 99 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று RI துப்புரவுத் திட்டத்தின் தலைவர் PDG ரமேஷ் அகர்வால் தெரிவித்தார். யுனிசெஃப், வேர்ல்ட் விஷன், சுலப் இன்டர்நேஷனல் மற்றும் பிற நிறுவனங்களுடன் கூட்டணியை உருவாக்குவதோடு ரோட்டரி தன் இலக்குகளை அடைய மத்திய ஜல் சக்தி அமைச்சகத்துடன் நெருக்கமாக பணியாற்றுகிறது என்றார் .

வட இந்தியாவை விட பூமியில் எங்கும் நிலத்தடி நீர் சரிவு இல்லை என்று நாசா படங்கள் காட்டியுள்ளதாக மாக்சேசே விருது பெற்றவரும், நீர் பாதுகாப்பாளருமான ராஜேந்திர சிங் கூறினார். காலநிலை மாற்றத்தை மாற்றியமைப்பதில் உள்நாட்டு முறைகள் திறமையானவை என்றும், மீட்டெடுக்கப்பட்ட நீர்நிலைகளின் மேல் மைக்ரோ மேகங்கள் கூட உருவாகின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.



RI *நீர் மற்றும் சுகாதார மிஷனின் இலக்கு* 2025

- 1, 00,000 *பள்ளிகளில்* WinS
- 5,000 ODF-plus *கிராமங்கள்*
- *ஜல் ஜீவன் மிஷனின் கீழ் குழாய் நீர் இணைப்புகளைக் கொண்ட* 1,000 *கிராமங்கள்*
- *கிராமங்களில்* 500 *சமூக கழிப்பறைகள்*
- *பிரயாணிக்கும் மக்களால் பயன்படுத்த நகரங்களில்* 500 *பொது கழிப்பறை தொகுதிகள்*
- *மருத்துவமனைகளுக்கு* 500 WASH *திட்டங்கள்*

மத்திய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கூறுகையில், 89 சதவீத நீர்வளம் விவசாயத்திற்காக பயன்படுத்தப்படுகையில், மீதமுள்ள 11 சதவீதம் தொழில்துறை மற்றும் வீட்டு தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. பற்றாக்குறையை பூர்த்தி செய்ய நாம் தண்ணீரைப் பாதுகாத்து மறுசுழற்சி செய்ய வேண்டும்.

அமர்வுக்குத் தலைமை தாங்கி, பள்ளிகளின் இலக்கு சவால் குழுவில் WASH இன் உலக தலைவர், PRID P T பிரபாகர், WinS வெற்றிக் கதையைத் தொடர RIPN ஷேகர் மேத்தா, RIDகளான பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி ஆகியோருடன் கலந்தாலோசித்து ரோட்டரி இந்தியாவின் நீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தை (RIWSM) துவக்கி ஸ்வச்ச பாரத் மற்றும் ஜல் சக்தி மிஷன்களை ஆதரிக்கும் என்றார்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

Rotary India Centennial Summit 2020

# தாராள மனப்பான்மைக்குப் பாராட்டுகள்

ஜெய்ஸ்ரீ

கொல்கத்தாவில் நடைபெற்ற நூற்றாண்டுச் சந்திப்பின்போது, TRFன் மிகப்பெரிய தனிநபர் நன்கொடையாளர்களில் இருவர் அவர்களுடைய தாராள மனப்பான்மைக்காகப் பாராட்டப்பட்டார்கள்.

சமூக முன்னெடுப்புகள் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான ஆதித்ய பிர்லா அறக்கட்டளையின் தலைவரான ராஜஸ்ரீ பிர்லா, ரோட்டரி இந்தியாவின் ஒரு முக்கியப் பங்களிப்பாளராக இருந்து வந்துள்ளார்; சென்ற ஆண்டு ரோட்டரி அறக்கட்டளைக்கு ரூ.100 கோடியை வாரி வழங்கிப் பாராட்டுகளைப் பெற்ற RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸின் முன்னாள் தலைவர் ரவிசங்கர் டகோஜுவுக்கு அடுத்த படியாக, இந்த அறக்கட்டளைக்கு மிகுதியான நன்கொடை வழங்கியுள்ள இரண்டாவது மிகப்பெரிய தனிநபர் பங்களிப்பாளர் இவர்தான்.

TRFக்கான ராஜஸ்ரீயின் பங்களிப்பு $12 மில்லியனைக் கடந்துவிட்டது. RI தலைவர் மார்க் மலோனே மற்றும் RIPN சேகர் மேத்தா ஆகியோர் இவருக்கு ‘ஈகைத் தேவதை’ விருதை வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள்.

ரோட்டரியன்கள் எந்தப் பகுதியிலிருந்து வந்திருந்தாலும் சரி, அவர்கள் வாரி வழங்கும் குணத்துக்கும் அக்கறைக்கும் எடுத்துக்காட்டாக அமைகிறார்கள். பிர்லா குடும்பத்தின் DNAவிலும் இந்த அம்சம் பொதிந்துள்ளது என்று தன்னுடைய ஏற்புரையில் குறிப்பிட்டார் ராஜஸ்ரீ.

உண்மையில், அவர்களுடைய வாரி வழங்கும் குணம் 150 ஆண்டுகள் பின்னோக்கிச் செல்கிறது. அப்போது, என்னுடைய மாமனார் குடும்பத்து முன்னோர்களான ஷிவ் நாராயண் பிர்லா மற்றும் ராஜா பல்தேவ் தாஸ் பிர்லா ஆகியோர், நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தங்களைத் தாண்டிய ஓர் உயர்ந்த நோக்கம் வேண்டும் என்று உணர்ந்தார்கள். ஆகவே, அவர்கள் தங்களுடைய சொந்த வழியில் கல்விக்கூடங்கள் அமைப்பது, கோயில்கள், பசுக் காப்பகங்களைக் கட்டுவது போன்ற பணிகளை ஆதரித்தார்கள்.

இவருடைய மாமனாரின் தாத்தாவான GD பிர்லா, மகாத்மா காந்தியின் நம்பிக்கைக்குரிய அணுக்கத்தொண்டர். தன்னுடைய மகன் குமார் மங்களம் வழங்குதலை ‘இரக்க முதலீடு’ என்று அழைப்பதாக இவர் குறிப்பிட்டார். தன்னுடைய கணவர் ஆதித்ய பிர்லாவின் சொற்றொடரொன்றை நினைவு கூர்ந்தார்: ‘பிறருக்குத் தரும்போதுதான் நாம் பெறுகிறோம்.’

என்னுடைய அகராதியில் வழங்குவது என்றால், இருக்கிற அனைத்தையும் வழங்குவது: அன்பானாலும் சரி, உணர்வு ஆதரவானாலும் சரி, நேரமானாலும் சரி, நிதி உதவியானாலும் சரி, முழுமையாக, எந்த நிபந்தனைகளும் இல்லாமல், எல்லைகளைக் கடந்து வழங்குவது. மக்கள் மிகப் பொதுவாகப் பயன்படுத்தும் சொற்றொடர்களில் ஒன்று, இதயத்திலிருந்து செயல்படுதல். அக்கறை, இரக்கம் ஆகியவற்றுக்கான உணர்வு உவமை அது. கடமை, தியாகம், அர்ப்பணிப்பு, வழங்குதல்




*ஆதித்யா பிர்லா அறக்கட்டளை தலைவர் ராஜஸ்ரீ பிர்லா அவர்களுக்கு PRID அஷோக் மஹாஜன் விருது வழங்குகிறார். PDG சுபாஷ் ஜெயின், TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, PRIP ராஜேந்திர சாபூ, ராஷி, TRF அறங்காவலர் தலைவர்-தேர்வு KR ரவீந்திரன், RIPN மேத்தா, RIDs பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி ஆகியோரும் உள்ளனர்.*




*RI தலைவர் மார்க் மலோனி RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் D ரவிசங்கரை கௌரவிக்கிறார். PRIP கல்யாண் பானர்ஜீ, கேய், RIPN சேகர் மேத்தா, TRF அறங்காவலர் தலைவர் கேரி ஹிவாங், PDGs சுரேஷ் ஹரி, ஜான் டேனியல் மற்றும் DG தீபக் குப்தா ஆகியோரும் உடன் உள்ளனர்.*

போன்ற மிகச்சிறந்த குணங்களால், இதயமானது மனத்தையும் உடலையும் உருக்கிவிடுகிறது. ஆகவே, இன்னும் பெரிய இதயத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்; வழங்குதலில் இருக்கிற மகிழ்ச்சியை முழுமனத்துடன் அனுபவியுங்கள் என்று அவர் குறிப்பிட்டபோது, கூட்டத்தினர் எழுந்து நின்று பலமாகக் கைதட்டிப் பாராட்டினார்கள்.

நூற்றாண்டு காணும் ரோட்டரி இந்தியாவின் இணையற்ற உறுதித்தன்மை மற்றும் தன்னுடைய சேவைத்திட்டங்களுக்கான அர்ப்பணிப்பை ராஜஸ்ரீ பாராட்டினார்.




இளம்பிள்ளைவாதம், தலசீமியா, நீரிழிவு மற்றும் காசநோய் போன்ற நோய்களைக் கையாளுகிற, பலருடைய வாழ்க்கையை மாற்றக்கூடிய திட்டங்களை நிறைவேற்றுவதில் RI செய்துவரும் மிகச்சிறந்த பணியை நான் மிக அருகில் இருந்து கண்டுள்ளேன் என்றார் அவர்.

இஸ்லாமியச் சமூகத்தினரிடையே இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்துக்கு எதிராகப் பெரும் எதிர்ப்பு இருந்தபோது, ரோட்டரி உலேமா அவையை அமைத்து முஸ்லீம் சமூகத்தினரை இந்தத் திட்டத்துக்கு ஆதரவாக மாற்றியதில் முக்கியப் பங்கு வகித்த PRID அசோக் மகாஜன் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கினார்.

இந்தியாவில் இளம்பிள்ளை வாதத்தை அகற்றியதற்காக அரசு, ரோட்டரியன்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு மகாஜன் நன்றிதெரிவித்தார். 2.5 பில்லியன் செலவில், உலகெங்கும் 2 பில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு நாம் தடுப்பு மருந்து வழங்கியுள்ளோம், சுமார் 18 மில்லியன் குழந்தைகளை இளம்பிள்ளைவாதத்திலிருந்து காத்துள்ளோம் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன, இதை விடச் சிறந்த பரிசை நம்மால் இந்த உலகுக்கு வழங்கிவிட இயலுமா? என்றார் அவர்.

அறக்கட்டளைக்கு ரவிசங்கர் வழங்கிய மிகப்பெரிய பங்களிப்புக்காக அவர் பாராட்டப்பட்டார். ரவியின் பங்களிப்பு முக்கியமானது தான்; அதைவிட முக்கியமான விஷயம், அவர் TRFன் தூதராகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார், இந்தியாவிலும், நேபாளம், தைவான் மற்றும் பிரேசிலிலும் பல ரோட்டரியன்களை ஊக்குவித்துள்ளார், அறக்கட்டளைக்கு நிதியை வாரி வழங்கச் செய்துள்ளார் என்றார் நிகழ்வுத் தலைவர் மற்றும் TRF அறங்காவலரான குலாம் வாகன்வடி.

DG தீபக் குப்தா தில்லியில் பொறுப்பேற்றுக்கொண்டபோது, திடீரென்று ஒரு நன்கொடையாளர் AKS உறுப்பினராவதாக அறிவித்தார், TRFக்கு $100,000க்கான காசோலையை வழங்கினார் என்று அவர் நினைவுகூர்ந்தார். அவர் அப்படிச் செய்ததற்கு ஒரே காரணம், ரவிசங்கர் மற்றும் அவருடைய மனைவி பௌலா-வைப் பார்த்து அவர் ஊக்கம் பெற்றதுதான்.

100க்கும் மேற்பட்ட AKS உறுப்பினர்களைக் கொண்ட இந்தியா, உலக அளவில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் உள்ளது. நூற்றாண்டுச் சந்திப்பின்போது, AKS கூட்டமைப்பை உருவாக்குவதாக வஹன்வதி அறிவித்தார். இந்த அமைப்பு, வாரி வழங்குவோரின் இரக்கக்குணத்தை அங்கீகரிக்கும், அறக்கட்டளைக்கு வாரி வழங்கும்படி இன்னும் பலரை ஊக்குவிக்கும்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

Rotary India Centennial Summit 2020

# நூற்றாண்டு விழாவில் சில மணித்துளிகள்

ரஷீதா பகத்

**பல மதத்தினரும் பங்குபெற்ற ஒரு தூய்மையான வழிபாடு**

சிக்கலான பண்பாடு, மதங்கள் மற்றும் நம்பிக்கைகளைக் கொண்ட நாடு இந்தியா. சமீபத்திய நிகழ்வுகள் கொஞ்சம் கவலை தந்தாலும், இங்கு வேற்றுமையில் ஒற்றுமை மிகுதியாக உள்ளது. இவை அனைத்தும், கொல்கத்தாவில் ரோட்டரி இந்தியாவின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களின் தொடக்கத்தில், பல மதத்தினரும் பங்குபெற்ற வழிபாட்டின்போது அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்தியாவின் கூட்டு நம்பிக்கையை உருவாக்கும் அனைத்து மதங்களுக்கும் சிறு அறிமுகங்கள் வழங்கப்பட்டன. இந்த வரிசையில் சீக்கிய மதத்தைப்பற்றிப் பேசப்பட்டபோது, ஒரு சுவையான துணுக்கு நமக்குக் கிடைத்தது.

ஒருமுறை, இந்தி சினிமாவின் புகழ்பெற்ற பால்ராஜ் சாஹ்னி ரவீந்திரநாத் தாகூரிடம் இப்படிக் கேட்டாராம்: ‘நீங்கள் இந்தியாவுக்காக ஜன கன மன என்னும் மிகச்சிறந்த தேசிய கீதத்தை எழுதியுள்ளீர்கள். அதேபோல் ஒட்டுமொத்த உலகத்துக்காகவும் ஒரு கீதத்தை எழுதுங்களேன்.’

அதற்குத் தாகூர் இப்படிப் பதில் சொன்னாராம்: ‘அதற்கு அவசியமே இல்லை. 1506லேயே ‘ஆர்த்தி’ என்கிற மிகச்சிறந்த ஒற்றுமைக் கீதத்தை எழுதிவிட்டார் குரு கோவிந்த்.’

பூரி ஆலயத்தில் குரு நானக் வழிபட்டுக்கொண்டிருந்தபோது அவருக்குள் தோன்றிய பாடல்தான் இது. மிகச்சிறந்த படைப்பாளியாகிய இறைவருடைய புகழைப் பாடும் இந்தப் பாடலில், இறைவருடைய சிறப்பை மனிதர்களால் விவரிக்க முடியாது என்கிறார் குரு நானக். ‘ஆர்த்தி’யின் சுருக்கம், சில விளக்குகள், ஊதுபத்திகளை வைத்துக் கொண்டு இறைவருடைய சிறப்பைப் பாடிவிடமுடியாது; வானத்தையே பெரிய தட்டாக்கி, நட்சத்திரங்களை

*RI தலைவர் மார்க் மலோனி மற்றும் கேய்.*



விளக்காக்கி, காற்றைத் தெய்வீக விசிறியாக்கி, பூக்கள் நிறைந்த காடுகளை நறுமணப்பொருளாக்கிப் பாடவேண்டும்.

### வண்ணமயமான ஆடைகள், இசை, நடனம், இன்னும் பல!

RI தலைவர் மார்க் மலோனி மற்றும் கே; அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங் மற்றும் கொரின்னா, RIPN சேகர் மேத்தா மற்றும் ராஷி, இந்தியாவைச் சேர்ந்த, இப்போது பொறுப்பிலிருக்கும் இரண்டு RI இயக்குநர்கள், அவர்களுடைய துணைவர்கள், TRF அறங்காவலர், பிற நாடுகளைச் சேர்ந்த, இப்போது பொறுப்பிலிருக்கும் பல RI இயக்குநர்கள், அறங்காவலர்கள் அனைவரும் வண்ணமயமான தலையாடையை அணிந்துகொண்டு, துள்ளலான 'மர்ஹபா' (இதன் பொருள், நல்வரவு) என்ற பாடலின் சிறந்த மெட்டுகளுக்கேற்ப நடந்து வந்த போது, ஜோதா அக்பர் என்ற பாலிவுட் படத்துக்காக A R ரஹ்மான் இசையமைத்த அந்தப் புகழ்பெற்ற பாடலை ஒட்டுமொத்த மகிழ்ச்சி நகரமும் பிரதிபலிப்பதைப்போல் தோன்றியது.

தலைவர்கள் மெதுவாக நட்பு இல்லத்தை நோக்கி நடந்தார்கள்; அப்போது அது 'ஹிந்துஸ்தான் மேரி ஜான்'ஐப் பிரதிபலித்தது. பரந்து விரிந்த நட்பு இல்லம் தொடங்கிவைக்கப் பட்டது; அங்கு 100க்கும் மேற்பட்ட வண்ணமயமான கடைகள் அமைக்கப்பட்டிருந்தன, இப்போது, ரஹ்மானின் இன்னொரு புகழ்பெற்ற பாடலான 'ஜெய் ஹோ' ஒலித்தது. ஜூலியா ஃபெல்ப்ஸ், ஸ்டிஃபானி அர்ச்சிக் உள்ளிட்ட RIயின் பல வெளிநாட்டு இயக்குநர்கள் இந்தப் பாடலுக்கு வழக்கமான பாலிவுட் அசைவுகளுடன் நடனமாடினார்கள், வெளிநாட்டு விருந்தினர்களுக்கு இதைத் திறமையுடன் ஆடிக் காட்டியவர், PDG பிங்கி படேல்.

அனுபவமிக்க இந்தியராகவே மாறிவிட்ட கே மலோனி நளினத்துடனும் இயல்பாகவும் சேலை அணிந்திருந்தார். இந்தச் சிறப்பான பேரணி நட்பு இல்லத்தை நோக்கி நடந்தபோது, அங்கு VIPக் களை வரவேற்கக் காத்திருந்த



PDGs *ஜமீன் ஹுசைன் மற்றும் ஷாஹுல் ஹமீத்.*

நடனக்கலைஞர்களுடன் இணைந்து கொண்டார் இந்தக் கலகலப்பான பெண்மணி. தலைவர் மலோனியும் அவருடன் இணைந்துகொண்டார். வண்ணமயமான ஆடை, பாலிவுட் நடனம் என ரோட்டரியின் முதல் இணையாகிய அவர்கள் இருவருக்கும் இது நினைவில் நிற்கிற காதலர் தினமாக அமைந்தது! இதைவிடச் சிறந்த காதல் வேறேது!

### சுஷீல் குப்தாவைச் சந்தித்த RI தலைவர்

கொல்கத்தா நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் எல்லாரும் காண விரும்பிய ஒருவர், PRID சுஷீல் குப்தா. உடல்நலப் பிரச்னையால்



PRID *சுஷீல் குப்தா*

ஓய்வில் இருக்கும் அவரைப்பற்றி தலைவர் மலோனி தன்னுடைய தொடக்க உரையில் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

இன்று இந்த விழாவில் கலந்துகொள்ள அவர் மிகவும் விரும்பியிருப்பார்.

2018ல் அவர் RIPNஆகப் பொறுப்பேற்றுக்கொண்டபோது சுஷீல் குப்தாவும் வினிதாவும் எவான்ஸ்டனில் இருக்கும் RI தலைமையகத்துக்கு வந்தார்கள், அப்போது, அவர்களை வரவேற்கும் வாய்ப்பு கே-க்கும் தனக்கும் கிடைத்ததாக அவர் நினைவுகூர்ந்தார். ஆனால், உடல் நலப்பிரச்னை காரணமாக அவரால் அந்தப் பொறுப்பைத் தொடர இயலவில்லை.''

தானும் தன்னுடைய மனைவியும் தில்லியில் சுஷீல் மற்றும் வினிதாவை அவர்களுடைய வீட்டில் சந்தித்து, ரோட்டரி மற்றும் வாழ்க்கையைப்பற்றி அவர்களுடன் பேசினோம் என்றார் அவர். சுஷீல் இன்னும் ரோட்டரிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுதான் இருக்கிறார். அவரால் குரலெடுத்துப் பேச இயலாவிட்டாலும், ரோட்டரி செய்யும் அதிசயச் செயல்களைப்பற்றியும், இந்தியாவில் ரோட்டரியின் வெற்றியைப்பற்றியும் நாங்கள் பேசினோம். இந்த அருமையான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்ததை எண்ணி நாங்கள் மகிழ்கிறோம்; கொல்கத்தாவில் ஒன்றுகூடியிருக்கும் அனைத்து ரோட்டரியன்களுக்கும் அவர் தன்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்'', என்றார். ■

# தன்னலம் கருதாத சேவகர்களை ரோட்டரி வாழ்த்துகிறது

V முத்துகுமரன்




PRIP *கல்யாண் பானர்ஜி ப்ரீகு போர்த்தாக்கூர் அவர்களுக்கு விருது வழங்குகிறார்.*
RID *கமல் சங்வி,* PDG *சுபாஷ் ஜெயின் மற்றும்* RI *தலைவர் மலோனி ஆகியோரும் உள்ளனர்.*

கொல்கத்தாவில் ரோட்டரி நூற்றாண்டு உச்சி மாநாட்டில் சேவையாற்றிய நான்கு ரோட்டேரியன்கள் அல்லாதவர்களை ரோட்டரி பாராட்டியது. விருது பெற்றவர்கள் ஒரு ஆன்-லைன் வாக்கெடுப்பின் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். “பல்வேறு மொழிகளைப் பேசினாலும் அன்பின் மொழி ரோட்டரியின் 1.2 மில்லியன் உறுப்பினர்களை இணைக்கிறது. இந்த பரிசு சேவை செய்தவர்களை அங்கீகரிப்பதோடு மற்றவர்களையும் சேவை செய்ய உற்சாகமூட்டும் என்றார் RI டைரக்டராக நாமினேட் செய்யப்பட்டுள்ள A S வெங்கடேஷ்.

ரோட்டரியன்கள் அல்லாதவர் களுக்கு சுகாதாரம், அடிப்படை கல்வி, குடிநீர் போன்ற துறைகளில் சேவை செய்ததற்கான விருதுகள் வழங்கப்பட்டதாக RIHH விருதுகள் தலைவர் PDG பால் கிருஷ்ணா இனாம்தார் கூறினார். பிப்ரவரி 6ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆன்லைன் வாக்களிப்பின் பின்னர் ஏழு பேர் கொண்ட நடுவர் குழு இறுதி பட்டியலிடப்பட்ட 15 ஆர்வலர்களை மதிப்பீடு செய்தது.

டெலோயிட் இந்தியாவின் முன்னாள் தலைவர் BR ரமேஷ், விருதுகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுருக்களை விளக்கினார். அதாவது புவியியல் ரீதியாக கடினமான இடங்களில் பணியாற்றுவது, பணச்சிக்கலை சமாளிப்பது உட்பட பல்வேறு சிக்கல்களை சிறப்பாக எதிர்கொண்டார்களா என்பது பார்க்கப்படுகிறது என்றார்.





Dr *ஷாலினி சக்சேனா (இடதிலிருந்து இரண்டாவது) விருது பெறுகிறார்.*

அதிகம் புகழப்படாத சேவகர்களை அவர்கள் சேவைக்காக விருதளிப்பது மற்றவர்களையும் சேவை செய்ய தூண்டும் என்று மற்றொரு ஜூரி உறுப்பினரும் இந்தியாவின் கூடுதல் சோலிசிட்டர் ஜெனரலுமான சஞ்ஜய் ஜெயின் கூறினார். வெற்றியாளர்கள் மற்றும் அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகள் இதோ:

**பிரிகு போர்த்தாகூர்:** கல்வியறிவில் பணியாற்றியதற்காக இந்த விருதை வென்றார். அசாமில் விரிவான வெள்ள நிவாரண பணியாற்றியதோடு பொறியியல் மாணவரான அவர், குத்ரத் எண்ணும் கிராமத்தில் சிறுவர்களுக்கு முறைசாரா பயிற்சி வகுப்புகளை நடத்தினார். இப்போது 13 பள்ளிகளை ஒடுக்கப்பட்ட குடும்பங்களின் நலனுக்காக நடத்தி வருகிறார். அடிமட்டத்து மக்கள் நான் செய்யும் பணிகளுக்கு ரோட்டரி விருதைப் பெறுவது ஒரு மரியாதை. ஊனமுற்றோரை ஆற்றலுடையவர்களாக்க தேவையான சிறப்பு முயற்சிகளை ரோட்டரி செய்கிறது, என்று அவர் தன் ஏற்புரையில் கூறினார்.

**அதிக் கதம்:** முன்னாள் ரோட்டராக்டரான அவர் ஜம்மு கஷ்மீரின் பல பகுதிகளில் தவறாக வழிநடத்தப்பட்ட இளைஞர்களை நேர்வழிக்கு கொண்டு வரும் முயற்சி செய்து அதற்காக 19 முறை தீவிரவாதிகளால் தாக்கப் பட்டிருக்கிறார். பார்டர்லெஸ் வோர்ல்டு ஃபௌண்டேஷன் மூலம் நாட்டுக்கெதிராக மூளைச்சலவை செய்ய கடத்தப்பட்ட 750 காஷ்மீரிப் பெண்களுடன் 25 உள்ளூர் காரர்களையும் மீட்டிருக்கிறார்.

23 ஆண்டுகளாக காஷ்மீரில் வசித்து வருகிறேன். தீவிரவாதத்தின் பாதிப்பிலிருந்து இங்குள்ள பெண்களை காப்பாற்ற இங்கேயே தங்கிவிட்டேன். இந்த சமூகத்தில் அமைதியை நிலவ ரோட்டரி உதவ வேண்டும், என்றார்.



*அதிக் கதம் அவர்களுக்கு TRF அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங், அறங்காவலர் தலைவர்-தேர்வு K R ரவீந்திரன் மற்றும் PDG ப்ரியேஷ் பன்டாரி ஆகியோர் இணைந்து காசோலை வழங்குகின்றனர். PDG பாலகிருஷ்ண இனாம்தார், ராஜ்ய சபா MP மொஹமது-உள்-ஹக், மேற்கு வங்க அமைச்சர் அமித்மித்ரா, முன்னாள் RI துணைத் தலைவர் H டீன் ரோர்ஸ் மற்றும் RID பரத் பாண்டியா ஆகியோரும் உடன் உள்ளனர்.*

**ஸ்வப்னில் கவாண்டே:** 8 வயதில் தன் நண்பன் பார்வை இழந்ததை கண்ட அதிர்ச்சியில் இம்மாதிரி பார்வை இழப்பிற்கு எதிரான விழிப்புணர்வில் இறங்கினார். NGO தீஷா மூலம் 15 ஆண்டுகளாக மும்பையில் பல்வேறு கண் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கிறார். பொறியியல் மற்றும் MBA பட்டதாரியான இவர் தீஷா நேத்ராலயா கண் ஆராய்ச்சி மையத்தை துவக்கினார். தங்கள் சொந்தத்தை இழந்த துக்கத்திலும் கண்களை தானமாக வழங்கியவர்களுக்கு இந்த ரோட்டரி விருதை காணிக்கையாக்குவதாக அவர் கூறினார். தீஷா, கண் வங்கிகள் மற்றும் பள்ளிகள் குழுவை நடத்துகிறது. உறுப்பு தானம் செய்வதன் அவசியத்தை பரப்புபவர் கவாண்டே.

**டாக்டர் ஷாலினி சக்சேனா:** சமூகத்தில் வளர்ச்சி அதிகாரியாக, போபால் விஷ வாயூ கசிவினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக உழைத்திருக்கிறார். தன்னுடைய பிரியான்ஷி கல்வி மற்றும் கலாச்சார சொசைட்டி மூலம் 10 ஆண்டுகளாக சானிட்டரி பாட்களை தயார் செய்து அதை பெண்கள் மூலமே விற்கிறார். இப்போது அவர் சத்தீஸ்கர் ராஜஸ்தான் மற்றும் அருணாச்சல பிரதேச பழங்குடியினரிடையே மாதவிடாய் சுகாதாரம் பற்றி பயிற்சி அளிக்கிறார். ஒவ்வொரு விருது பெற்றவருக்கும் ஒரு சான்றிதழோடு ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

Rotary India Centennial Summit 2020



ரஷீதா பகத்

RID *கமல் சங்வி, கேய், RI தலைவர் மார்க் மலோனி,*
TRF *அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங் மற்றும் RIPN சேகர் மேத்தா.*

# நட்பை மேம்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பு

ரஷீதா பகத்

தொடக்க நாளன்று, பல மதத்தினரும் பங்குபெற்ற வழிபாடொன்று சிறப்பாக நடை பெற்றது. அதைத் தொடர்ந்து, ஒரு பிரமாண்டமான ஊர்வலம் தொடங்கியது. அதன்பிறகு, PDG ராஜா ஸ்ரீனிவாசன் தலைமை தாங்கிய நட்பு இல்லத்தை (HoF) RI தலைவர் மார்க் மலோனி திறந்து வைத்தார். வண்ணமயமான இந்த விழாவில் இசையும் நடனமும் பிரமாதமாக இருந்தன, மூத்த இந்திய மற்றும் பன்னாட்டுத் தலைவர்கள் அனைவரும் வண்ணமயமான இந்தியப் பண்பாட்டு ஆடைகளில் தோன்றினார்கள்.

HoFல் 110க்கும் மேற்பட்ட கடைகள் இருந்தன, பிஸ்வ பாங்க்ளா மாநாட்டு மையத்துக்குள் ஒரு பரந்து விரிந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த வண்ணமயமான HoFல், மூத்த RI மற்றும் இந்தியத் தலைவர்களுடைய ஆளுயரக் கட்-அவுட்கள் ஒளிமயமாக நிறைந்திருந்தன, மூன்று நாட்களும் இங்கு ஏகப்பட்ட செயல்பாடுகள், பரபரப்பு.

ஹௌராப் பாலம், விக்டோரியா நினைவகம் போன்ற கொல்கத்தாவின் புகழ்பெற்ற இடங்களுடைய புகைப் படங்களைக் கொண்ட இந்த இடம், படமெடுக்க விரும்பும் இந்திய ரோட்டரியன்களுடைய செல்ஃபி, குழுப் புகைப்பட ஆர்வத்துக்குத் தீனிபோட்டது.

இங்கிருந்த உணவுக் கடைகளில், கொல்கத்தாவின் புகழ்பெற்ற புச்காஸ் (பானி பூரி), மற்ற சாட் வகைகளில் தொடங்கி, தென்னிந்திய உணவு வகைகளான தோசை, இந்நகரின் புகழ்பெற்ற, சப்புக்கொட்டவைக்கும் தெருவோர உணவுகள்வரை சுவையான பல தின்பண்டங்கள் கட்டுப்படியாகும் விலைகளில் கிடைத்தன: விரும்பி வாங்கினார்கள்.

விழா ஏற்பாட்டாளர்கள் செய்திருந்த ஒரு நல்ல விஷயம், சிறிய தண்ணீர்ப் பாட்டில்கள் எல்லாருக்கும் இலவசமாக வழங்கப்பட்டன. இதனால், மதிப்பு மிக்க நீர் வீணாகவில்லை. சர்வர்கள் பெரிய வட்டத் தட்டுகளில் தண்ணீர்ப் பாட்டில்களை அங்குமிங்கும் கொண்டு சென்றார்கள், பயன்படுத்திய தண்ணீர்ப் பாட்டில்களை அகற்றினார்கள். இதுபோன்ற சேவை உலகில் வேறு எங்கு கிடைக்கும்! இந்தச் சிறப்பான ஏற்பாட்டைச் செய்தவருக்கு முழு மதிப்பெண் தரலாம்.■

PDG V *ராஜா சீனிவாசன்,* RIDE *வலேரி வாஃபர், மாநாட்டுத் தலைவர் வினோத் பன்சல்,*
RID *ஃப்ரான்சஸ்கோ அரெஸோ மற்றும் இதர ரோட்டரியினர்.*




V முத்துகுமரன்

# ரோட்டரியின் கூட்டுப்பணிக்கு நன்றி தெரிவிக்கும் அமைச்சர் ஹர்ஷ் வர்தன்

ஜெய்ஸ்ரீ



RID *கமல் சங்வி,* PDG *நான்சி பார்பீ,* RID *பரத் பாண்டியா,* RIPN *சேகர் மேத்தா, மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ வர்தன்,* Rtn *சூ பாஜெண்ட்,* RIDE *வலேரி வாஃபர் ஆகியோர் போலியோவால் பாதிக்கப்பட்டக் குழந்தைகளுடன்.*

கொல்கத்தா நூற்றாண்டுச் சந்திப்பின் போது, மத்திய நல அமைச்சர் ஹர்ஷ் வர்தன் ரோட்டரியின் நலப்பராமரிப்புத் திட்டங்களைப் பாராட்டினார், PMன் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் ரோட்டரி பங்கேற்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இத்திட்டத்தின் நோக்கங்கள், 85 கோடி ஏழை மக்களுக்குத் தரமான சிகிச்சையை வழங்குவது, புற்றுநோய், நீரிழிவு, பிற வாழ்க்கைமுறைக் குறைபாடு களுக்கான வடிகட்டல் முகாம்களைத் தொடர்ச்சியாக நடத்தி, இன்னும் மேம்பட்ட நலப்பராமரிப்பை உறுதிப்படுத்துவது.

ரோட்டரி இதில் முன்னணியில் நிற்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். நீங்கள் இதைச் செய்தால், மற்ற அமைப்புகள் பின்னாலேயே வருவார்கள். நாம் ஒன்றாகச் செயல்பட்டால், அனைவருக்கும் நலன் திட்டத்தின் ஒரு வெற்றிகரமான மாதிரியை ஒட்டுமொத்த உலகுக்கும் காட்டலாம் என்றார் அவர்.

PRID சுதர்ஷன் அகர்வாலுடனான தன்னுடைய பழக்கத்தை நினைவுகூர்ந்த அவர், உலகெங்கும், குறிப்பாக இந்தியாவில் இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதில் ரோட்டரி ஆற்றிய முன்னோடிப் பங்கைப் பாராட்டினார். 1994ல் நாம் முதல் பல்ஸ்போலியோ பரப்புரையைத் தொடங்கியபோது, RID 3010ன் ரோட்டரியன்கள் அனைவரும் வழங்கிய உண்மையான, முழுமனத்துடனான, அர்ப்பணிப்புள்ள பங்களிப்பை நினைவுகூர்வதற்கு நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.''

இந்தப் பரப்புரையைச் செயல் படுத்துவதற்கான தன்னுடைய திட்டத்தைப்பற்றி அவர் பேசு கையில், (அப்போதைய PM) ராஜீவ் காந்தி நம்மிடம் பட்ஜெட் உள்ளதா என்று கவலைப்பட்டார். அப்போது, RI உதவிக்கு வந்தது, தில்லிமுழுவதும் இந்தப் பரப்புரையை முன்னிறுத்துவதற்கு மிகவும் உதவியது என்றார்.

ரோட்டரியன்கள் செய்கிற மிகச்சிறந்த பணிக்காக அமைச்சர் அவர்களைப் பாராட்டினார், அறுவைச்சிகிச்சைகளானாலும் சரி, டயாலிசிஸ் என்றாலும் சரி, இன்னும் பல விஷயங்களானாலும் சரி. உங்கள் வீடியோப் படத்தில் பல வெற்றிக்கதைகள் காட்டப்பட்டன, ஆனால், அவை ஒரு மிகப்பெரிய பனிப்பாறையின் நுனிமட்டும்தான் என்பதை நான் உறுதியாகச் சொல்வேன்.

தட்டம்மை, ருபெல்லா மற்றும் பிற தடுக்கக்கூடிய நோய்களை இந்தியாவிலிருந்து அகற்று வதற்கான 'மிஷன் இந்திரதனுஷ்' திட்டத்தின்வழியாகப் பொதுத் தடுப்பு மருந்தின் வீச்சை நீட்டிப்பதில் GoI உடன் ரோட்டரி இணைந்து பணியாற்றுவதை அவர் பாராட்டினார்.

முந்தைய நிகழ்ச்சியின் தலைவரான RID பரத் பான்ட்யா, தான் உருவாக்கிய 'நேர்வித நலன் திட்ட'த்தைப்பற்றிப் பார்வையாளர் களுக்குச் சுருக்கமாகத் தெரிவித்தார். நான்கு முக்கியமான நாள்பட்ட நோய்களிலிருந்து மக்களைக் காக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் அடிக்கோடிட்டுக்காட்டினார்: நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், மற்றும் இதய நோய், சிறுநீரக நோய் மற்றும் பக்கவாதம். இந்த நவீன உலகில் நாம் இலக்குகளைத் தேடுகிறோம்; அதே நேரத்தில் நம் உடல்நலனைக் கவனித்துக்கொள்வதற்காகவும் நேரம், சிந்தனையை அதே அளவு செலவிடவேண்டும் என்றார் அவர்.■

# RC கொல்கத்தா நூற்றாண்டு கிளப்புகளின் வட்டத்திற்கு MoAஐ கையெழுத்திடுகிறது

V முத்துக்குமரன்

உலகெங்கிலிருந்து 100 ஆண்டுகளுக்கு மேலான ரோட்டரி கிளப்புகளை இணைக்க RC கொல்கத்தா RID 3291 ஒரு ஒப்பந்தத்தில் (MoA) ஈடுபட்டது. கிளப் பிரிசிடெண்டுகள் RC கொல்கத்தாவின் பூர்னேந்து ராய் சௌத்ரி மற்றும் RC மனிலாவின் ஜேக்கி ராட்ரிக்ஸ் இந்த ஒப்பந்தத்தில், RI பிரிசிடெண்ட் மார்க் மலோனி, RIPN ஷேகர் மேத்தா மற்றும் மனிலாவிலிருந்து சர்வதேச கமிட்டி சேர்மன் நிக் லாக்ஸின் முன்னிலையில் கையெழுத்திட்டனர். சங்கங்களிடையே நல்லுணர்வு உண்டாக்கும் விதமாக RC ஷாங்காயும் இந்த நூற்றாண்டு ரோட்டரி கிளப்கள் வட்டத்தில் இணைக்கப்படும் என்று DG அஜய் அகர்வால் கூறினார்.

கொல்கத்தாவில் நடந்த ரோட்டரி இந்தியா நூற்றாண்டு உச்சிமாநாட்டு (RICS) கூட்டத்தில் 32 நாடுகளின் 4,200 ரோட்டேரியர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அகர்வால், RC கொல்கத்தாவின் ஆரம்ப ஆண்டுகளை நினைவு கூர்ந்தார்.

‘‘நூற்றாண்டு என்பது நம் அனைவருக்கும் பல விஷயங்களைக் குறித்தாலும்  முக்கியமாக, புதிய பார்வை, இலக்கோடு ரோட்டரி இன்னும் அதிகமாக சேவை செய்வதற்கான ஒரு உறுதியையும் குறிக்கிறது’’, என்று கூறினார்.

RIPN ஷேகர் மேத்தாவின் ஆதரவோடு RC கொல்கத்தா $3 மில்லியனில் (ரூ.20 கோடி) பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. ‘இதுவரை, 1,000 கழிப்பறைகள், 200 துளை கிணறுகள் கட்டியுள்ளோம், மேலும் 20 கிராமங்களை திறந்த வெளி கழிப்பறைகளாக இல்லாமல் செய்துள்ளோம். 250 குழந்தைகளுக்காக புருலியாவில் ஒரு இலவச குடியிருப்புப் பள்ளியை கட்டியுள்ளோம், அதே நேரத்தில் ஹவுரா மற்றும் பார்மாங்வாவில் உள்ள 200 மாணவர்களுக்கு தலா இரண்டு பள்ளிகள் தயாரிக்கப்படுகின்றன, என்றார் நூற்றாண்டு குழுத் தலைவர் சௌமன் ரே. 1,000 இதய அறுவை சிகிச்சைகள் தவிர, 100,000 குழந்தைகளுக்கு ஹவுராவில் நோய் எதிர்ப்பு சக்தி அளிக்கப்பட்டது.

இந்தியாவில் 100 ஆண்டு ரோட்டரியைக் குறிக்கும் வகையில் RC கொல்கத்தா சென்டீனியல் உட்பட இருபத்தி ஒன்பது ரோட்டரி கிளப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. எங்கள் மாவட்டத்தில் 100 ரோட்டரியர்கள், 100 ரோட்டராக்டர்கள் மற்றும் 300 இன்டராக்டர்களை சேர்க்கும் இலக்கை அடைய உறுதியாக இருக்கிறோம், என்றார் ரே. இந்த ரோட்டரி ஆண்டில் 38 புதிய உறுப்பினர்களை சேர்க்க RC கொல்கத்தா இலக்கு வைத்துள்ளது. மேலும் இச்சங்கம் 10 புதிய உலகளாவிய கூட்டாளர் கிளப்புகளைச் சேர்த்ததோடு ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு சேவை செய்வதற்காக இரண்டு அரசு மருத்துவ மனைகளில் ரோட்டரி வார்டுகளைத் திறந்துள்ளது.

$2 மில்லியன் அளவிலான மானியத் திட்டத்தில் 100 கிராமங்களில் கழிப்பறை, 100 பள்ளிகளை ஹாப்பி ஸ்கூல்களாகவும் மாற்றும் பெரும் திட்டத்திற்கான பணி துவங்கியுள்ளது, என்றார் ரே.

இப்போது வரை, நூற்றாண்டு திட்டங்கள் கொல்கத்தா மற்றும் அதனைச் சுற்றியுள்ள 1.2 லட்சம் பயனாளிகளை எட்டியுள்ளன. ‘‘நூற்றாண்டு கிளப்புகளின் வட்டத்திற்கான MoAவுடன், உலகெங்கிலும் இதுபோன்ற கிளப்புகளுடன் எங்கள் நட்பு மற்றும் நெட்வொர்க்கை விரிவு படுத்துகிறோம்,’’ என்று அவர் கூறினார். PDG ரஜனி முகர்ஜி நன்றி கூறினார்.

*RC மனிலா தலைவர் ஜாக்கி ரோட்ரிகே மற்றும் RC கொல்கத்தா தலைவர் பூர்னேந்து ராய் சவுத்ரி ஒப்பந்த கையெழுத்திடுகின்றனர். PDG ரஜனி முக்கர்ஜி, RIPN சேகர் மேத்தா, RI தலைவர் மார்க் மலோனி, DG அஜய் அகர்வால் ஆகியோரும் உடன் உள்ளனர்.*




புகைப்படம்: ஜெய்ஸ்ரீ



# நம் சேவையை மேலும் மேம்படுத்துவோம்

நி ஹாவ், ரோட்டரியன்களே!

கன்பூஷியஸின் கருத்துக்கள் நம் கருத்துக்களை ஒத்திருப்பதால் பல ரோட்டரி நிகழ்வுகளில் அவரை மேற்கோள் காட்டியிருக்கிறேன். கன்பூஷியஸின் மேற்கோள் இதோ : நல்ல பழக்கத்தை வளர்த்துக்கொள்ளாதது, என் கல்வியை அலசிப் பார்க்காதது சரியான பாதை என்று தெரிந்த பின்னும் அதில் செல்லாதது என் தவறை திருத்திக் கொள்ள இயலாதது என்னுடைய வருத்தத்திற்கான காரணங்கள்.''

இதை அப்படியே நேர்மறையாக்கினால் அதுவே ரோட்டரி ஆக்ஷன் பிளானின் முதல் குறிக்கோளாகும். ரோட்டரியின் தாக்கம் என்பது, உறவுகளில் முதலீடு செய்வது, ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட முடிவுகளை எடுப்பது, நீடிக்கும் தீர்வுகளை உருவாக்க நம் வளங்களை அணிதிரட்டுவது, எப்போதும் நம் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வது என்று பொருள். நன்றாக ஆராய்ந்த பின்னரே நாம் அவற்றை ஒப்புக்கொள்வதோடு மதிப்பீட்டின் போது கண்டுபிடிக்கப்படாத தகவல்களுக்கு ஏற்ப திட்டங்கள் வடிவமைக்கப்படுவதால் நம் உலகளாவிய மானியங்கள் உண்மையான சமூக தேவைகளை தீர்க்கின்றன.

நம் அறக்கட்டளை மானிய திட்டங்களின் மூலம் முன்னெப் போதையும் விட அதிக வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. சமூகத்தின் தேவை அடையாளம் காணப்பட்டு அவைகளுக்காக செலவு செய்யப்படுவதோடு பெருமளவிலான மக்கள் மத்தியில் நிரந்தர தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயலாற்றப்படுகின்றன. ஒவ்வொரு மானியமும் செயல்படும் போது மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை, ரோட்டரியின் ஆதரவு அளிக்கும்.

போலியோவை ஒழிப்பதில் நமது அனுபவத்தை பயன்படுத்தி முழுவதுமாக அந்த நோயை ஒழிக்க உழைக்க வேண்டும். பாகிஸ்தானுக்குச் சென்றபோது, எண்ட் போலியோ நௌக்காக பல இளம் ரோட்டரியர்கள் கடுமையாக உழைப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன்.

நம் உலகளாவிய மானியங்களுடன் அற்புதமான விஷயங்கள் நடக்கின்றன, மேலும் ரோட்டரி செயல் திட்டம் முன்னெப்போதையும் விட அதிகமாக செய்ய உதவும். தொடர்ந்து நல்லொழுக்கத்தை வளர்த்துக் கொள்வோம், நாம் கற்றுக்கொள்வதை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்வோம், தர்மத்தின் பாதையில் சென்று, நாம் செய்யும் அனைத்தையும் மேம்படுத்துவோம்.

**கேரி C K ஹுவாங்**
TRF அறங்காவலர் தலைவர்



# இனிமையான பயணம்

ஹாங்க் சார்டின்



அன்னாசிப்பழத்திற்கு புகழ் பெற்ற ஹவாய் தீவில் கடந்த 2007 ஆம் ஆண்டு அந்த நிலங்களை மற்ற பயிர்கள் வளர்க்கக கொடுக்கப்பட்ட பிறகும் 6-10 ஜூன் வரை ஹோனலுலூவில் நடைபெறும் மாநாட்டிற்கு வரும் ரோட்டரியினர் அன்னாசியை ருசிக்கலாம்.

அன்னாசி எக்ஸ்பிரஸ் ரயில் பயணம் உட்பட பல சுற்றுப்பயணங்களை வழங்கும் டோல் பிளேன்டேஷன் டூரானது பழத்தின் வரலாறு மற்றும் தாவரவியலை ஆராய்கிறது. ஹவாயில் அன்னாசித் தொழிலின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தஜேம்ஸ் டோலின் கதையையும் இந்த சுற்றுப்பயணம் கூறுகிறது.

பிளேன்டேஷன் கார்டன் சுற்றுப்பயணத்தில், காபி, கொக்கோ மற்றும் 'லீஸை' உருவாக்க பொதுவாக பயன்படுத்தப்படும் சில பூக்கள் எவ்வாறு வளர்க்கப்படுகின்றன என்பதை காணலாம். மாநாட்டிற்கு வந்திருக்கும் உங்கள் குழந்தைகள் 3 ஏக்கரில் 2 1/2 மைல் பாதைகள் கொண்ட அன்னாசி தோட்டத்தை ரசிப்பார்கள். அன்னாசி மணம் கொண்ட 'டோல்விப்பை' பருக மறந்து விடாதீர்கள்.

HONOLULU HAWAII 2020

**ஹோனலூலுவில் 2020 ரோட்டரி மாநாட்டின் நுழைவுக்கட்டணத்தை சேமிக்க, 31 மார்ச்சுக்குள் riconvention.orgல் பதிவுசெய்யுங்கள்.**

©The Rotarian

Rotary India Centennial Summit 2020

# கொல்கத்தாவில் ரோட்டரி நூற்றாண்டு விழா



கொரின்னா ஹுவாங், RIPN சேகர் மேத்தா, ராஷி மற்றும் சோனல் சங்வி.

கீழே: ராஷி, சோனல், PRIP கல்யாண் பானர்ஜீ மற்றும் RIPN மேத்தா.







மாநாட்டில் ஒரு கலைநிகழ்ச்சி.



RIDN A S வெங்கடேஷ் மற்றும் வினிதா.





மேலே: RID கமல் சங்வி மற்றும் சோனல்.

இடது: PRIP ராஜேந்திர சாபூ, மாதவி மற்றும் பரத் பாண்ட்யா.





நூற்றாண்டு மாநாட்டின் தலைவர் வினோத் பன்சல், ச்சார்லட் மற்றும் PRID மிக்கேல் ஆல்பர்க்.



கேய், RI தலைவர் மலோனி மற்றும் DG தீரன் தத்தா.

**மேலே:** DG S ஷேக் சலீம், PRID C பாஸ்கர் மற்றும் அவர் மனைவி மாலா.

**கீழே:** TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் அறங்காவலர்-தேர்வு K R ரவீந்திரன்.









RI தலைவர் மலோனி, கேய் மற்றும் PRIP ராஜேந்திர சாபூ.



RID கமல் சங்வி, சோனல், ஷர்மிஷ்டா மற்றும் PRID மனோஜ் தேசாய்.



PDG ஹித்தேஷ் ஜரிவாலா, அவர் மனைவி பீஷ்மா மற்றும் TRF அறங்காவலர் ஜூலியா ஃப்பெல்ப்ஸ்.



INPPC தலைவர் தீபக் கபூர், PRID அஷோக் மஹாஜன் மற்றும் ஆதித்யா பிர்லா அறக்கட்டளைத் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா.





மேலே: PDG ஆஸிஸ் மேமன், TRF அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ், PRID P T பிரபாகர் மற்றும் அவர் மனைவி நளினி.

மேல் இடது: PRIP கல்யாண் பானர்ஜீ, பினோதா மற்றும் RID கமல் சங்வி.



TRF அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங் அவர் மனைவி கொரின்னாவுடன்.



RI தலைவர் மலோனி மற்றும் அவர் மனைவி கேய்.



இடதிலிருந்து: PDG பிங்கி பட்டேலுடன் RID ஜோரிட்டா சொலாரி, DGN அருணா கௌஷிக், அறங்காவலர் ஜூலியா ஃபெல்ப்ஸ், அறங்காவலர்-தேர்வு கீதா மனேக், RIDN விக்கி புல்லிட்ஸ், முன்னாள் RI துணைத் தலைவர் ஏ டீன் ரோர்ஸ் மற்றும் கிம் பெர்லிஸ்டோவால்.






**வலது:** PRID Y P *தாஸ் அவர் மனைவி மஞ்சுவுடன்.*

**கீழே:** PRID *பாண்டுரங்க செட்டி மற்றும்*
PDG *நயன் பட்டேல்.*




PDG *சஞ்சய் கேம்கா, மாதவி*
*மற்றும்* RID *பரத் பாண்ட்யா.*





புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் ஜெய்ஸ்ரீ
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# RIPE ஹோல்கர் நாக் அவர்களுடன் ஒரு சந்திப்பு

*'ஒன் ரோட்டரி' மையத்தில், தி ரோட்டரியன் இதழின் தலைமை ஆசிரியர் ஜான் ரஜாக், அவ்விதழின் மேலாண்மை ஆசிரியர் ஜென்னி ல்லக்மானி ஆகியோருடன் பேசினார் நாக். இரண்டு கட்டங்களாக இரண்டு மணிநேரத்துக்குமேல் எடுக்கப்பட்ட விரிவான பேட்டி இது.*

*ஜெர்மன் கலந்த ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசும் நாக், ரோட்டரியில் தன்னுடைய வழக்கத்துக்கு மாறான வளர்ச்சியைப்பற்றிப் பேசினார், ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டத்துக்குத் தான் நெடுங்காலமாகப் பங்களித்துவந்ததால் இந்த விரைவான முன்னேற்றம் சாத்தியமானது என்றார். அந்த அனுபவங்கள்தான் தலைவராக அவருடைய விருப்பங்களை வரையறுக்கின்றன.*

*ரோட்டரியை வளர்த்தல், குறிப்பாக, இளைஞர்களுடன் சேர்ந்து வளர்தல் என்னுடைய இலக்குகளில் ஒன்றாக இருப்பது உறுதி என்றார் அவர். ஏனெனில், இளைய தலைமுறையுடனான தொடர்பை இழந்துவிட்டால், நாம் காலாவதியாகிவிட்டோம் என்று பொருள் எனக் கைகளை உயர்த்தித் தோள்களைக் குலுக்கியபடி சொல்கிறார் அவர்.*

*இந்த உரையாடலின்போது, 2018 ஜனவரி பன்னாட்டுச் சந்திப்பில் தான் நிகழ்த்திய உரையைப்பற்றிக் குறிப்பிட்டார் அவர். அதில் அவர் பால் ஹாரிஸின் இந்த மேற்கோளைப் பயன்படுத்தியிருந்தார்: ரோட்டரி தனக்குரிய இடத்தை எட்டவேண்டுமென்றால், சில நேரங்களில் வளர்ச்சியையும், சில நேரங்களில் புரட்சியையும் பின்பற்றவேண்டும்.'' இந்த எண்ணத்தைப்பற்றிய தன்னுடைய சிந்தனையை அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: ரோட்டரி வருங்காலத்துக்குத் தயாராக இருக்கவேண்டுமென்றால், நாம் தொடர்ந்து புரட்சிகரமாகச் செயல்படவேண்டும், இளைஞர் ஆற்றலை நம்பவேண்டும்.''*

*எந்த வயதிலும் ரோட்டரியன் ஆகலாம் என்பதுபோன்ற தன்னுடைய சொந்தப் பொன்மொழிகள் சிலவற்றையும் அறிமுகப்படுத்தினார் நாக், தலைவர் அணியவேண்டிய கழுத்துப்பட்டையின் பொருளாதாரத் தேவையைப்பற்றிப் பேசினார். (நாக் அபூர்வமாகவே கழுத்துப்பட்டை அணிகிறவர். எப்போதாவது தேவைப்பட்டால் பயன்படுத்துவதற்காக மார்க் டானியல் மலோனியின் நீல நிறத் தலைவர் கழுத்துப்பட்டைகளில் ஒன்றை ஒரு மேசை டிராயரில் வைத்திருப்பதாகச் சொன்னார்.)*

*தன்னுடைய தலைமைக்கான கருப்பொருளையும் அவர் அறிமுகப்படுத்தினார்: வாய்ப்புகளைத் திறக்கும் ரோட்டரி. இதன் காட்சி வடிவம், மூன்று திறந்த கதவுகள்: ஒன்று நீல நிறத்தில், இன்னொன்று தங்க நிறத்தில், மூன்றாவது ஒளிமிகுந்த ரோடராக்ட் பிங்க் நிறத்தில். இந்தக் கருப்பொருளின் பொருத்தத்தைக் கருதித்தான் இதைத் தேர்ந்தெடுத்ததாக விளக்குகிறார் நாக். ஏனெனில், இதை ஒவ்வொரு மொழியிலும் எளிதாக மொழிபெயர்க்கலாம்.*

*முதல் பேட்டியின்போது, நாக்-கின் மனைவி சுசானெயும் உடன் அமர்ந்திருந்தார், சில விளக்கங்களை அளித்தார்.*

**தி ரோட்டரியன் (TR):** ரோட்டரியின் வரலாற்றிலேயே, ஜெர்மனியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் தலைவர் நீங்கள்தான். ஜெர்மனியில் ரோட்டரியின் தன்மையைப்பற்றி எங்களுக்குச் சொல்லுங்கள்.

**நாக்:** உலகெங்கும் ரோட்டரி வெவ்வேறுவிதமாகச் செயல்படுகிறது. நாம் அனைவரும் அதே மைய மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொள்கிறோம், ஆனால், அவற்றை வெவ்வேறு விதமாக வலியுறுத்துகிறோம். ஜெர்மனியில் நட்பு அல்லது தோழமை, நேர்மை, நன்னெறிகள் ஆகியவை முதன்மை பெறுகின்றன. ஜெர்மன் ரோட்டரியன்கள் உறுப்பினர்களிடம் எதிர்பார்ப்பது இதைத்தான். நாங்கள் செய்கின்ற சேவை, எங்களுடைய நட்பினால் வளர்கிறது. இன்னொரு முக்கியமான விஷயம், ஜெர்மன் ரோட்டரி சங்கங்கள் தங்களுடைய உறுப்பினர்களைக் கவனமாகத் தேர்ந்தெடுக்கின்றன, நாங்கள் உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் விகிதமும் மிக நன்றாக உள்ளது. தக்கவைத்துக்கொள்வதுபற்றி நாங்கள் தனியே நினைப்பதுகூட இல்லை.

**TR:** நீங்கள் எப்படி ரோட்டரிக்கு வந்தீர்கள்?

**நாக்:** ஐரோப்பாவில் 'வட்ட மேசை' என்ற பெயரில் நூற்றுக்கணக்கான சங்கங்கள் உள்ளன; அங்கிருந்துதான் என்னுடைய பயணம் தொடங்கியது.

வியப்பான விஷயம், 1927ல் இங்கிலாந்தில் சில ரோட்டரியன்கள்தான் இந்த அமைப்பைத் தொடங்கியிருக்கிறார்கள். காரணம், எப்போதும் முதியவர்களோடு பேசிக் கொண்டிருப்பதால் அவர்களுக்குச் சலிப்பு உண்டாகிவிட்டது. ஆகவே, அவர்கள் 'வட்ட மேசை' என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பைத் தொடங்கினார்கள்; இதில் சேர்கிறவர்கள் 40 வயதானதும் அங்கிருந்து விலகிவிடவேண்டும். நான் 30 வயதில் அங்கு சேர்ந்தேன், 39 வயதில் விலகினேன்.

அவர்களுடைய குறிக்கோள் மிகச் சிறப்பானது: ஏற்றுக்கொள்ளுங்கள், மாறுங்கள், முன்னேறுங்கள். எனக்குச் சேவைப்பணியில் ஆர்வம் இருந்தது; நட்பு வட்டம் அமைப்பதிலும் ஆர்வம் இருந்தது. இந்த அமைப்பில் என்னுடனிருந்த பல நண்பர்கள் ரோட்டரியில் சேர்ந்தார்கள். இதற்கும் அதே காரணம்தான்: நட்பு வட்டத்தைப் பெரிதாக்குகிற வாய்ப்பு.

குறிப்பாக, ரோட்டரியின் வகைப் படுத்தல் அமைப்பு இதற்கு உதவியது. வெவ்வேறு விதமான மனிதர்கள் ஒன்று சேரும் போது, அந்த அமைப்பு இன்னும் ஆர்வமூட்டுவதாகிறது. அங்கு நிகழும் விவாதங்கள் எதிர்பாராத திசைகளில் நகர்கின்றன.

ஹெர்ஜோக்டம் லௌன்பர்க்-மோல்ன் ரோட்டரி சங்கத்தில் நான் சேர்ந்தேன். சங்கத்தின் பெயரே விநோதமாக இருக்கிறது தானே? ரான் பர்டன் இயக்குநராக இருந்தபோது என்னை இப்படி அறிமுகப்படுத்தினார், இவர் ஹோல்கர் நாக், ஜெர்மனியில் ரோட்டரி சங்கத் திலிருந்து வருகிறார்.''

என்னுடைய சொந்த ஊரான ராட்ஜெபர்கில் ஒரு புதிய ரோட்டரி சங்கம் உறுப்பினர்களை நாடிவந்தது. ஆனால், அந்தச் சங்கத்திலிருந்த பலரை நான் ஏற்கெனவே அறிவேன்; ஆகவே, நான் பழைய சங்கத்தில் சேரத் தீர்மானித்தேன். அதனால், முற்றிலும் மாறுபட்ட புதியவர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

TR: நீங்கள் ரோட்டரியின் தலைவரானது எப்படி?

**நாக்:** நான் ஒரு மாவட்ட ஆளுநராவதற்கு முன்னால் எந்தெந்த மாவட்டத் தலைமைப் பொறுப்புகளை வகித்தேன் என்று பட்டியலிடுமாறு கேட்டார்கள். ஏதுமில்லை. நான் மாவட்ட ஆளுநராவதற்கு முன்னால் எந்த மாவட்டத் தலைமைப் பொறுப்புகளையும் வகிக்கவில்லை. இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் என்னுடைய பங்கேற்பைப் பலர் அறிந்திருந்தார்கள்; அதனால், என்னைப்பற்றியும் ரோட்டரி மீது எனக்கிருந்த பேரார்வத்தைப்பற்றியும் மக்கள் அறிந்திருந்தார்கள்.

நான் இயக்குநரானபோதும் இதே கதைதான்: பிராந்திய அளவில் நான் எப்போதும் எந்தப் பொறுப்புகளையும் வகித்ததில்லை. இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், பயிற்சிக்காக நான் எவன்ஸ்டான் வந்தேன், இந்தக் கட்டடத்துக்குள் நான் அப்போதுதான் முதன்முறையாக நுழைந்தேன்.

TR: இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் அப்படி என்ன பெரிய சிறப்பு?



**நாக்:** இளைஞர் பரிமாற்றத்தின் வழியாகதான் நான் ரோட்டரிக்குள் நுழைந்தேன். சுசானெயும் நானும், ரோட்டரி இளைஞர் பரிமாற்ற மாணவர்கள் சிலரை ஆதரித்தோம், ரோட்டரி சங்கங்கள், மாவட்டங்கள் உலகெங்கிலுமிருந்து வருகிற மாணவர்களுக்கு ஆதரவளிக்கிற இளைஞர் பரிமாற்ற முகாம்களை ஏற்பாடுசெய்வதில் பங்கேற்றோம். இதன்மூலம் நம் வாழ்க்கைகள் எப்படி வளமாகின்றன என்பதை நான் கற்றுக்கொண்டேன். எங்களுக்குக் குழந்தைகள் இல்லை, ஆகவே, இந்தத் திட்டம் எங்களுக்கு மிகச்சிறப்பாக அமைந்துள்ளது. இது எங்களை இளமையாக வைக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

TR: உங்களை யாராலும் நம்பிக்கையிழக்கச்செய்ய இயலாது என்று நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம். நீங்கள் எதை எண்ணியும் வருந்த மாட்டீர்களாம். இது எப்படிச் சாத்தியம்?

TR: சில நேரங்களில் சிறிய விஷயங்கள்கூட என்னைச் சங்கடப் படுத்தும். இதை என் மனைவி அறிவார். ஆனால், தீவிரமான விஷயங்கள் என்று வந்துவிட்டால், முக்கியமான தீர்மானங்களை எடுக்கவேண்டுமென்றால், நான் அதிக அமைதியாகிவிடுவேன். அத்துடன், நான் எப்போதும் பிறர்மீது நம்பிக்கை வைப்பேன். என்னால் தனியாக அனைத்தையும் செய்ய இயலாது என்று எனக்குத் தெரியும். களத்தில்

இறங்கிப் பணியாற்றுகிறவர்களை, குறிப்பாக, பேரார்வத்துடன் வேலைசெய்கிறவர்களை நான் மிகவும் மதிக்கிறேன். இது போல், அனைவரையும் நாம் வெளிப்படையாக மதிக்கவேண்டும். நான் மிகத் தொடக்கத்திலேயே கற்றுக்கொண்ட விஷயம் இது.

TR: உங்களுடைய ஆண்டில் நீங்கள் எந்தெந்தப் பகுதிகளில் கவனம் செலுத்தப்போகிறீர்கள்? உங்களால் எதைச் சாதிக்க இயலும் என்று நம்புகிறீர்கள்?

நாக்: இளம்பிள்ளைவாதத்தை முழுவதுமாக அகற்றுவதாக நாம் வாக்களித்தோம். அந்த வாக்கை நிறைவேற்றுவதற்கு நம்மால் இயன்ற அனைத்தையும் நான் செய்வேன். நாம் இதில் வெற்றியடைந்தால், ரோட்டரியைப்பற்றிய உலகத்தின் பார்வை மேம்படும்.

2வதாக, ரோட்டரியை வளர்த்தல். அதிலும் குறிப்பாக, உறுப்பினர் எண்ணிக்கையைத் தாண்டிச் செல்லுதல். எல்லா நிலைகளிலும் ரோட்டரியை வளர்த்தல். நம்முடைய நிறுவனத்தை இன்னும் வலுவாக்குதல். புதிய ரோட்டரி சங்க மாதிரிகளின்வழியாக உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்ளுதல், வளர்தல் உண்மையில், உலகில் மிக மெதுவாக மாறும் நிறுவனங்களில் ஒன்று ரோட்டரி. நாம் எதைச் செய்தாலும் அதற்கு மிகுந்த நேரமாகிறது. நாம் இன்னும் மிக விரைவாகச் செயல்படவேண்டும்.

TR: ரோட்டரியில் எதையெல்லாம் நாம் மாற்றவே கூடாது?

நாக்: நாம் செய்கிற அனைத்துக்கும் அடிப்படையாக விளங்குபவை, நம்முடைய மைய மதிப்பீடுகள். நட்பு, பன்முகத்தன்மை, நேர்மை, தலைமை, சேவை இவை எப்போதும் காலாவதியாகாது. அந்த மதிப்பீடுகளை நாம் எப்படி வெளிப்படுத்துகிறோம், வாழ்கிறோம் என்பது மாறும். உணவு நேரத்தில் சந்திப்பது என்கிற நம் பண்பாடு 100 ஆண்டுகளாக வேலைசெய்திருக்கலாம். ஆனால் இனிமேல் அது வேலைசெய்யாது. ஏனெனில், இப்போது மதிய உணவு என்பது நம் வாழ்க்கையின் மையமான விஷயமாக இல்லை. இளைஞர்களுக்கு ஆர்வம் தருகிற மாதிரிகளை நாம் தேடவேண்டும். நம்முடைய மைய மதிப்பீடுகளைப் பகிர்ந்துகொள்ள எப்படிப்பட்ட ரோட்டரி சங்கத்தில் சேரவேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்.

ரோட்டரி என்பது எல்லாருக்குமான ஓர் இடம்: இளைஞர்கள், முதியவர்கள், பழைய சங்க மாதிரிகள், புதிய சங்க மாதிரிகள். இதில் கண்டிப்பான விதிமுறைகள் வேண்டியதில்லை. எது நன்கு பொருந்துகிறதோ அதை மகிழ்ச்சியாக அனுபவிப்போம்.

TR: ரோட்டரியன்களுடைய சராசரி வயது கூடிக்கொண்டேயிருப்பதை எண்ணி நீங்கள் கவலைப்படுகிறீர்களா?

நாக்: நம் மூத்த ரோட்டரியன்கள் இன்னும் ரோட்டரியன்களாக உள்ளார்கள், முதியவர்கள் இன்னும் ரோட்டரி சங்கங்களில் சேர்கிறார்கள் என்பதை எண்ணி நான் மிகவும் மகிழ்கிறேன். சங்கங்களுக்கும் நம் அமைப்புக்கும் அவர்கள் மிகுந்த



மதிப்பைக் கொண்டுவருகிறார்கள். அதேசமயம், ரோட்டரி சங்கங்கள் தங்களுடைய எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டும் என்று நான் ஊக்கப்படுத்த விரும்புகிறேன்.

சங்கங்கள் ஆண்டுக்கு இருமுறை வியூகக் கூட்டங்களை நடத்தவேண்டும். அவர்கள் தங்களுடைய எதிர்காலத்தைப்பற்றி உண்மையாகச் சிந்தித்தால், வயதுக் குழுக்களுக்கிடையில் பெரிய இடைவெளி இல்லாமலிருப்பது முக்கியம். அவர்களால் ஒவ்வொரு வயதுக்குழுவிலிருந்தும், ஒவ்வொரு



பத்தாண்டிலிருந்தும் உறுப்பினர்களைக் கவர இயன்றால், பெரிய இடைவெளி இல்லை என்று பொருள். ரோட்டரி சங்கங்கள் தங்கள் பணியைத் தொடரவேண்டும், அதேசமயம் இளம் தொழில்வல்லுனர்களுக்கு ஆர்வமூட்டவேண்டும், இது முக்கியம்.

ஏதாவது ஒரு ரோட்டரி சங்கம், நம்முடைய உறுப்பினர் எண்ணிக்கை கச்சிதமான நிலையை எட்டிவிட்டது. 50 அல்லது 60 அல்லது 70 பேரைச் சேர்த்துவிட்டோம்; இனி நமக்குப் புதிய உறுப்பினர்கள் வேண்டாம் என்று தீர்மானித்தால், அது ஆபத்து. அப்போது இடைவெளி மிக மிக விரைவாக வளரக்கூடும்.

நான் சொல்கிற விஷயங்களில் ஒன்று, எந்த வயதிலும் ரோட்டரியன் ஆகலாம் என்பது. ஒருவர் 18 வயதில் உறுப்பினராகிறார் என்றால், அது சிறந்த விஷயம். இன்னொருவர் 80 வயதில் உறுப்பினர் ஆகிறார் என்றால், அதுவும் சிறந்த விஷயம்தான். ஒருவர் இந்த வயதில் ரோட்டரியன் ஆகமுடியாது என்று எந்தக் கட்டாயமும் இல்லை; ரோட்டரி சங்கத்துடைய கச்சிதமான அளவு என்றும் ஏதுமில்லை.

**TR:** பல நேரங்களில் நீங்கள் கழுத்துப் பட்டை அணிவதில்லை என்பதை நாங்கள் கவனிக்கிறோம். நீங்கள் அதிகாரப்பூர்வக் கழுத்துப்பட்டையை அணிவீர்களா?

**நாக்:** தலைவர் கழுத்துப்பட்டைகள் மற்றும் கழுத்தணிகளின்வழியாக நாம் ஆண்டுக்கு 1.3 மில்லியன் அல்லது 1.4 மில்லியன் திரட்டுகிறோம் என்று நான் தெரிந்துகொண்டேன். கழுத்துப் பட்டை அணிவதற்கு அது ஒரு நல்ல காரணம். எனக்குக் கழுத்துப்பட்டைகள் பிடிக்கும். என்னிடம் நிறையக் கழுத்துப் பட்டைகள் உள்ளன.

**TR:** அப்படியானால், தலைவர் கழுத்துப்பட்டை ஒன்று இருக்கும். உங்களுடைய கருப்பொருள் என்ன?

**நாக்:** வாய்ப்புகளைத் திறக்கும் ரோட்டரி. ரோட்டரியை வளர்க்கும் நம்முடைய முயற்சிகளை இது ஆதரிக்கிறது. ஏனெனில், ரோட்டரியனாக ஆவது என்பது வருங்கால உறுப்பினர்களுக்கு முற்றிலும் புதிய வாய்ப்புகளை வழங்குகிறது.

அந்த வாய்ப்புகளில் முக்கியமான ஒன்று, சேவைசெய்யும் வாய்ப்பு. இன்னொரு பக்கம்: நம்முடைய சேவைக்காகக் காத்திருக்கும் மக்களுக்கு நாம் வாய்ப்புகளை வழங்குகிறோம்:

தூய்மையான நீர், பள்ளிக்குச் செல்லும் வாய்ப்புகள் போன்றவற்றை வழங்குகிறோம். நம்முடைய பணி இரு திசைகளிலும் நடைபெறுகிறது.

**TR:** நீங்கள் மிக இளமையான மனப்போக்கைக் கொண்டவர் என்கிறார்கள் மக்கள். நீங்கள் தலைவராக இருக்கும்போது, இந்த மனப்போக்கு உங்களுடைய தலைமையில் எப்படிப்பட்ட தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**நாக்:** என்னுடைய தலைமைப் பாணி மாறாது என்று நம்புகிறேன். நான் போதுமான அளவு தலைவராகத் தோன்றவில்லை என்று சிலர் சொல்லியுள்ளார்கள். அது பரவாயில்லை. மிகத் தீவிரமாகத் தோற்றமளிப்பதைவிட, தலைவராகச் செயலாற்றுவ தான் முக்கியம். அத்துடன், இன்றைய உலகில் நாம் தொடர்ந்து பொருட்படுத்தப்படவேண்டுமென்றால், நாம் இளம் தலைவர்கள் மீது கவனம் செலுத்தவேண்டும். ஓய்வு பெற்றவர்களை நாம் வரவேற்கக் காரணம், அவர்கள் திறமையுள்ளவர்கள், அவர்களிடம் நேரமும் பங்களிப்பதற்கான பேரார்வமும் உள்ளன. நான் புதுமையான சங்கங்கள், புதிய சங்க மாதிரிகள், புதிய சங்க யோசனைகள், இளம் உறுப்பினர்களில் கவனம் செலுத்தவுள்ளேன். இளம் உறுப்பினர்களை இன்னும் கூடுதலாக ஈர்ப்பதற்குச் சரியான நேரத்தில் சரியான நபராக நான் இருப்பேன்.

**TR:** ரோட்டரியின் தலைமைப் பொறுப்புகளில் இன்னும் இளமையானவர்களைக் கொண்டுவருவதற்கான வாய்ப்புகளை நீங்கள் எப்படி உருவாக்குவீர்கள்?

**நாக்:** முதலில், நாம் அவர்களைச் சார்ந்திருக்கவேண்டும், அவர்களை நம்பவேண்டும். அவர்களால் பல விஷயங்களை (கிட்டத்தட்ட எல்லாவற்றையும்) செய்ய இயலுகிறது. நாம் அவர்களுக்குத் தலைமை வாய்ப்புகளை வழங்கவேண்டும். 2014ல் பெர்லின் ரோட்டரி சந்திப்புக்காகத் திட்டமிடத் தொடங்கியபோது, நான் ரோடராக்டர்களைச் சந்தித்தேன். அவர்களுடைய மாறுபட்ட யோசனைகளை நான் கேட்க விரும்பினேன், அவர்கள் மிகச்சிறந்த யோசனைகளை முன்வைத்தார்கள். மகிழ்ச்சி நிகழ்ச்சிகள் அனைத்தையும் அவர்கள் மிகச்சிறப்பாக ஏற்பாடுசெய்தார்கள். ஆகவே, அவர்களை நம்பவேண்டும், அவர்களைச் சார்ந்திருக்க வேண்டும்.



**TR:** தலைமைப் பொறுப்புகளில் பெண்களின் முன்னேற்றத்தை விரைவாக்குவதற்கு ஏதேனும் வழி உள்ளதா?

**நாக்:** தன்னார்வலர் அமைப்பில் நம்மால் எதையும் திணிக்க இயலாது. அது நமக்குப் பயன்படாது. நாம் அடித்தளத்தில் இயங்கும் ஓர் அமைப்பு; இவை அனைத்தும் நம் ரோட்டரி சங்கங்களில் தொடங்குகின்றன. மாவட்ட ஆளுநர்களைப் பரிந்துரைக்கும் குழுக்களில் சரியான நபர்கள் இருப்பதை இவர்கள் உறுதி செய்யவேண்டும். அங்கு சரியான நபர்கள் இருந்தால், அதிகப் பெண் ஆளுநர்கள் வருவார்கள். அனைத்தும் சாத்தியம்தான்: 2020-21 இயக்குநர் குழுவுக்குத் தலைமைதாங்கும் பெருமை எனக்குக் கிடைத்துள்ளது; அதில் ஆறு பெண்கள் இருப்பார்கள்.

**TR:** அதன்மூலம் மாறுபட்ட ஓர் உணர்வு கிடைக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**நாக்:** உண்மையில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. ஆணோ, பெண்ணோ, நாம் அனைவரும் ரோட்டரியன்கள். பேரார்வமும் தலைமைப்பண்பும்தான் முக்கியம். நமக்கு மிகச்சிறந்த மக்கள் வேண்டும்; அதில் எத்தனைப் பெண்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கவேண்டியதில்லை. ஆனால், இப்போது இது நிகழ்கிறது என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. உண்மையில், ரோட்டரியின் அழகே அதன் பன்முகத்தன்மைதான்.

**TR:** ரோட்டரியைப்பற்றி நாங்கள் பிறருக்குச் சொல்வது எப்படி? உலகில் நம் தோற்றத்தை மேம்படுத்துவது எப்படி?

**நாக்:** இந்த உலகில் நம் தோற்றத்தை மாற்றுவதற்கு நிறைய நேரமாகும், அல்லது, நிறையப் பணம் செலவாகும். இதில் இரண்டு விஷயங்கள் முக்கியம்: அதற்கு நேரமாகும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும், அதன்பிறகு, நீங்கள் நேர்மையாக இருக்கவேண்டும். சந்தைப்படுத்தல் காரணங்களுக்காக நாம் மாறவேண்டியது இல்லை. நாம் செய்கிற விஷயங்களையெல்லாம் எதற்காகச் செய்கிறோம் என்கிற உண்மையான கதையை நாம் சொல்லவேண்டும். நீங்கள் ரோட்டரியின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்றால், நீங்கள் இந்நிறுவனத்தை எண்ணி, நாம் செய்யும் பணியை எண்ணிப் பெருமைப்படவேண்டும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப்பற்றிப் பெருமைப்படக்கூடாது. அது சுயநலமாகிவிடும்.

**TR:** ரோட்டரி இன்னும் நவீனமயமாக வேண்டுமா?

**நாக்:** இன்னும் இளைய உறுப்பினர்களை ஈர்க்கவேண்டுமென்றால், நாம் இன்னும் நவீனமயமாவது அவசியம். இப்போதைய ரோட்டரி சங்கங்களை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். அதே சமயம், அவை ரோடராக்டர்களையோ இளம் தொழில்வல்லுனர்களையோ ஈர்க்காவிட்டால், இவர்களுக்குப் பலன் தருகிற ஒரு சங்க மாதிரியை உருவாக்கவேண்டும் என்று நாம் அவர்களை ஊக்குவிக்கவேண்டும். அடுத்த சில ஆண்டுகளில் நாம் அதைத்தான் செய்யவுள்ளோம்.

© The Rotarian

# ராஜ்கோட்டில் ஒரு ரோட்டரி தோல் வங்கி

கிரண் ஜெஹரா

RC கேரி கில்டாரெ, RID 7710, USA மற்றும் TRF ஆதரவுடன் ராஜ்கோட்டில் ரூ.50 லட்சம் செலவில் ஒரு தோல் வங்கியை அமைத்துள்ளது RC ராஜ்கோட், RID 3060. கென்யாவிலுள்ள நைரோபியைச் சேர்ந்த சர்லா காம்தர் என்ற ஒரு தனி நன்கொடையாளரும் இந்த நோக்கத்துக்காகத் தன்னுடைய பங்களிப்பை வழங்கி உதவியுள்ளார்.

இந்த வளாகம் எப்படி உருவானது என்பதை விளக்கிய சங்கத் தலைவர் சந்தேஷ் காந்தி, தீக்காயங்களுடன் இந்த மருத்துவ மனைக்கு வருகிறவர்களைப்பற்றித் தாங்கள் நடத்திய ஒரு தீவிர ஆய்வைப்பற்றிப் பேசினார்: ஒவ்வொரு காலாண்டிலும் கிட்டத் தட்ட 60 பேர் இங்கு தீக்காயங் களுடன் வருகிறார்கள், அப்படி வருகிறவர்களில் 80 சதவிகிதத் தினர் 18-40 வயதில் உள்ளவர்கள், இரண்டாம், மூன்றாம் நிலைத் தீக்காயத்துடன் வருகிறவர்கள். இந்த நோயாளிகளில் பெரும்பாலானோர் நடுத்தர மற்றும் கீழ் நடுத்தர வருவாய்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்பதால், செயற்கைத் தோல் வாங்குவதோ, குறுகிய காலத்தில் தோல் நன்கொடையாளர் ஒருவரைத் தேடுவதோ அவர்களால் இயலாது.

2019ல் இந்தச் சங்கம் ஒரு பன்னாட்டு நல்கைக்காக விண்ணப்பம் செய்தது. இந்த வளாகத்தை அமைப்பதற்கு IPDG பிங்கி படேல், முன்னாள் தலைவர் ஹிதா மேத்தா உதவினார்கள்.

தீயினால் திறந்த காயங்கள் உண்டாகின்றன. உடலின் முதல் பாதுகாப்பு சேதப்படுகிறது. ஆகவே, விரைவான நீர் இழப்பு, வெப்பநிலை இழப்பு உண்டாகிறது. தீவிரமான தீக்காயங்களின்போது, மூன்று முதல் ஐந்து நாட்களுக்குள் பல உறுப்புப் பணிகள் பாதிக்கப்படுகின்றன என்கிறார் இந்தச் சங்கத்தின் உறுப்பினரும், தோல் வங்கிக்குப் பொறுப்பேற்றுள்ள ரோட்டரி அதிகார வல்லுனருமான Dr தேவ்ரத் சுக்வால்.



PDG *பிங்கி பட்டேல் ராஜ்கோட் தோல் வங்கியில்.*

தோல் வங்கியானது நோயாளிகளுக்கு ஒரு பெரிய வரமாகும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர். ஏனெனில், தோல் ஒட்டுச் சிகிச்சைக்கு ரத்த வகைகள் பொருந்த வேண்டி யதில்லை, 18 வயதுக்கு மேற்பட்ட, தோல் நோய் அல்லது நோய்த்தொற்று இல்லாதவர்கள் யாரும் தோலை நன்கொடையாக அளிக்கலாம்.

தீவிரமான தீக்காயங்களின்போது, மின்பகுபொருள் (எலக்ட்ரோலைட்) சமநிலை பாதிக்கப்படுவதாகவும், அதனால் உள் உறுப்புகள் பாதிப்புக்குள்ளாவதாகவும் அவர் விளக்கினார். இந்தச் சிகிச்சைக்குப் பிறகும், நோயாளிகள் எளிதில் உயிர்பிழைத்துவிடுவதில்லை. தோல் ஒட்டுச் சிகிச்சைக்குப்பிறகு, தோலின் பாதுகாப்பு அடுக்கு மீள்கிறது, அதன்பிறகு, காயம் ஆறத்தொடங்குகிறது, இதனால், பாதிக்கப்பட்டவர் உயிர்வாழும் சாத்தியம் கூடுதலாகிறது.

இறந்த ஒருவருடைய தோலை நன்கொடையாகப் பெறுவதற்கு அனுமதி கிடைத்தபின், இறப்பு நிகழ்ந்து ஆறு மணி நேரத்து க்குள் அவருடைய தோலைப் பெறுவதற்காக இந்தத் தோல் வங்கியிலுள்ள மருத்துவர், ஊழியர் குழு பயிற்சிபெற்றுள்ளது. இதற்காக, 0.4 முதல் 0.6 மிமீ தடிமன் கொண்ட ஒரு மிக மெல்லிய தோல் அடுக்கு எடுக்கப் படுகிறது. இதில் எபிடெர்மிஸ் மற்றும் டெர்மிஸின் பகுதி உள்ளது. இதை வங்கியில் 4 டிகிரி செல்சியஸைவிடக் குறைவான வெப்பநிலையில் பாதுகாக்கிறார்கள்.

“மக்கள் கண்கள், பிற உறுப்புகளை நன்கொடையாக வழங்கத் தயாராக உள்ளார்கள். ஆனால், தோலை நன்கொடையாக வழங்க விரும்புவதில்லை. ஏனெனில், அது உடலைச் சிதைத்து விடும் என்று நினைக்கிறார்கள்,’’ என்றனர் சங்கத் தலைவர்.

தொடை மற்றும் கால்களில் உள்ள வெளித் தோல் அடுக்கு மட்டுமே பயன்படுத்தப் படுவதாக என்று டாக்டர் சுக்வால் கூறுகிறார்.■

# போலியோவை அகற்ற பாகிஸ்தான் பிரதமரைச் சந்தித்த உயர்மட்ட ரோட்டரி பிரதிநிதிக்குழு

ரஷீதா பகத்

2019ல் இளம்பிள்ளைவாதம் வந்தவர்களுடைய எண்ணிக்கை பெருகியுள்ளது; குறிப்பாகப் பாகிஸ்தானில் இந்தப் பிரச்னை கூடுதலாகக் காணப்படுகிறது; இதனால் ரோட்டரியும் அதன் துணை நிறுவனங்களும் தீவிரக் கவலை கொண்டுள்ளன. இந்தப் பின்னணியில், RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஹோல்கர் நாக், TRF தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள K R ரவீந்திரன் மற்றும் IPPC தலைவர் மைக் மக்கவர்ன் ஆகியோரைக் கொண்ட ரோட்டரியன்களின் உயர்மட்டக் குழுவொன்று பிப்ரவரி முதல் வாரத்தில் பாகிஸ்தான் சென்றது. இவர்களுடன் பாகிஸ்தானைச் சேர்ந்த அறங் காவலராக தேர்ந்தெடுக்கப்பட்ட IPPC உறுப்பினர் PDG அஜிஜ் மேமனும் இக்குழுவில் இடம்பெற்றார். இதன் கள ஏற்பாடுகள் அனைத்தையும் இவர் செய்திருந்தார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுடனான உயர் நிலை ஆய்வுக்



*RIPE ஹோல்கர் நாக், பாக்கிஸ்தான் பிரதம மந்திரி இம்ரான் கான்.*



TRF *அறங்காவலர் தலைவர்-தேர்வு* K R *ரவீந்திரன் மற்றும்* RIPE *ஹோல்கர் நாக் பாக்கிஸ்தான் படைத் தலைவர் கமர் பாஜ்வா உடன்.*

கூட்டங்கள், ராணுவ ஊழியர் தலைவர் ஜெனரல் கமார் பஜ்வா-வுடனான தனிக் கூட்டங்களைப்பற்றி அறங்காவலர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரவீந்திரன் ரோட்டரி நியூஸிடம் பேசினார். பாகிஸ்தானின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான தடுப்பு மருந்துகளைக் கொண்டு சேர்ப்பதற்காக ராணுவ, பொதுமக்கள் குழுக்களின் தடையற்ற ஆதரவு, ஒத்துழைப்பை இவர்கள் உறுதி செய்ததாகச் சொன்னார் அவர்.

சென்ற ஆண்டு, இம்ரான் கான் பிரதமராக அப்போது தான் தேர்தலில் வென்றிருந்தார், ஓர் இடைநிலை அரசு பதவியில் இருந்தது, அப்போது பாகிஸ்தான் ஒரு முக்கியமான படிநிலையைத் தவற விட்டு விட்டது என்று பிரதமர் ஏற்றுக்கொண்டார். ஆனால், இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதைத் தன்னுடைய அரசு தன் முதன்மைச் செயல்பாடாகக் கருதுவதாக அவர் எங்களுக்கு உறுதி கூறினார்; தடுப்பு மருந்துத் திட்டத்தைக் கையாள்வதற்காக மிகவும் செயல்திறன் வாய்ந்த பல நிர்வாக நடவடிக்கைகளைத் தாங்கள் ஏற்கெனவே எடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.''

1300-மைல் நீளமுள்ள ஆஃப்கானிஸ்தான் எல்லையில் வேலி அமைப்பதற்கான தங்களுடைய முயற்சிகள் நன்கு முன்னேறியுள்ளதாகப் பிரதமர், ராணுவத் தலைவர் ஆகிய இருவரும் உறுதி செய்தார்கள். RI முயற்சி களை பாராட்டினார்கள்; தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் அறங் காவலர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவரும் ஒன்றாகத் தங்களை வந்து பார்ப்பதைக் காணும்போது, இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் திட்டத்தின் முக்கியமான நிலையில் இவர்களுக்கு எழுந்துள்ள கவலையைத் தாங்கள் புரிந்து கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள் என்று தொடர்ந்து கூறினார் ரவீந்திரன்.



PDG *ஆஸிஸ் மேமன்,* RIPE *நாக், அறங்காவலர் தலைவர்-தேர்வு ரவீந்திரன் மற்றும் பாகிஸ்தான் சுகாதார அமைச்சர் ஜாஃபர் மிர்ஜா.*

சமீபத்தில் நிறைவடைந்த இறுதிச் சுற்றில் சுமார் 40 மில்லியன் குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டதாகவும், விடுபட்ட குழந்தைகளின் எண்ணிக்கை ஒரு சதவிகிதத்தைவிடக் குறைவு என்றும் நல அமைச்சர் ஜஃபர் மிர்சா உறுதிப்படுத்தினார்.

இப்பயணத்தின் நிறைவில், RIPE நாக், இளம்பிள்ளை வாதத்தை அகற்றுவதற்காகப் பாகிஸ்தானில் எடுக்கப்பட்டுவரும் புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளைப்பற்றித் தெரிந்து கொண்ட வாய்ப்புக்காக நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம் என்றார்.

பாகிஸ்தானில் 230க்கும் மேற்பட்ட ரோட்டரி சங்கங்கள், கிட்டத்தட்ட 3,400 உறுப்பினர்கள் உள்ளார்கள். இந்தச் சந்திப்பின் போது, ரோட்டரி பிரதிநிதிகள் உள்ளூர் ரோட்டரி தலைவர்களைச் சந்தித்தார்கள்.

அடுத்த பன்னாட்டுப் போலியோ ப்ளஸ் குழு(IPPC)க் கூட்டத்தைத் தான் பாகிஸ்தானில் கூட்ட எண்ணியுள்ளதாகவும், WHO, UNICEF, கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் CDC உள்ளிட்ட அனைத்துக் கூட்டு நிறுவனங்களும் இதில் பங்கேற்கும் என்றும் ரவீந்திரன் கூறினார். ''வைல்ட் போலியோவைரஸ் பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தானில் மட்டும் தான் உள்ளது, ஆகவே, நாம் நம்முடைய ஆற்றல் முழுவதையும் அப்பகுதியில் குவிக்க வேண்டும்.''

IPPC கூட்டம் பாகிஸ்தானில் நடைபெறவிருப்பது இதுவே முதல்முறையாகும்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# கோவாவில் RID 3060ன் மாநாடு

கிரண் ஜெஹ்ரா




*PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் அவர் மனைவி பினோதா.*

கோவாவில் ஒரு கடற்கரை விருந்தில் தங்கள் 50வது மாவட்ட மாநாட்டை, RID 3060 இன் ரோட்டரியர்கள் சிறப்பாக கொண்டாடினர். உரையாற்றுவதற்கு முன்பு, RIPN ஷேகர் மேத்தா, DGஅனிஷ் ஷா , இந்தியாவின் உயர்மட்ட RI தலைவர்களை தனது மாவட்ட மாநாட்டிற்கு வரவழைத்து புதிய சாதனை படைத்துவிட்டதாக கூறினார்.

RC வல்சத்தி நடத்திய இரண்டு நாள் மாநாட்டில் பிரேசில், மெக்ஸிகோ மற்றும் வியட்நாமில் இருந்து GSE அணிகள் உட்பட 1,500க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டிலிருந்து 12 RYE மாணவர்கள் கலந்து கொண்டனர். PDG TN சுப்ரமணியன் RIPR ஆக இருக்க இந்த மாநாட்டில் PRIP கல்யாண் பானர்ஜி, RI டைரக்டர்கள் கமல் சங்வி, பரத் பாண்டியா RIDN A S வெங்கடேஷ், அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் PRID மனோஜ் தேசாய் கலந்து கொண்டனர்.

PRIP கல்யாண் பானர்ஜிக்கு மேத்தா நன்றி தெரிவித்தார். RID 3060ஐ இந்தியாவின் மிகச் சிறந்த மாவட்டங்களில் ஒன்றாக அழைத்த அவர், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு ரோட்டராக்டர்கள் DGக்களாக மாறிவிட்டதை சுட்டிக் காட்டினார்.

சுயத்திற்கு மேலான சேவை யின் உண்மையான உணர்வைப் புரிந்து கொள்ளுமாறு பிரதிநிதிகளை அவர் கேட்டுக்கொண்டார். “உலகின் நிறுவனங்கள் தனது சாதனைகளை நினைத்துப் பார்ப்பது போல் நீங்கள் கட்டிய வீடுகள், ரத்த வங்கிகள் ஆகியவற்றை நினைத்து பெருமை கொள்ளலாம். மாவட்டத்தின் ஒரு சிறிய வரலாற்றை விவரித்தபின், பானர்ஜி: எங்கள் சொந்த மாநாட்டிற்கு வருவது எப்போதுமே அத்தகைய



**இடது:** RIPN *சேகர் மேத்தா,* RIPR TN *சுப்ரமணியன் மற்றும் வித்யா.*

**கீழே:** DG *அனிஷ் ஷா மற்றும்* RID *பரத் பாண்ட்யா.*




பெருமைதான், எனவே DGE பிரசாந்த் ஜானி மற்றும் DGND ஸ்ரீகாந்த் இந்தானி, தங்கள் மாநாட்டை எங்கு நடத்தினாலும் தானும் பினோட்டாவும் ஆதரவாக இருப்போம் என்றார். DGயின் சாதனைகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த அவர், சிறந்தவர்களை கொண்டு அனைத்து பணிகளையும் சிறப்பாக செய்துள்ளதாக கூறி தான் மிகவும் மகிழ்ந்ததாக தெரிவித்தார்.

RI தலைவர் மார்க் மலோனியின் செய்தியை தெரிவித்த PDG T N சுப்பிரமணியன், ரோட்டேரியன்களுக்கு பொறுப்பு உள்ளதாக தெரிவித்தார். 2015-16ஆம் ஆண்டில்



PRID *மனோஜ் தேசாய்,* RIPR *சுப்ரமணியன் மற்றும்* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி.*



RIDN AS *வெங்கடேஷ் மற்றும் அவர் மனைவி வினிதா.*




**மேலே:** *ரோட்டரி தலைவர்கள் துணைவியர்களுடன்.*

**கீழே:**
**இடதிலிருந்து** *மாநாட்டுத்தலைவர் தார்மின் தேசாய், DG அனிஷ் ஷா மற்றும் அவர் மனைவி சுவாதி, RID கமல் சங்வி மற்றும் சோனல், PRIP கல்யாண் பானர்ஜி, வித்யா மற்றும் PDG TN சுப்ரமணியன்.*

மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிளப்பும் அறக்கட்டளைக்கு பங்களித்ததை கூறி. மீண்டும் தொடர வேண்டும் என்றார். TRF அறங்காவலர் வஹன்வதியும் போலியோ நிதியத்தில்






மனிதாபிமான திட்டங்கள் மற்றும் ரோட்டரியின் பொது உருவத்தை மேம்படுத்துதல் ஆகியவை முன்னுரிமைப் பகுதிகள் என்று கூறிய RID பரத் பாண்ட்யா நல்ல செயல்கள் மூலம் உலகை சிறப்பாக மாற்றும் படி கூறினார். RID கமல் சங்வி மாவட்டத்தின் ரோட்டரியர்களிடம் அவர்களுடன் பயணித்தவர்கள் வழிகாட்டியவர்களை மதிக்க வேண்டும் என்றும் மேலும் உங்கள் PDGக்கள் உங்கள் வழிகாட்டும் ஒளி என்பதை நினைவில் கொள்ளும்படி கூறினார்.

RIDN AS வெங்கடேஷ் தான் கிளப் உறுப்பினர்களை திருப்தி படுத்தும்படி வலியுறுத்தினார். பல பழைய உறுப்பினர்களை இழந்த நிலையில் இருப்பவர்களை தக்க வைத்துக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

PRID மனோஜ் தேசாய் தன்னிடம் பிரிசிடெண்ட் ஆக விரும்புவதாக கூறும் ரோட்டேரியன்கள் அந்த பதவிக்கு வர கடினமாக உழைக்க வேண்டும் என்றார்.

நியாயமான முறையில் சிறப்பாகச் செயல்பட்டாலும், வருடாந்திர நிதி மற்றும் நிதியுதவியில் நாம் பின் தங்கியுள்ளதால் TRFக்கு பங்களிக்க வேண்டும். உலக நிதி குறைவாக உள்ளது மற்றும் GGயை பாதிக்கும் என்றவர் மாவட்டத்தின் 50வது ஆண்டில், ரோட்டேரியன்கள் TRFக்கு 2 மில்லியன் டாலர் பங்களிப்பை இலக்காகக் கொள்ள வேண்டும்.

கிளப்புகளை வலுப்படுத்துவது,

DG ஷா திட்டங்கள், உறுப்பினர், புதிய கிளப்புகள், ரோட்டராக்ட் ஈடுபாடு மற்றும் நிதி சேகரிப்பு பற்றி விளக்கினார். முழு மாவட்டத்திலும் மூலோபாய திட்டத்தை செயல்படுத்த உதவிய அனைத்து PDGக்கள், கிளப் தலைவர்களுக்கு நன்றி கூறியவர் அவர்களுடைய உதவி இல்லாமல் தன்னால் எதையும் செய்திருக்க முடியாது என்றார். IPDG பிங்கி படேல் 2018–19ஆம் ஆண்டிற் கான கணக்குகளை வழங்கிய பின் மாவட்ட விருதுகளை வழங்கப் பட்டன. GSE மற்றும் RYE அணிகளின் கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் கோவாவின் நடன நிகழ்ச்சிகள் மாநாட்டின் சிறப்பம்சமாக இருந்தன.



புகைப்படங்கள்:
கிரண் ஜெஹரா

# ரோட்டேரியன்கள் எப்போதும் தங்கள் பின்களை அணிய வேண்டும்: RIDN A S வெங்கடேஷ்

V முத்துகுமரன்



RIDN AS வெங்கடேஷ் அவர்களை கௌரவிக்கும் DG ஜமீர் பாஷா, அவர் மனைவி ஷகிலா மற்றும் PDG S ராஜேந்திரன்.

PRID C பாஸ்கர் மற்றும் அவர் மனைவி மாலா, DG G சந்திரமோகன், ஷகிலா, DG ஜமீர் பாஷா, RIPR ஜானிஸ் க்ரத் மற்றும் அவர் கணவர் Rtn மாட்.

இந்தியாவில் அதிவேக வளர்ச்சிக்கு ரோட்டரி தயாராக இருப்பதால், ஒவ்வொருவரும் அடுத்த 18 மாதங்களில் தலா ஒரு புதிய உறுப்பினரையாவது சேர்க்க உறுதிமொழி எடுக்க வேண்டும்.என்று RIDN A S வெங்கடேஷ் கூறினார்.

ரோட்டரியின் மரபு குறித்து நாம் பெருமிதம் கொள்ள முடியும் என்றாலும், இந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தை 2030க்குள் அதன் தகுதியான நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் செயல்பட வேண்டும். RID 3000இன் ரோட்டேரியன்கள் வெளியே செல்லும் போதெல்லாம் தங்கள் ரோட்டரி பின்களை



அணியுமாறு வலியுறுத்தினார். சென்னையில் சிம்மாசனம் என்ற தலைப்பில் இரண்டு நாள் நடைபெற்ற RID 3000ன் மாநாட்டில் ரோட்டரிக்கான தனது கனவுகளை பகிர்ந்து கொண்டார். இந்தியாவில் உள்ள 150,000 மற்றும் உலகின் 1.2 மில்லியன் ரோட்டேரியர்களும் வெளியே செல்லும் போது தங்கள் பின்களை அணிந்தால், அவர்கள் நம் பிராண்ட் தூதர்களாக மாறுகிறார்கள் என்று கூறினார்.

இரண்டாவதாக, ரோட்டரியை நம் செயல் மூலம் சிறப்பாக்கினால் மக்கள் ரோட்டரியில் தன்னிச்சையாக இணைவார்கள் என்றார்.
அவரது மூன்றாவது கனவு ரோட்டரியை மக்கள் உன்னதமான காரணங்களுக்காக தாராளமாக நன்கொடை செய்வதற்கான விருப்பமான அமைப்பாக மாற்ற வேண்டும். சாதாரண மக்கள் இந்த தொண்டு நிறுவனத்தை நாம் சமூக திட்டங்களை நிறைவேற்றும் விதத்தை கண்டே கணிப்பதால் நம் இமேஜை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

1993ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து ஒரு தனி மாவட்டமாக பிரிக்கப் பட்டதிலிருந்து RID 3000 நீண்ட தூரம் வந்துவிட்டது என்று PRID C பாஸ்கர் கூறினார். வெறும் 28 கிளப்புகளுடன் உலகில் TRF கொடுப்பதில் மூன்றாவது குறைவான நாடாக இருந்த நாம்

*இந்தியாவில் உள்ள 150,000 மற்றும் உலகின் 1.2 மில்லியன் ரோட்டேரியர்களும் வெளியே செல்லும் போது தங்கள் பின்களை அணிந்தால், அவர்கள் நம் பிராண்ட் தூதர்களாக மாறுகிறார்கள்.*

இன்று உறுப்பினர் வளர்ச்சியில் முதலிடத்தில் உள்ளதற்கும் பல மைல்கற்களை எட்டியதற்கும், இந்த மாவட்டத்தின் முன்னாள் ஆளுநர்களுக்கு கடமைப் பட்டிருக்கிறோம், என்று கூறினார்.

ரோட்டரி பற்றிய மதிப்பிடு நபருக்கு நபர் நாட்டுக்கு நாடு வேறுபடுவதாக சொன்னவர் இந்திய ரோட்டரியர்கள் சமூக சேவைக்கு முக்கியத்துவம் அளிக்கும் அதே நேரம் ஐரோப்பா ஆஸ்திரிலிய உறுப்பினர்கள் எண்ணம் வேறாக இருந்தாலும். ரோட்டரி எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்றார்.

**இந்தியா ஏழை நாடு இல்லை**

20 ஆண்டுகளுக்கு முன்பு தான் மாவட்ட கவர்னராக இருந்த காலத்தில், இந்தியாவில் ரோட்டரி கிளப்புகள் சேவை திட்டங்களை மேற்கொள்ள வெளிநாட்டு நன்கொடையாளர்களைத் தேடிக் கொண்டிருந்தன. இப்போது. TRF கொடுப்பதில் முதல் இரண்டு மாவட்டங்கள் 2018–19 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்தன, உறுப்பினர் வளர்ச்சியில், முதல் மூன்று மாவட்டங்கள் எங்கள் மண்டலங்களைச் சேர்ந்தவை, என்றும் அவர் குறிப்பிட்டவர் இந்தியா விரைவில் ஒரு வளர்ந்த நாடாக மாறும் என்றும் RI போர்டின் உரையின் போது வலியுறுத்தினார்.

ஒரு சராசரி இந்தியரின் தனிநபர் வருமானம் ரூ.1.2 லட்சம், எனவே இந்தியாவில் ரோட்டரி கிளப்புகள் எந்தவொரு நிதி பிரச்சினையும் இல்லாமல் அதிக எண்ணிக்கையிலான சமூக திட்டங்களை செயல்படுத்து கின்றன, என்றவர். "RID 3000" இல் உள்ள கிளப்புகள் தங்கள் சமூகங்களின் தேவைகளையும் புரிந்துகொண்டு திட்டங்களை தீட்ட வேண்டும் என்பதோடு அவைகளை செயல்படுத்த அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்றார்.

வெங்கடேஷ் மற்றும் பாஸ்கரை DG டாக்டர் ஜமீர் பாஷா நினைவு பரிசுகளுடன் பாராட்டினார். இந்த டிஸ்கானை தமிழக ஆளுநர் பன்வரிலால் புரோஹித் திறந்து வைக்க, தெலுங்கானா ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் இறுதி நாளன்று உரையாற்றினார். RID 3000இன் 126 கிளப்புகளில் இருந்து 2,200க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் தங்கள் குடும்பத்தினருடன் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். திண்டுக்கலைச் சேர்ந்த மேஜர் டோனர் G சுந்தரராஜன், மதுரை TVS நிறுவனத்தின் ஓய்வுபெற்ற ஊழியர் R சீனிவாசன், திருச்சியின் இந்து மிஷன் மருத்துவ மனையின் இயக்குநர் VV சுப்பிரமணியன் ஆகியோருக்கு தொழில் சிறப்பு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# இளைஞர் ஒருவரை எழுந்து நடக்கச்செய்த ரோட்டரியன்

ரஷீதா பகத்

சில மாதங்களுக்குமுன்னால், RC மைசூர் மிட்-டவுன், RID 3181ன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள A N ஐயண்ணா, தன்னுடைய சங்கம் நடத்தும் ரோட்டரி மிட்-டவுன் அகாதெமி என்ற உயர்நிலைப்பள்ளியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது, அவர் ஓர் இளைஞரைச் சந்தித்தார்.

பதின்பருவத்திலிருந்த அந்த இளைஞருடைய உடலில் ஒரு குறைபாடு இருந்தது; அதனால், அவரால் இயல்பாக நடக்க இயல வில்லை; எனினும், அவர் சோர்ந்து கிடக்காமல், மிகுந்த ஆற்றலுடன் காணப்பட்டார்.

அப்போது நான் என்னுடைய ரோட்டரியன் நண்பரான சதீஷ் பாபுவுடைய இருசக்கர வண்டியின் பின்னிருக்கையில் அமர்ந்திருந்தேன்; அவரிடம் வண்டியை நிறுத்தும்படி சொன்னேன்; பொதுப் பேருந்தில் வீடு திரும்புவதற்காக நடைபாதியில் தனியாகக் காத்திருந்த அந்த இளைஞரை நோக்கிச் சென்றேன்.

அந்த இளைஞருடைய பெயர் லோஹித். அவர் மைசூரிலுள்ள ஹேமாவதி பள்ளியில் 10ம் வகுப்பு பயில்கிறார். பிறவியிலேயே அவருக்கு ஒரு காலைவிட இன்னொரு காலின் நீளம் குறைவு. இதனால், அவரால் இயல்பாக நடக்க இயலவில்லை.

அந்த இளைஞருடைய உடற் குறை பாட்டையும், இயல்பாக நடப்பதில் அவருக்கிருந்த சிரமத்தையும் கண்டபோது, ரோட்டரியனான எனக்கு வருத்தம் உண்டானது. அவரோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தேன், அவருடைய குடும்பம், கல்வி போன்றவற்றைப்பற்றித் தெரிந்து கொண்டேன் என்கிறார் ஐயண்ணா.

லோஹித்துக்கு நன்றாக வியர்த்துக் கொண்டிருந்ததையும் ஐயண்ணா கவனித்தார். காரணம், அவர் பள்ளியில் தன்னுடைய நண்பர்களுடன் கபடி விளையாடிக் கொண்டிருந்தது தான். உடற்குறைபாட்டால் தன்னுடைய ஊக்கம் குறைபட்டுவிடாதபடி பார்த்துக் கொள்கிற அந்த இளைஞருடைய வலிமையைக் கண்டு நான் வியந்தேன்.''

லோஹித்தின் தந்தை, தள்ளு வண்டியில் காய்கறிகளை விற்கிறவர், வறுமையான குடும்பம். ஆகவே, லோஹித்தை இயல்பாக நடக்கச் செய்வதற்கான எந்தவிதமான செயற்கை ஆதரவையும் அவர்களால் வழங்க இயலவில்லை.

லோஹித்துக்கு உடற்பயிற்சியும் விளையாட்டுகளும் மிகவும் பிடிக்கும் என்பதைக் கேள்விப்பட்டு; அவருக்கு உதவ விரும்பினேன்; என்னுடைய தொலைபேசி எண்ணை அவரிடம் கொடுத்தேன்; என்னை அழைக்கும்படி அவருடைய தந்தையிடம் சொல்லச் சொன்னேன் என்கிறார் அவர்.



*RC மைசூர் மிட்டவுன் தலைவர்-தேர்வு AN அயன்னா லோஹித்துடன்.*

ஆனால், அதன்பிறகு பல நாட்களாகியும் லோஹித்தின் தந்தை ஐயண்ணாவை அழைக்கவில்லை. ஆகவே, லோஹித்தைத் தேடி ஐயண்ணாவே அவருடைய பள்ளிக்குச் சென்றார். ஆனால், அந்தப் பள்ளியின் ஊழியர்கள் என்னுடைய கேள்விகளுக்குச் சரியாகப் பதில் சொல்லவில்லை. ஆகவே, கனத்த மனத்துடன் நான் திரும்பிவந்தேன்.

ஆனால், அவர் நம்பிக்கை இழக்கவில்லை. லோஹித்தைப்பற்றி ஒரு ரோட்டரியன் நண்பரிடம் பேசத் தொடங்கினார்.

அந்த நண்பர், நலப்பராமரிப்புத் தொழில்துறையைச் சேர்ந்தவர்; மைசூரில் செயற்கைக் கை, கால்களை வடிவமைத்துத் தயாரிக்கும் JSS மருத்துவமனையில் பணிபுரிகிறவர்.

அதன்பிறகு, மீண்டும் ஒருமுறை லோஹித்தின் பள்ளிக்குச் சென்றார் ஐயண்ணா. இந்தமுறை, அவரால் தலைமை ஆசிரியரைச் சந்தித்துப் பேச இயன்றது, சில கூடுதல் தகவல்களும் கிடைத்தன, லோஹித்தின் குறைபட்ட காலைப் புகைப்படமெடுத்துச் சில மருத்துவர்களிடம் தந்தார்.

அடுத்து, லோஹித்தின் உறவினரான நாகேந்திரா என்பவரைச் சந்தித்தார் ஐயண்ணா. அவருடைய உதவியுடன் லோஹித்தை மருத்துவ மனையில் அனுமதித்தார்.

தொடக்கத்தில் லோஹித்தைப் பார்த்த மருத்துவர்கள், இவருக்குச் செயற்கைக்காலைப் பொருத்தவேண்டுமென்றால், ஓர் அறுவைச்சிகிச்சை தேவைப்படும் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், லோஹித்தின் குடும்பத்தினரும் ஐயண்ணாவும் அறுவைச்சிகிச்சை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். ஆகவே, அந்த முயற்சி கைவிடப்பட்டது.



ஆனால், இந்தப் பதின்பருவத்து இளைஞருடைய கதையும், கபடிபோன்ற விளையாட்டுகளின் மீது அவருக்கிருக்கிற ஆர்வமும் பலரை ஈர்த்தன. ஐயண்ணாவும் லோஹித்துக்கு உதவியாகவேண்டும் என்கிற துடிப்புடன் தன்னுடைய முயற்சிகளைத் தொடர்ந்தார்.

இந்நிலையில், எங்கள் பள்ளித் தலைமையாசிரியையான ரம்யா அர்ஸூம் இந்த முயற்சியில் பங்கேற்றுக் கொண்டார்; லோஹித்துக் கென்று சிறப்பாக வடிவமைக்கப்பட்ட செயற்கைக் காலுக்கான பணத்தை இன்டராக்டர்ஸ் வழியாக வழங்க ஒப்புக்கொண்டார்.

இதற்குள், JSS மருத்துவ மனையில் பணியாற்றும் ரோட்டரியன் ஒரு நல்ல செய்தியுடன் வந்தார். அறுவைச் சிகிச்சை எதுவும் இல்லாமலேயே லோஹித்துக்கு ஒரு சிறப்புச் செயற்கைக் காலைப் பொருத்தலாம் என்றார்.

இந்தச் செயற்கைக் காலுக்காக ரூ.8,000 வழங்கினால் போதும் என்று சலுகை வழங்கியது JSS மருத்துவமனை. RC மைசூர் மிட்-டவுன் ஆதர வளிக்கும் இன்டராக்ட் சங்கம் அந்தத் தொகையைத் திரட்டி, மகிழ்ச்சியுடன் வழங்கியது. அதன் மூலம், தனக்குப் பொருத்தமான ஒரு செயற்கைக்காலைப் பெற்றார் லோஹித்.

இதைக் கண்ட ஐயண்ணாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி, இனி லோஹித் தடுமாற்றத்துடன் நடக்க வேண்டியதில்லை; இயல்பாக நடக்கலாம்; தனக்குப் பிடித்த விளையாட்டுகளில் பங்கேற்கலாம். இந்த அனுபவம் எனக்கு ஒரு பாடத்தையும் கற்றுத்தந்தது; ஒன்றைச் செய்ய வேண்டும் என்று நாம் மனமார நம்பினால், அதற்காக நம்மை உறுதியுடன் அர்ப்பணித்துக் கோண்டால், நம்மால் அதைச் செய்ய இயலும்!'' ■




Rotary
PEOPLE OF ACTION

# சென்னையில் பிங்க் ஆட்டோக்கள்

ஜெய்ஸ்ரீ

மிக விரைவில், பெண்களால் ஓட்டப்படும் பிங்க் ஆட்டோரிக்ஷாக்களைக் காணவுள்ளது சென்னை. RID 3232ன் ரோட்டரியன்களால் தான் இது சாத்தியமாகியுள்ளது.

சென்ற ஆண்டு ஜப்பான் சென்ற போது, இதைப்போன்ற திட்டத்தைக் கண்டேன். அதன்பிறகு, அது என்னுடைய கனவுத் திட்டமாகி விட்டது. பெண்கள் பொருளாதார ரீதியில் சுதந்தரம் பெற வேண்டும். அப்போதுதான் ஒட்டுமொத்தக் குடும்பமும் அவர்களோடு வளரும் என்றார். DG G சந்திரமோகன். சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற விழாவொன்றில் அவர் இதைக் குறிப்பிட்டார்.

நலிந்த பின்னணியைக் கொண்ட 100 பெண்களுக்கு ‘பிங்க் ஆட்டோ’க்களை நன்கொடையாக வழங்கவும், 200 பெண்களுக்கு ஆட்டோ ஓட்டக் கற்றுத்தரவும் இந்த மாவட்டம் திட்டமிட்டுள்ளது. இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ரோட்டரி சங்கங்கள் இந்தத் திட்டத்துக்கு ஆதரவளித்துள்ளன, பல ரோட்டரியன்கள் பெண்களுக்கான ஆட்டோரிக்ஷாக்களை வாங்கித் தந்துள்ளார்கள். ஹோட்டல் சவேராவின் மேலாண்மை இயக்குநரான நீனா ரெட்டி, CSR நிதியிலிருந்து, இரண்டு ஆட்டோக்களை நன்கொடையளித்தார்; PDG ராஜா ஸ்ரீனிவாசனும், DG சந்திரமோகனுடைய மனைவி மஞ்சுளாவும் இதேபோன்ற நன்கொடைகளை வழங்கினார்கள்; RC சென்னை சன்ரைஸ் தலைவர் அனீஸ் பேகம் மூன்று ஆட்டோரிக்ஷாக்களை வாங்கியளித்தார்; அம்பா ஸ்கை வாக் நிறுவனர் அம்பா பழனியப்பன் ரூ.1 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார், இப்படி இன்னும் பலர் உதவினார்கள்.

ஜூலை முதல் வாரத்தில் இந்தத் திட்டத்துக்கான பணிகள் தொடங்கியபோது, நகரின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள ஐந்து சேரிப்பகுதிகளை ஒரு குழு சென்று பார்த்ததாகவும், இந்தத் திட்டத்தால் பலன்பெறக்கூடிய தேவையுள்ள பெண்களை அடையாளம் கண்டதாகவும் குறிப்பிட்டார் திட்டத் தலைவர் சாந்தி செல்வம். நாங்கள் அவர்களுடைய சமூக-பொருளாதார நிலையை நன்கு உறுதிப்படுத்தி விட்டு தான் அவர்களைப் பயிற்சிக்குத் தேர்ந் தெடுத்தோம். பின்னர், பதினான்கு நாட்களுக்கு அவர்களை ஓர் ஓட்டுநர் பயிற்சி நிலையத்தில் சேர்த்தோம்.’’

இந்தப் பெண்களுக்கு பேட்ஜ்கள், ID அட்டைகள், உரிமம் ஆகியவை இந்த நிகழ்ச்சியின்போது வழங்கப்பட்டன; அரங்கில் எங்கும் அவர்களுடைய மகிழ்ச்சி, நம்பிக்கை பரவியிருந்தது. இது வாழ்நாள்முழுக்க உதவக்கூடிய ஒரு திறன்; இன்னும் பல பெண்கள் இந்த முயற்சியால் பலன்பெறுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்றார் சாந்தி.

இந்தத் திட்டத்தினால் பலன்பெற்றவர்களில் ஒருவர், இந்நகரின் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த மகாலட்சுமி (42). இவர் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காகப் பல ஆண்டுகளாகப் பலவிதமான வேலைகளைச் செய்துள்ளார்; மூன்றாண்டுகளுக்கு முன், இவர் ஓர் ஆட்டோவை வாடகைக்கு எடுத்தார். இவருடைய குடும்பத்தில் இவர்மட்டும்தான் சம்பாதிக்கிறார்; ஆகவே, வீட்டுச் செலவுகளையெல்லாம் கவனித்தபடி தன்னுடைய மகளுடைய பள்ளிக் கட்டணத்தையும் செலுத்துவது இவருக்கு எளிதாக இல்லை.

இந்நகரில் ஆட்டோரிக்ஷா ஓட்டிய முதல் சில பெண்களில் நானும் ஒருத்தி. என்னுடைய ஆட்டோவில் வரும்போது பாதுகாப்பாக




*ADGP M ரவி ஓட்டுனர் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆட்டோ ஓட்டுனர் உரிமம் மற்றும் பேட்ஜ் தருகிறார். DG G சந்திரமோகன், அவர் மனைவி மஞ்சுளா, திட்டத்தலைவர் சாந்தி செல்வம் மற்றும் மாவட்ட செயலாளர் கணபதி சுரேஷ் ஆகியோரும் உடன் உள்ளனர்.*



உணர்வதாகப் பல பெண்கள், சிறுமிகள் என்னிடம் சொல்லியுள்ளார்கள். அவர்கள் என்னுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வார்கள், என்னுடைய அர்ப்பணிப்பு, நம்பிக்கையைப் பாராட்டுவார்கள். ஆனால், இந்தப் பயணங்களின்மூலம் நான் சம்பாதித்த பணம் மாத வாடகைக்கும் பெட்ரோலுக்கும்தான் சரியாக இருந்தது. என்னுடைய மகளின் கல்விக்காக என்னால் எதையும் சேமிக்க இயலவில்லை. என்னுடைய ஆட்டோவில் வந்த ஒரு ரோட்டரி உறுப்பினர் என்னுடைய கதையைக் கேட்டார், உதவுவதாக வாக்களித்தார். இப்போது நான் வாடகையைப்பற்றி எண்ணாமல் என்னுடைய சொந்த ஆட்டோவை ஓட்டுவேன், இது எனக்கு மிக மகிழ்ச்சியளிக்கிறது என்று சிரிக்கிறார் மகாலட்சுமி. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக வழங்கப்பட்ட ஆட்டோ ஓட்டுநர் சீருடையாகிய புத்தம்புதிய பழுப்பு மேலங்கியை அணிந்துள்ளார் அவர்.

பெண் ஓட்டுநர்கள் நாள்தோறும் குறைந்தது ரூ.1,500 சம்பாதிக்கலாம் என்றும், எரிபொருள் போன்ற அவசியத் தேவைகளுக்குச் செல வழித்தது போக ரூ.1,000 எளிதாகச் சேமிக்கலாம் என்றார் சாந்தி.

தலைமை விருந்தினரான ADGP M ரவி, இந்த முயற்சிக்காக ரோட்டரியன்களைப் பாராட்டினார், சாலையில் பெண்களுடைய பாதுகாப்புக்கு இது பங்களிக்கும் என்றார். இந்த 200 பெண்களும் பெண் காவலர் தன்னார்வலர்களாகவேண்டும், காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஒரு பாலமாகச் செயல்படவேண்டும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை எதிர்த்துப் போராட உதவவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

போக்குவரத்து விதிமுறைகள், சாலை ஒழுங்குகளைப் பின்பற்றுகிற பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு வழங்குவதற்காக நீங்கள் ஒரு விருதை உருவாக்கலாம் என்று ரோட்டரியன்களைக் கேட்டுக் கொண்டார் அவர். இப்படிப்பட்ட பெண் ஓட்டுநர்கள் ஆண் ஓட்டுநர்களுக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக விளங்குவார்கள். ■

# பெண் ரோட்டரியன்களுக்கான ஒரு சிறப்புக் கருத்தரங்கம்

கிரண் ஜெஹரா

பெண் உறுப்பினர்கள் ரோட்டரியின் துடிதுடிப்பான மற்றும் முக்கியமான அங்கம், என்றார் RIDN A S வெங்கடேஷ். பெண் ரோட்டரியன்களுக்காக RC கார்கிஸ், RID 3170, கோல்ஹாப்பூரில் நடத்திய 'சம்ஹிதா' என்ற கருத்தரங்கில், RIDக்கள் 3190, 3160, 3150, 3141, 3142 மற்றும் 3131ஐச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பெண் பங்கேற்பாளர்களிடையே உரையாற்றும் போது அவர் இதைக் குறிப்பிட்டார். ரோட்டரி உலகம்முழுவதும் பெண்கள் சங்கத் தலைவர்களாக, மாவட்ட ஆளுநர்களாக, அலுவலர்களாகத் தலைமைப் பொறுப்புகளை ஏற்கத் தொடங்கியுள்ளார்கள். பன்னாட்டு ரோட்டரி மேலாண்மைக் குழுவின் 17 உறுப்பினர்களில் 8 பேர் பெண்கள் என்று தொடர்ந்து குறிப்பிட்டர் அவர், ஒவ்வொரு ரோட்டரியனும் தங்கள் சங்கத்தில் ஒரு பெண் உறுப்பினரையாவது சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ரோட்டரியில் பெண்கள் அமைப்பின் RID 3170 உறுப்பினரான கௌரி ஹைர்மத், பெண்கள் மீதான மதிப்பு மிகப்பெரிய அளவில் வளர்ந்துள்ளது என்றார். ரோட்டரியில் நான் என்னை ஒரு பெண்ணாகக் கருதுவதில்லை. நான் ஒரு ரோட்டரியன், அவ்வளவுதான், சமூகத்துக்குச் சேவையாற்றியபடி கற்றுக்கொள்ளவும் வளரவும் எனக்கு உதவிய ரோட்டரி குடும்பத்துக்கு நான் நன்றியுடன் உள்ளேன்.

1978ல், அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியாவைச் சேர்ந்த டுவார்டெ ரோட்டரி சங்கம் மூன்று பெண்களைத் தன்னுடைய உறுப்பினர்களாகும் படி அழைத்த போதிலிருந்து தொடங்கிய பெண்களுடைய போராட்டத்தை விவரித்தார் DG கிரீஷ் மசூர்கர். இதைத் தொடர்ந்து, அந்தச் சங்கத்தின் பதிவு திரும்பப்பெறப்பட்டது; அதை எதிர்த்து ஒன்பது ஆண்டுகள் நீதி மன்றப் போராட்டம் நடைபெற்றது; இதன் விளைவாக 1989ல் வெளியான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இணிஃல், 'ஆண்கள்மட்டுமே' ரோட்டரி உறுப்பினர்களாகலாம் என்ற நிபந்தனை நீக்கப்படலாம் என்று வாக்களிக்கப்பட்டது என்றார் அவர். தன்னுடைய மாவட்டத்தில் 700 பெண் உறுப்பினர்கள் இருந்ததாகவும், அந்த எண்ணை அதிகரிக்க நான் என்னால் இயன்ற அனைத்தையும் செய்வேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

RILMன் திட்டங்கள் இயக்குநர் ஜீலம் ராய் சௌத்ரி பேசியபோது, சம்ஹிதா போன்ற கருத்தரங்குகள் எங்களுடைய சாதனைகளைச் சுட்டிக் காட்டவும், சவால்களைத் துணிவுடன் எதிர் கொள்ளவும் வாய்ப்புகளை வழங்குகின்றன என்றார்.

மகப்பேறு மருத்துவரும் RC பெங்களூர் மேற்கு, RID 3190 உறுப்பினருமான டாக்டர் மீனாட்சி பரத், 'மாதவிலக்குதொடர்பான களங்கத்தை'ச் சரிசெய்கிற திட்டங்களில் ரோட்டரியன்கள் இன்னும் கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று சுட்டிக் காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசப்பட்ட மற்ற தலைப்புகள்: நலம், தலைமைப்பண்பு மற்றும் நீரைப் பாதுகாத்தல்.

பெண் ரோட்டரியன்கள் சேவைத் திட்டங்களில் இன்னும் மிகுதியாகப் பங்கேற்கவேண்டும், உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்தவேண்டும் என்று PDG ஷ்யாம்ஸ்ரீ சென், RID 3291, கேட்டுக் கொண்டார்.■




*மாநாட்டில் RIDN A S வெங்கடேஷ் மற்றும் DG கிரீஷ் மசூர்க்கர், PDG ஆனந்த் குல்கர்னி.*

# லிட்டில் பிக் ஹார்ட்ஸ் திட்டம் 100வது அறுவை சிகிச்சையை முடித்தது

ரோட்டரி செய்திக்குழு



*TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி ஒரு குழந்தையை நலம்பெற வாழ்த்துகிறார். DG G சந்திரமோகன், PDG CR ராஜு மற்றும் திட்டத்தலைவர் B தாக்ஷாயினி ஆகியோரும் உடன் உள்ளனர்.*

RC மீனம்பாக்கத்தின் லிட்டில் பிக் ஹார்ட்ஸ் திட்டம், RID 3232, வறிய குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளில் பிறவி இதய குறைபாடுகளை (CHD) அறுவை சிகிச்சை மூலம் திருத்துகிறது. TRF, மற்றும் கனடா, ஆஸ்திரேலியா, இத்தாலி மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 11 ரோட்டரி கிளப்புகளுடன் இந்த கிளப், குழந்தைகளுக்கு இது போன்ற 100 அறுவை சிகிச்சைகளை செய்ய திட்டமிட்டிருந்தது. இதுவரை, சென்னையின் மூன்று மருத்துவ மனைகளில் செய்யப்படும் சிகிச்சை களுக்காக ரூ.56 லட்சம் செலவிடப் பட்டுள்ளது, மேலும் மற்றொரு தன்னார்வ தொண்டு நிறுவனமான ஜெனிசிஸ் பவுண்டேஷன் ஆதரிக்கிக்கும் என்று திட்டத்தின் முதன்மை தொடர்பாளர் B தாக்ஷாயனி தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பிப்ரவரியில் PRID C பாஸ்கரால் அதிகாரப் பூர்வமாக தொடங்கப்பட்ட இத்திட்டம் இப்போது 100வது அறுவை சிகிச்சையைத் தொடுகிறது. TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, DG G சந்திரமோகன் அறுவை சிகிச்சை செய்து கொள்ளவிருக்கும் குழந்தையையும் வேறு பயனாளிகளையும் சந்தித்தனர். ■

---



*தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் சுகாதார அமைச்சர் C விஜயபாஸ்கர் அவர்களுடன் DG G சந்திரமோகன் மற்றும் செயலாளர் கணபதி சுரேஷ்.*

## எண்ட் போலியோ ரோட்டரியின் இமேஜை மேம்படுத்துகிறது

RID 3232 அண்மையில் முதல்வரின் முகாம் அலுவலகத்தில் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்ள ஒரு NID முகாமை ஏற்பாடு செய்தது.

கிரேட்டர் சென்னை கார்ப்பரேஷனின் அரசு அதிகாரிகளுடன் DG G சந்திரமோகன், மாவட்ட போலியோபிளஸ் தலைவர் C முத்துசாமி , மாவட்ட செயலாளர் கணபதி சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். முதல்வர் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகளை வழங்கி இந்தியாவிலும் உலகெங்கிலும் போலியோவை ஒழிப்பதில் ரோட்டரியின் பங்கை பாராட்டினார். NID முகாம்களில் குழந்தைகளுக்கு பொம்மைகள் பரிசாக வழங்கப்பட்ட விழா இமேஜை மேம்படுத்தியதாக முத்துசாமி கூறினார். ■

# அறிமுகம்: தூய்மையான சமையலறைகள்

ஜெய்ஸ்ரீ



*சமையலறை உபகரணங்களை DGN மயூரேஷ் வர்கே முன்னிலையில் பயனாளி-நிறுவனம் ஒன்றிற்கு அளிக்கின்றனர்.*

ஹிராநந்தானி எஸ்டேட் ரோட்டரி சங்கம், RID 3142, ஒரு தனித்துவமான திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டம், ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற பொது அமைப்புகளில் உள்ள மோசமான சமையலறைகளைத் "தூய சமையலறை"களாக மாற்றுகிறது.

பாதுகாப்பான உணவை வழங்கமுடிந்தால் நல்லது என்றெல்லாம் எண்ணக் கூடாது, அது ஒரு கடமை. குறிப்பாக, குழந்தைகள், முதியவர்களுக்கு உணவு பரிமாறும்போது இதை மேலும் அக்கறையுடன் கவனிக்கவேண்டும் என்கிறார் சங்கத் தலைவர் டாக்டர் நம்ராதா ஸ்ரீவஸ்தவ். இந்தத் திட்டத்தின் நோக்கங்கள், சமையலறை உள் கட்டுமானத்தை மேம்படுத்துவது, பழுது பார்ப்பது, வசதிகளை வழங்குவது, பாதுகாப்பை மிகுதியாக்குவதற்கும், உணவு பல விதங்களில் கெடுவதைத் தடுப்பதற் காகவும் தூய்மைத் தரங்களை உயர்த்துவது. தூய இந்தியா, நலமான இந்தியா என்ற நோக்கத்துடன் பணி யாற்றிவரும் முயென்ஜெர் பாரத் அமைப்பின் ஆதரவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

டிசையர் சொசைட்டி என்பது, HIVயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 50பேரைக் கவனித்துக்கொள்ளும் ஆதரவற்றோர் இல்லமாகும். இங்கு நாங்கள் ஒரு குளிர் பதனப்பெட்டி, பாத்திரங்கள், வழங்கினோம் என்கிறார் நம்ராதா.

அடுத்த சமையலறை, 30 முதியவர்கள், 20 ஆதரவற்ற பெண்களைக் கவனித்துக் கொள்ளும் வாத்சல்யா அறக்கட்டளையின் சமையலறை. இங்கு நாங்கள் சமையலறையை முற்றிலும் மாற்றியமைக்க வேண்டியிருந்தது.'' சுவர்களுக்கு வண்ணம் பூசப்பட்டது, புதிய அலமாரிகள், சமையல் தளங்கள் அமைக்கப்பட்டன, தரை புதிதாக அமைக்கப் பட்டது, மின்சார வயர்கள் மீண்டும் அமைக்கப் பட்டன. இவற்றையெல்லாம் செய்தபிறகு, ஒட்டு மொத்த மாற்றத்தையும் கண்டு நாங்கள் மனநிறை வடைந்தோம். ஒரு வீட்டில் மிக முக்கியமான பகுதி, சமையலறைதான். அங்கிருந்துதான் எல்லாருக்கும் நலம் வழங்கும் உணவு தயாராகிறது; ஆகவே, அங்கு சமைப்பவருக்கு ஊக்கம் தரும்வகையில் சமையலறை மிகச்சிறப்பாக இருக்கவேண்டும் என்கிறார்.

DGE மயூரேஷ் வார்கெ, மாவட்டச் செயலாளர் வினித் ஷா, திட்ட இயக்குநர் பிரதீப் தாகுர், சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில், இந்தச் சமையலறைகள் அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட்டன.

இந்தத் திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் இன்னும் எட்டுச் சமைய லறைகளை புதுப்பிக்கும்.

மேலும் பயன்படுத்தப் பட்ட சமையல் எண்ணெயை பாதுகாப்பான மற்றும் முறையான அகற்றலுக்காக உணவகங்களுடன் பணியாற்றிக் கொண்டிருக் கின்றன. இல்லாவிட்டால்



*செயற்கை கை பொருத்தும் முகாம்.*

இந்த எண்ணெய் தெரு வோர வடாபாவ் மற்றும் சமோசாக் கடைக்காரர்களுக்கு விற்கப் பட்டு விடும். புற்று நோயை வரவழைக்கும் இந்தச் செயலை நாம் தடுக்கவேண்டும் என்கிறார் நம்ராதா. முயென்ஜெர் பாரத் அமைப்பு பயன்படுத்தப்பட்ட எண்ணெயை வாங்கி, அதைச் சுற்றுச் சூழலுக்கு இதமான உயிரியல் டீசலாக மாற்றுகிறது.

### செயற்கைக் கைகள்

மிகச் சமீபத்தில், இச்சங்கமும், RC பூனா டவுன்ட்டவுன், RID 3131, RC கல்யாண் ஆகியவையும் இணைந்து, தானே-யில் LN4 செயற்கைக் கைகள் பொருத்தல் முகாமை நடத்தின. அமெரிக்காவைச் சேர்ந்த எல்லென் மெடோஸ் அறக்கட்டளை உருவாக்கிய இச்செயற்கைக் கைகள், விபத்து அல்லது மின் அதிர்ச்சியால் தங்களுடைய கைகளை இழந்த 500 பேருக்கு LN-4 கைகள் பொருத்தப்பட்டன. தங்களுடைய புதிய “கைகளை”ப் பயன்படுத்தி எப்படி எழுதவேண்டும், பொருட்களை எப்படிப் பிடிக்கவேண்டும் அல்லது தூக்க வேண்டும் என்றெல்லாம் தொழில்நுட்ப வல்லுனர்கள் அவர்களுக்குப் பயிற்சியளித்தார்கள். ■

---

# ஜக்தல்பூரில் நடமாடும் நர்ஸிங் பணி

ரோட்டரி செய்திக்குழு

ஜெக்தல்பூரில் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்கும் திட்டமான ஸ்பர்ஷ், RC ஜெகதல்பூர், RID 3261, ஆல், கிறிஸ்ட் நர்சிங் கல்லூரியுடன் இணைந்து தொடங்கப்பட்டது. குறிப்பிட்ட மொபைல் எண்ணிலிருந்து அழைப்பு களைப் பெற்ற பின்னர் நோயாளிகளுக்கு உதவ கார் மற்றும் துணை மருத்துவர்களின் குழு வருகை தருகின்றன. “அழைப்பு வந்ததும், நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் சேவைகளை வழங்குவதற்காக செல் கின்றன’’ என்று RC ஜெகதல்பூரின் முன்னாள் தலைவர் சத்தியநாரைன் அகர்வால் கூறினார்.

வழக்கமாக, 8 மணி முதல் 11 மணி வரை




செய்யும் சேவையில், படுக்கை பராமரிப்பு, ரத்த அழுத்தம், சர்க்கரை, டெம்பரேச்சர் சோதனை, ஸ்பாஞ்ச் குளியலுடன் மருந்து அளித்தல் ஆகியவை அடங்கும். ஒவ்வொரு நாளும் வரும் அழைப்புகளில் ஒவ்வொரு நோயாளியையும் மதிப்பீடு செய்து, நோயாளியின் வீட்டிற்கு கார் வருகையை முன்கூட்டியே திட்டமிடு கிறோம்.” ஆம்புலன்ஸை ரோட்டரி வழங்க நர்ஸிங் கல்லூரி பாராமெடிக்கல் களை ஸ்பர்ஷ் திட்டத்திற்கு வழங்குகிறது. அனைத்து சேவைகளும் முற்றிலும் இலவசம், என்று அகர்வால் கூறினார். ■

# திட்டமிட்ட உணவு, உடற்பயிற்சியுடன் ஆரோக்கியமாக இருங்கள்

V முத்துகுமரன்



உலகின் மிகப்பெரிய உயிர்கொல்லி எது? புகையோ மதுவோ அல்ல, மாறாக கலோரிக்கள் நிறைந்த உணவு.'' பயங்கரவாதத்தை விட மோசமான, ஆரோக்கியமற்ற உணவு அதிகமான மக்களைக் கொல்கிறது. உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம் மற்றும் நீரிழிவு போன்ற தொற்றுகளினால் (NCD) இந்தியர்கள் மரபணு ரீதியாக பாதிக்கப்படுகின்றனர் என்று மும்பையின் முன்னணி நெஃப்ராலஜிஸ்ட் டாக்டர் உமேஷ் கன்னா கூறினார். ஜீவன் ஸ்பர்ஷ் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளரான, அவர் நேர்மறை ஆரோக்கிய திட்டத்தின் முக்கியமானவர்: ஆரோக்கியமற்ற உணவும் உடற்பயிற்சியில்லாத வாழ்க்கை முறைகளிலிருந்தும் எழும் நோய்களை ஸ்டாப் NCDக்கள் திட்டம் நிறுத்த முயற்சிக்கின்றது.

இந்தூரின் ரோட்டரி இன்ஸ்டிடியூட்டில் கனெக்ட் வித் ஹெல்த் அமர்வில் பேசிய மும்பை சிறுநீரக அறக்கட்டளையின் தலைவரான கன்னா, மூன்று இந்தியகளில் ஒருவர் உடல் பருமனாக இருப்பதாகவும், நாட்டிலிருக்கும் 17 மில்லியன் பருமனான குழந்தைகள் 2025க்குள் மக்கள் தொகையில் ஒரு 90 சதவீதமாக இருப்பார்கள் என்றார். உலகளவில், ஒரு வருடத்தில் NCDகளால் இறக்கும் 41 மில்லியன் மக்கள் மொத்த இறப்புகளின் 71 சதவீதமாகும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தியாவில், உப்பு, சர்க்கரை மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் சராசரி தினசரி நுகர்வு WHO பரிந்துரைத்த அளவை விட அதிகமாக இருப்பதால், இறப்புகளில் 60 சதவீதம் NCDகளால் இருக்கிறது.'' திடீர் கார்டியக் அரெஸ்ட் என்று எதுவும் இல்லை, உடலில் இதுபோன்ற ஆபத்தான தாக்குதலுக்கு பல ஆண்டுகள் ஆகும், அதற்கு நீங்கள் மட்டுமே பொறுப்பு'' என்று அவர் கூறினார்.

இந்தியர்களில் 25 சதவிகிதத்தினர் உயர் ரத்தஅழுத்தம் மற்றும் 20 சதவிகிதத்தினர் சராசரி சர்க்கரை அளவை விட அதிகம் உள்ளவர்களாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.'' ஆபத்தான விஷயம் என்னவென்றால், கிராமப்புறங்களில், அவர்கள் NCDகளுக்கு வழிவகுக்கும் இது போன்ற ஆபத்து காரணிகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறியாமல் உள்ளனர்,'' என்றார். இந்த ஆபத்தான போக்கை மாற்றியமைக்கும் நோக்கில் ஸ்டாப் NCD திட்டத்தை ரோட்டரி துவங்கியுள்ளது. ரோட்டரி NCD சவாலை ஏற்றுக்கொள்வதற்கான திறன், ஊடுருவலின் ஆழம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. விழிப்புணர்வை உருவாக்கும் அதே நேரம், திறன் மேம்பாட்டை அதிகரித்து அரசாங்கத்துடன் இணைந்து உணவு லேபிளிங்கை கட்டாயமாக்க அழைப்பு விடுத்துள்ளது, என்று அவர் விளக்கினார்.

ஒரு குழு விவாதத்தில், மும்பை நெஃப்ராலஜி குழுமத்தின் செயலாளர் டாக்டர் ஹேமல் ஷா, இரத்த அழுத்தத்திற்கு மருந்து எடுத்துக்கொள்வதை நிறுத்தலாம், இளைஞர்கள் அதிக BP (140/90) நோயால் பாதிக்கப்பட மாட்டார்கள் போன்ற நடைமுறையில் உள்ள சில கட்டுக்கதைகளை பற்றி குறிப்பிட்டார் அறிகுறிகள் தெரியாமல் இருக்கக்கூடும் என்பதால் நீங்கள் BP அளவை தவறாமல் சரிபார்க்க வேண்டும். சிகிச்சையளிக்கப்படாவிட்டால், அதிக BP உறுப்புகளை சேதப்படுத்தி, பல நோய்களுக்கு வழிவகுக்கிறது.

மும்பையின் குளோபல் மருத்துவ மனைகள், நீரிழிவு துறை டாக்டர் ஜமுருத் M படேல் வைட்டமின்கள் மற்றும் ஆரோக்கியமான உணவு எடுக்கும்படி அறிவுறித்தினார். உங்களுக்கு பிடித்த உணவை அதிகமாக உண்ணுவதற்கு பதில் சரியான நேர இடைவெளியில் மிதமாக சாப்பிடுங்கள். புகை, மது ஆகியவற்றைத் தவிர்த்து, தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். பேக் செய்யப்பட்ட அனைத்து உணவுகளிலிருக்கும் தீங்கு விளைவிக்கும் பொருட்கள் NCDகளின் காரணிகளை அதிகரிக்கும்.

மறைமுகமாக தாக்கும்




PRID *மனோஜ் தேசாய்,* Dr *உமேஷ் கண்ணா,* RID *பரத் பாண்ட்யா,*
Dr *சந்தீப் ஜுல்கா,* Dr *ஜமுத் பட்டேல் மற்றும்* Dr *ஹேமல் ஷா.*

நீரிழிவு நோய் பெரும்பாலும் யதேச்சையாக நோயாளிக்கு இருப்பது கண்டறியப்படுகிறது என்று இந்தூரின் CHL மருத்துவமனையின் எண்ட்ரோக்ரினாலஜிஸ்ட் டாக்டர் சந்தீப் ஜூல்கா தெரிவித்தார். உடற்பயிற்சி க்கான நேரமில்லை என்பது நோய்களுக்கான அழைப்பாகும்.'' ஆபத்தான விஷயம் என்னவென்றால், குழந்தைகளுக்கு கூட டைப்-2 நீரிழிவு நோய் தாக்குவது கடந்த 18 ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. பெற்றோர் இருவரும் நீரிழிவு நோயாளிகளாக இருந்தால், பிள்ளை களுக்கும் நீரிழிவு நோய் ஏற்பட 50 சதவீதம் வாய்ப்பும் ஒரு பெற்றோர் நீரிழிவு நோயாளியாக இருந்தால், குழந்தைகளுக்கு வரும் வாய்ப்பு 25 சதவீதமாகும். சராசரி, நீரிழிவு நோயாளி தங்கள் வாழ்க்கையில் ஆறு ஆண்டுகளை இழக்கிறார்'' என்றார்.

25க்கும் மேற்பட்ட BMI (பாடி மாஸ் இன்டெக்ஸ்) உடல் பருமனுக்கு உட்பட்டது என்றும், 23–25 உங்களை ஓவர் வெய்யிடாக்குகிறது என்றும் Dr ஹேமல் ஷா கூறினார்.'' உலகில் உடல் பருமன் தொடர்பான கோளாறுகளால் சுமார் 30 லட்சம் பேர் இறக்கின்றனர், மேலும் புற்று நோய்களில் 20 சதவீதம் அதிகப் படியான கொழுப்பு திசுக்க ளால் ஏற்படுகிறது.''

தனது இறுதிக் கருத்துக்களில், RID பரத் பாண்ட்யா, நான்கு பேனலிஸ்டுகளும் ஒரு நோயற்ற வாழ்க்கைக்கான சில நல்ல வழிமுறைகளை பரிந்துரைத்துள்ளனர் என்றார். PRID மனோஜ் தேசாய் மருத்துவர்களை வாழ்த்தி பேசினார்.

புகைப்படம்: V முத்துகுமரன்

Rotary PEOPLE OF ACTION

# போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எடை குறைந்த காலிபர்ஸ்

ரோட்டரி செய்திக்குழு



2011ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து போலியோவை ஒழித்தது ரோட்டரிக்கு ஒரு மைல் கல்லாக இருந்த போதிலும், இந்த முடக்கும் நோயினால் பாதிக்கப்பட்டவர் களை பற்றி சிந்திப்பவர்கள் குறை வானவர்களே. பெரும்பாலும் வயதானவர்களான இவர்கள் உலோகம் மற்றும் தோல் ஆகியவற்றால் ஆன பழைய காலிப்பர்களைக் கொண்டு,தங்கள் வாழ்நாள் முழுவதும் கருப்பு தோல் காலணிகளைப் பயன்படுத்தும் படியான கட்டாயத்திலுள்ளனர்.

RC ஜெய்ப்பூர் மிட் டவுன், RID 3054, குளோபல் போலியோ ரிஹாபிலிடேஷன் இனிஷியேட்டிவ் (GPRI) தொடங்கியுள்ள பிரச்சாரம் போலியோ நோயால் பாதிக்கப் பட்டவர்களின் வலியைக் குறைக்க செலவு குறைந்த தொழில்நுட்பத்தை வழங்குகிறது. Dr PK சேதியின் வழிகாட்டுதலின் கீழ் சந்தோக்பா துர்லாப்ஜி மெமோரியல் மருத்துவ மனையின் தொழில்நுட்ப அறிவியல் துறையின் நிதியுதவியின் கீழ் ஒரு ஆராய்ச்சி செய்து குறைந்த விலையில், பயன்படுத்த எளிதான, இலகுரக தெர்மோபிளாஸ்டிக் காலிப்பர்களை உருவாக்கியுள்ளோம் என்றார் கிளப் உறுப்பினர் Dr அனில் குமார் ஜெயின்.

இந்த நவீன காலிப்பர்களுக்கு நகர்த்துவதற்கு குறைந்த ஆற்றல் தேவைப்படுவதோடு நபர் தனது விருப்பப்படி காலணிகளைப் பயன்படுத்தலாம். தவிர, இந்த புரோஸ்தெடிக்கை அனைத்து வகையான தசைக் கூட்டு மற்றும் பக்கவாத கோளாறுகளுக்கும் பயன்படுத்தலாம், என்றார்.■

# RC மாண்ட்வியின் வேலை வாய்ப்பு முகாம்




140 இளைஞர்களுக்கு தீபாவளி பரிசாக, RID 3054, RC மாண்டவி, கட்சின் மாவட்ட வேலைவாய்ப்பு மையம் மற்றும் ஐ.டி.ஐ.யுடன் இணைந்து ஏற்பாடு செய்த வேலை கண்காட்சியில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வேலைவாய்ப்பு கண்காட்சியில் நபர்களை அதே இடத்து நேர்காணல் களுக்காக ரோட்டரி ஹாலில் சிறந்த நிறுவனங்கள் கலந்து கொண்டதை பாராட்டிய, சிறப்பு விருந்தினர் மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி எம்.கே.பாலா மாண்ட்வியின் இளைஞர்களுக்கு இது போன்ற வாய்ப்பை அளித்த ரோட்டரிக்கு நன்றி தெரிவித்தார். வந்தவர்களில் 140 பேர் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்ட பின் நிறுவனங்கள் ஆட்சேர்ப்பு செய்தன.

கிளப் தலைவர் பவின் கணத்ரா வரவேற்க, திட்டத் தலைவர் அக்ஷய் மேத்தா பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் ரோட்டரியின் உலகளாவிய அணுகல் குறித்து விளக்கினார். நிகழ்ச்சியை Rtn பிரதிக் H ஷா தொகுத்து வழங்க பல ரோட்டேரியன்கள் கண்காட்சிக்கு ஆதரவளித்தனர். கிளப் செயலாளர் தேஜஸ் வசானி நன்றி கூறினார்.■

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்பு

## ஸ்கேல் கிராண்ட்ஸ் புரோகிராம்கள்

ஒரு சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட போட்டி மானியங்களாகும். சிறந்த விளைவுகள் மற்றும் தாக்கங்களுடன் நிலையான தலையீட்டைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிடத்தக்க பகுதியில் உள்ள ஏராளமான மக்களுக்கு இந்த மானியம் பயனளிக்கும். ஒவ்வொரு மானியமும் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை, ரோட்டரியின் கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை இணைக்கும் செயல்பாடுகளை ஆதரிக்கும். மானிய முன்மொழிவு செயல்முறையைத் தொடங்க, https://rotary-foundation.embark.com/auth/login என்ற இணைப்பைப் பயன்படுத்தவும்.

## ஒவ்வொரு ரோட்டரியன், ஒவ்வொரு ஆண்டும்

ஒவ்வொரு ரோட்டரியன், ஒவ்வொரு ஆண்டும் (EREY) என்பது அறக் கட்டளையின் ஆண்டு நிதிக்கான ஆதரவை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட நிதி திரட்டும் முயற்சி யாகும். ஒவ்வொரு ரோட்டேரியனும் தனிப்பட்ட பரிசை அளிப்பதோடு ஆண்டு நிதிக்கும் பங்களித்தால் ரோட்டரியால் சாதிக்க முடியாத திட்டமே இருக்காது.

ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டு நிதிக்கு குறைந்தபட்சம் $25 கொடுக்கும் போது 100% ஒவ்வொரு ரோட்டரியன், ஒவ்வொரு ஆண்டு கிளப் பேனர் விருது வழங்கப்படுகிறது. இந்தியாவில் இந்த சிறப்பு நூற்றாண்டில் ரோட்டரியின் இந்த பேனரை அடைய உங்கள் கிளப்புக்கு உதவுங்கள்.

## கிளப் பேனர்கள்

ரோட்டரி ஆண்டில் TRFக்கான பெரும் ஆதரவுக்கு ரோட்டரி கிளப்புகளுக்கு கிடைக்கக்கூடிய பல்வேறு கிளப் பேனர்களின் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

- 100% அறக்கட்டளை கொடுக்கும் கிளப்
- 100% ஒவ்வொரு ரோட்டரியன், ஒவ்வொரு ஆண்டு கிளப்
- வருடாந்திர நிதி வழங்கலில் முதல் மூன்று தனிநபர் வழங்கல்
- 100% பால் ஹாரிஸ் சொசைட்டி கிளப்
- 100% பால் ஹாரிஸ் ஃபெலோ கிளப் (இது ஒரு முறை அங்கீகாரம்)

மேலே பட்டியலிடப் பட்டுள்ள ஒவ்வொரு பேனருக்கும் எதிராக தங்கள் கிளப்பின் நிலையை சரிபார்க்க, ரோட்டரி தலைவர்கள் மை ரோட்டரி மூலம் கிடைக்கும் கிளப் அறக்கட்டளை பேனர் அறிக்கையைப் பயன்படுத்தலாம்.

## ரோட்டரியன்-டிஜிட்டல்

ரோட்டேரியன் டிஜிட்டல் பிரிண்ட் பிரதியின் ஒரு முழுமையான அச்சாகும். இ-காபி பாதி விலையில் கிடைக்கிறது (அரை வருட காலத்திற்கு 6 அமெரிக்க டாலர்) மற்றும் அந்தந்த ரோட்டரி கிளப் அதிகாரிகள் மூலம் data@rotary.orgக்கு இ மெயில் மூலம் சந்தா பெறலாம். உறுப்பினர்கள் சரியான இமெயில் முகவரியைக் கொண்டிருக்க வேண்டும்.

## ரோட்டரி ஷாப்

ரோட்டரி உறுப்பினர்களுக் கான ரோட்டரி தயாரிக்கப் பட்ட வெளியீடுகள் மற்றும் பொருட்களை வாங்கு வதற்கான ஆன்லைன் தளமான ரோட்டரி ஷாப் ஏப்ரல் 2020க்குள் அதிகாரப்பூர்வமாக செயல்பாட்டை நிறுத்தி விடும்.

ரோட்டரியின் மிகவும் பிரபலமான அச்சு வெளியீடுகள் பல்வேறு ரோட்டரி தளங்கள் மூலம் டிஜிட்டல் முறையில் வழங்கப்படும், ரோட்டரி பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட உரிம விற்பனையாளர்கள் மூலம் நேரடியாக வாங்க முடியும். அத்தகைய விற்பனையாளர்களின் பட்டியல் மை ரோட்டரி மூலம் கிடைக்கிறது.

ரோட்டரி ஷாப்பை மூடிய பின், ரோட்டேரியர்களிடமிருந்து வெளியீடுகள் அல்லது பொருட்களுக்கான எந்தவொரு ஆர்டரையும் நாங்கள் இனி எடுக்க மாட்டோம்.■


## STATEMENT ABOUT OWNERSHIP

Statement about ownership and other particulars about *Rotary News Tamil* to be published in the first issue of every year after the last day of February

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Chennai - 600 008 |
| 2. | Periodicity of its publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | P T Prabhakar |
| | Nationality | : | Indian |
| | Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 4. | Publisher's Name | : | P T Prabhakar |
| | Nationality | : | Indian |
| | Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 5. | Editor's Name | : | Rasheeda Bhagat |
| | Nationality | : | Indian |
| | Address | : | 25, Jayalakshmipuram<br>1st Street<br>Nungambakkam<br>Chennai - 600 034 |
| 6. | Name and address of individual who owns the newspaper and partner or shareholders holding more than one percent of the total capital | : | Rotary News Trust<br>Dugar Towers, 3rd Floor<br>34, Marshalls Road<br>Egmore<br>Chennai - 600 008 |

I, P T Prabhakar, declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Chennai - 600 008
1st March, 2020

sd/-
P T Prabhakar




# ஏழைக் குழந்தைகளுக்கும் குறைந்தபட்ச வாய்ப்பை கொடுங்கள்

சந்தியா ராவ்

*குறைந்தபட்ச வாய்ப்பைக் கொடுத்தால் இந்தியாவின் குழந்தைகள் அடைய முடியாதது எதுவும் இல்லை. ஒரு சமீபத்திய புத்தகம் அவர்களுடைய கல்வியை பற்றி ஏன் சிந்திக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது.*

ரோட்டரி செய்திகள் வாசகர்கள் இந்தியாவின் கல்வி முறை யதார்த்தைக் தெரிந்திருக்கிறார்கள். ரோட்டரி எண்ணற்ற திட்டங்களில் ஈடுபட்டுள்ளதன் மூலம் குழந்தைகளுக்கு தரமான கல்வியை அணுகக்கூடிய தூரத்தில் கொண்டு வர முயற்சிக்கிறது. டீச் ஃபார் இந்தியா (TFI) திட்டத்துடன் சிட்டி ஆபரேஷன்ஸின் தலைவர் சந்தீப் ராய் எழுதிய கிரே சன்ஷைனின் அட்டைப்படத்தில் இடம்பெற்ற இரண்டு பிரகாசமான சிறுமிகளைப் குழந்தைகள் ரசிக்கின்றனர்.

இந்த இரண்டு ஆண்டு ஃபெல்லோஷிப் திட்டம் சிஸ்டத்தை திருத்தும் முயற்சியாக இளைஞர்களை இந்தியா முழுவதும் உள்ள அரசு வகுப்பறைகளில் முழுநேர ஆசிரியர்களாக்குகிறது. இதுவரை, இதுபோன்ற 4,000 ஆசிரியர்கள் அரசு பள்ளிகளில் குழந்தைகளுடன் பணியாற்றியது அவர்களின் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் பல சாதகமான வழிகளில் பாதித்துள்ளது. மேற்கில் உள்ள மதிப்பு மிக்க பள்ளிகள்/பல்கலைக் கழகங்களில் உயர் படிப்புகளுக்கு செல்ல வசதியற்ற குழந்தைக்கு அதிகாரம் அளிக்க இவர்கள் பணி பயனுள்ளதாக உள்ளது.

அமெரிக்காவில், மளிகை கடை வைத்திருந்தவரின் குழந்தையான சந்தீப் ராய் மிஸ்ஸிஸிப்பியின் மெத்தாடிஸ்ட் சர்ச்சில் கீத் டாங்கிலின் பிரச்சார உரையைக் கேட்டு மருத்துவம் பயிலுவதாக இருந்தவர் மனம் மாறினார். “துன்பத்தில் இருப்பவர்களின் நிலைக்கு அவர்கள் உழைக்காதது மற்றும் விதியை காரணாக்குவது மிகவும் எளிது’’ என்று டாங்கல் கூறினார். “அதைவிட கடினம் அவர்களை விட நாம் கூடுதல் தகுதிவாய்ந்தவர்கள் என நினைப்பது. நாம் அனைவருக்கும் எந்த பேதமுமின்றி கருணை தேவைப்படுகிறது’’.




கருணை தேவை என்ற சொற்றொடர் சந்தீப் ராயை கீத்துடன் தொடர்பிலிருக்க உந்துதலாக இருந்ததோடு அடுத்த மூன்று ஆண்டுகள் சேவை, ஏழ்மை ஆகியவற்றை பற்றி சிந்திக்க தூண்டியது. பின், அவர் மருத்துவத்தை விடுத்து, டீச் ஃபார் அமெரிக்கா என்ற திட்டத்தில் சேர்ந்தார். இந்த வாழ்க்கை மாறும் முடிவு அவரை இறுதியில் இந்தியாவின் டீச் ஃபார் இந்தியா குடும்பத்தில் பங்கேற்க வைத்தது.

கிரே சன்ஷைன் ராயுடன் சில ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பயணங்களை பதிவு செய்கிறது. ராய் உண்மையான கதைகளைப் பகிர்ந்து கொள்கிறார். உதாரணமாக, பீகாரில் இருந்து குடிபெயர்ந்த ஒடு தொழிலாளியின் மகள் நிஷி, ஒரு மருத்துவர் ஆக கனவு காண்கிறார். அவள் குறைந்த வருவாயிலிருக்கும் மக்களை சமூகம் எப்படி தாழ்வாக்குகிறது என்பதை தெரிவிக்கிறாள். நாங்கள் சோம்பேறி என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அது உண்மை இல்லை.... உலகம் எங்களை மக்களாகக் கூட பார்ப்பதில்லை. அவர்கள் எங்களிடமிருந்து விலகி இருக்கிறார்கள். அந்த ஒதுக்குதல், எங்கள் ஆற்றலை கட்டுப்படுத்துகிறது “இந்தியாவில் இது ஒரு அடிப்படை உண்மை என்பதை அவர் உணருகிறார்.

வாசகர்கள் இதைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருப்பார்கள். போபாலில் குழந்தைகளுடன் பணியாற்றுபவர் நம்முடைய கல்வி முறை குழந்தைகளை தோல்விக்காக பரிசோதிப்பதாக உள்ளதால் நான் என் குழந்தைகளை பள்ளியை விட்டே எடுக்க விரும்புகிறேன் என்றார். இந்தச் சூழலில் பல்வேறு ஆய்வுகள் எதிர்பார்ப்புகள் குழந்தைகளின் வாழ்வில் முக்கிய பங்காற்றுகின்றன என்பதோடு பின்னணி எதுவாக இருப்பினும் தரமானவர்கள் எப்போதும் சிறப்பாக செயல்படுவதாக கூறியது அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

அதே சமயம் நடுத்தர/உயர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த தருண் போன்ற இளைஞர்கள், ஐ.ஐ.டி நுழைவுத் தேர்வுக்குத் தயாராவதற்கு பயிற்சி மையங்களில் சேர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதே தருண், பயிற்சி மையங்களினால் சோர்ந்து அதை விட்டு நாடு முழுவதும் சுற்றி ஏழ்மையை பார்த்து உணர்ந்து பின்னர் பிட்ஸ் பிலானியில் படித்து இந்துஸ்தான் லீவரில் பணிக்கு சேர்ந்ததை ராய் குறிப்பிடுகிறார். அவர்

TFI ஃபெல்லோவாக இணைந்த போது வியப்படைந்தவர்கள் பலர்.

இந்த இளைஞர்களும் அவர்களின் குழந்தைகளும் தங்களின் கனவுகள் யதார்த்தங்களுடன் வாசகரின் இதயத்தை தொடுகின்றனர். சில சமயங்களில், அரசியல் சக்திகள் சமூக மற்றும் பொருளாதார மாறுபாடுகளால் அவர்களின் கனவுகள் தூக்கி எறியப்படுகின்றன. குழந்தைகள் சமூகங்களின் போராட்டங்களை சொல்லும் இப்புத்தகம் 'தேசிய வாதிகள்' மற்றும் 'சீர்திருத்தவாதிகள்' என்று காட்டிக் கொள்ளும் தனிநபர்களின் ஒவ்வொரு பெரிய, பிளவுபடுத்தும் பார்வையினை உடைக்கிறது. அதாவது அவர்கள் படிக்க அல்லது தெரிந்து கொள்ள விரும்ப வேண்டும் என்பது அவசியம்.

வடமேற்கு தில்லியின் சிலம்பூரில் ஒருநாள் மாணவன் அமன் அண்ணா நம் நாட்டில் கல்வியின் தரம் என்ன என்று கேட்க தூண்டியது. 5ஆம் வகுப்பில் 50 சதவீதத்திற்கும் அதிகமான குழந்தைகள் இரண்டாம் வகுப்பு பாடப்புத்தகங்களைப் படிக்க முடியாது என்றும், மூன்றில் இரண்டு பங்கு மாணவர்களால் அடிப்படை கூட்டல் கழித்தல் செய்ய முடியாது என்றும் கூறும் வருடாந்திர கல்வி அறிக்கையான ASER பற்றி அனுராக் அவர்களிடம் சொல்லத் தூண்டுகிறது. ASER சீலம்பூரின் கல்வி நிலையை ஆராயாததை அறிந்து குழந்தைகளே டேட்டாவை சேகரித்து ஆராய்வதற்கான வழிமுறையை திட்டமிட்டனர். இது டெல்லியின் முதல் மாணவர் தலைமையிலான மாநாடுகளில் ஒன்றான ஐ-STEPஐ (மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர்களை ஊக்குவிக்கும்) வடிவமைத்தல், திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்புக்கு வழிவகுத்தது. இது பின்னர் இந்தியா முழுவதும் 100,000 கிராமங்களை உள்ளடக்கிய லாகோன் மெய்ன் ஏக் என்ற பெரிய பிரச்சாரத்தில் முடிந்தது. இளம் ஆசிரியர்களும் அவர்களது மாணவர்களும் கேள்விகளைக் கேட்டு தீர்வு காண முடியாது என்று யார் கூறுவது?

மோசமான கற்பித்தல், சரியாக நிர்வகிக்கப்படாத பள்ளிகள்,




போராடும் மாணவர்கள்-அவை உலகம் முழுவதும் உள்ளன மற்றும் அவற்றைப் பற்றி பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன, சில திரைப்படங்களாகவும் வெற்றியைக் காண்கின்றன. பெல் காஃப்மன்னின்அப் டி அவர் டவுன் படிகட்டு மூலம் (1964) 64 வாரங்களாக தி NYT- அதிக விற்பனையாகும் புத்தகப் பட்டியலில் இருந்தது; ஈ.ஆர். பிரயெத்வேய்டின் டு சர் வித் லவ் (1959) என்ற சுயசரிதை நூல் ஒரு வெற்றிகரமான படமாக்கப்பட்டது. லூலூ பாடிய இதன் தலைப்பு பாடல் கூட பிரபல்யத்தில் முன்னணி வகித்தது அதன் பின் வருவது Totto-chan: ஜப்பானின் டிவி பிரபலமான டெசுகோ குர்யோனகியின் தி லிட்டில் கர்ல் அட் தி விண்டோ (1981) சுயசரிதை நூலில் இரண்டாம் உலக போரின் போது தனக்கு கிடைத்த வழக்கத்திற்கு மாறான கல்வியை விவரிக்கிறார். போபாலைச் சேர்ந்த இளம் பெண்ணின் கணிப்பும் புத்தகத்தின் ஜப்பானிய பெயர் தோல்வியுற்றவர்களை விவரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வெளிப்பாடு என்பதும் தற்செயல் என்கிறது விக்கிபீடியா

புலிட்சர் பரிசு வென்ற எழுத்தாளர் ஃபிராங்க் மெக்கோர்ட் தன் வாழ்வின் பெரும்பகுதி ஆசிரியராக இருந்தார். அவர் நியூயார்க் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்பித்த தன் அனுபவங்களை தன்னுடைய சுயசரிசை டீச்சர் மேன் (2005) இல் பதிவு செய்துள்ளார். போதைப்பொருள், குடிப்பழக்கம், துப்பாக்கிச் சூடு மற்றும் வறுமை ஆகிய கஷ்டமான சூழ்நிலைகளில் வளர்ந்து வரும் இளைஞர்களுக்கு கற்பிப்பதில் உள்ள சோதனைகள் மற்றும் ஏமாற்றங்களை சிறப்பாக விவரிக்கிறார்.

கலிஃபோர்னியாவில் உள்ள உட்ரோ வில்சன் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் அவர்களது ஆசிரியர் எரின் க்ரூவெல் ஆகியோரால் எழுதப்பட்ட 1999 ஆம் ஆண்டு சுதந்திர எழுத்தாளர்கள் நாட்குறிப்பு: ஒரு ஆசிரியர் மற்றும் 150 இளம் வயதினர்கள் தங்களையும் உலகைச் சுற்றியுள்ளவர்களையும் மாற்றுவதற்கு எப்படி எழுத்தை பயன்படுத்தினர் என்பதை விளக்குகிறது. இது மாணவர்கள் தங்கள் கடந்துவந்த பிரச்சினைகளை எழுதுவதற்கு ஊக்குவிக்கப்பட்ட டைரியின் பதிவுகளை அடிப் படையாகக் கொண்டது.

ஷாஹீன் மிஸ்திரியால் நிறுவப்பட்ட TFI என்பது அரசியல், உளவியல், உணர்வுகள் ஆகியவற்றின் மாற்றத்தின் சாத்தியம் பற்றியது. உலகின் பல்வேறு மூலைகளிலும் தனது பெற்றோருடன் சுற்றிய பின், இந்த இளம் பெண் மும்பையில் குடியேறினார். குழந்தைகள் போக்குவரத்து சிக்னல்களில் திரிவதைப் பார்த்து அவரது கண்ணோட்டம் மாறியது. ஏழை நகர்ப்புற குழந்தைகளுக்கு சேவை செய்வதில் அக்காஷா அறக்கட்டளையை முதன்முதலில் நிறுவிய பின்னர், டீச் ஃபார் அமெரிக்கா ஃபெல்லோஷிப் மாதிரியில் டீச் ஃபார் இந்தியாவை நிறுவினார். ராயின் புத்தகத்தில், கல்வி சமத்துவ மின்மைக்கு அர்ப்பணிக்கப்பட்ட கற்பனையான கிரே சன்ஷைன் அருங்காட்சியகம் பற்றி எழுதுகிறார். "ஒரு நாள் கிரே சன்ஷைன் அருங்காட்சியகத்தைப் பார்வையிட நான் ஏங்குகிறேன்,'' என்று அவர் எழுதுகிறார், "நாம் ஒடுக்குமுறையின் வகுப்பறைகளை ஒளியுள்ள வகுப்பறைகளாக மாற்றியுள்ளோம் என்பதை நினைவூட்ட வேண்டும் என்றும் எழுதுகிறார். சாம்பல் நிறம் மாறும் நாளுக்காக நான் ஏங்குகிறேன்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்



# ஆளுநர்களுடன் சந்திப்பு

ஜெயஸ்ரீ

## 2.2 மில்லியன் TRF பங்களிப்பைத் திட்டமிடும் நேபாள DG

**கிரண் லால் ஷ்ரேஷ்தா**
**துணி உற்பத்தியாளர்**
RC பொகாரா, RID 3292

இவரும், பால் கோபால்தாஸ் பன்டாரி என்ற மூத்த ரோட்டரியன் ஒருவரும் இணைந்து 1996ல் பொகாராவில் முதல் ரோட்டரி சங்கத்தை நிறுவினார்கள், அதற்குத் தூண்டுதல், நேபாளத்திலும் உலகின் பிற பகுதிகளிலும் ரோட்டரியன்கள் செய்துவரும் நல்ல பணிதான். இப்போது, என் சங்கம் நேபாளத்தில் 12 சங்கங்களுக்கு ஆதரவளித்துள்ளது என்கிறார் கிரண் லால் ஷ்ரேஷ்தா. பொகாரா-வின் அப்போதைய தேவை, கல்வி, நலப்பராமரிப்பு மற்றும் தண்ணீர் ஆகியவையாக இருந்தது என்று அவர் தொடர்ந்து குறிப்பிடுகிறார்.

இங்கு பெரும்பாலான இடங்களில் தண்ணீர் ஒரு விலைமதிப்புமிக்க பொருளாகும். சிறுமிகள் தாய்மார்களுக்குப் பின்னால் தலையில் தண்ணீர்ப் பானைகளைச் சுமந்துகொண்டு வீட்டுக்குச் செல்வதை நான் அடிக்கடி கண்டுள்ளேன். எங்களுடைய முதல் திட்டம் மூலம் நாங்கள் ஒரு கிராமத்துக்கு நீர் வசதியை வழங்கினோம், இதனால் கிராமவாசிகள் அடைந்த மகிழ்ச்சியைவிட, மக்கள் தங்களுடைய வீடுகளில் போதுமான அளவு தண்ணீரைப் பெறுகிறார்கள் என்பதை எண்ணி நாங்கள் அடைந்த மகிழ்ச்சிதான் கூடுதலாக இருந்தது.

இவரை மிகவும் மகிழ்வித்த கணம், குழாயிலிருந்து வரும் நீரைக் கண்டு ஒரு பெண்ணின் முகம் மகிழ்ச்சியால் ஒளிர்ந்ததுதான். ஒரு வறண்ட நிலத்தில் அமைந்திருந்த அந்தக் கிராமத்தில் தண்ணீரைக் காணவே இயலாது என்று பலர் எங்களை ஊக்கமிழக்கச்செய்ய முயன்றார்கள். பின்னர், பொகாராவிலேயே முதன்முறையாக, துளித் தண்ணீரும் இல்லாத ஒரு மருத்துவமனையில் நாங்கள் ஓர் ஆழ்துளைக் கிணற்றைத் தோண்டினோம். பொகாராவில் ஒரு நீர் அமைப்பை உருவாக்குவதற்காகக் காத்மண்டுவிலிருந்து பொகாராவுக்கு வந்த என்னுடைய தாத்தாவை நான் ஊக்கமாகக் கொள்கிறேன்.

பன்னாட்டு நல்கைகளைப் பொறுத்தவரை, ஒவ்வோராண்டும் எங்கள் மாவட்டம் 50–60 நல்கைகளைச் செய்கிறது. இந்த ஆண்டு நாங்கள் 100 நல்கைகளை இலக்காகக் கொண்டுள்ளோம், இதில் 50 நல்கைத் திட்டங்கள் ஏற்கெனவே நிறைவடைந்துவிட்டன என்கிறார் அவர். இதன்மூலம் நிறைவேறியுள்ள சில நன்மைகள்: ஒரு காத் ஆய்வகம், 30 டயாலிசிஸ் மையங்கள் மற்றும் சமூக நீர்ச் சேகரிப்புத் திட்டங்கள்.

உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, தன்னுடைய மாவட்டத்தில் 17 சதவிகித ரோட்டரியன்கள் பெண்கள் என்கிறார் ஷ்ரேஷ்தா, இத்துடன், ரோட்டரியன்களுடைய துணைவர்களும் சங்கத்தில் உறுப்பினர்களாகவேண்டும் என்று அவர் ஊக்குவித்துவருகிறார். இதனால் ரோட்டரி வலுவாவதுடன், குடும்பமும் இன்னும் வலுவாகும். இந்த மாவட்டத்தில் உறுப்பினர்கள் தக்கவைத்துக்கொள்ளப்படும் சதவிகிதம் 90; இத்துடன், 1,000 உறுப்பினர்களைப் புதிதாகச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளார்கள். அதில், 350 பேர் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுவிட்டார்கள்; திட்டமிடப்பட்டுள்ள 10 புதிய சங்கங்களில் இரண்டு ஏற்கெனவே பதிவுசெய்யப்பட்டுவிட்டன.

பதிவுசெய்யப்படாத பகுதிகளில் புதிய சங்கங்களை ஊக்குவிக்கிறார் DG. நேபாளத்தில் டயாலிசிஸ் வசதிகளுக்கான ஒரு தேவை உள்ளது. “நீங்கள் இங்கு ஒரு சங்கத்தை உருவாக்கினால், நாங்கள் இங்கு ஒரு மையத்தை நிறுவுவோம்” என்று நாங்கள் உள்ளூர் மக்களிடம் சொல்கிறோம். அங்கு, 40 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு புதிய சங்கம் சமீபத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

TRFக்கு $2.2 மில்லியன் பங்களிப்பை அவர் திட்டமிடுகிறார், நான்கு நன்கொடையாளர்கள் AKS உறுப்பினர்களாக உறுதியளித்துள்ளார்கள், 150 பெரிய நன்கொடையாளர்களும் புதிதாகச் சேரவுள்ளார்கள். இவருடைய மனைவி, மூத்த மகனும் ரோட்டரியன்கள், இளைய மகன் ஒரு ரோடராக்டர்.

## சங்கத் திட்டங்கள் இவருக்கு மகிழ்ச்சி தருகிறது



### அஜய் அகர்வால், செய்தித்தாள் வெளியீடு

RC கல்கத்தா மில்லேனியம், RID 3291

இவரை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தியவர், RIPN சேகர் மேத்தா. அப்போது இவர்கள் இருவரும் RC சென்ட்ரல் கல்கத்தா-வின் உறுப்பினர்களாக இருந்தார்கள். மேலும், அவர் என்னுடைய IPPயும் கூட என்கிறார் அஜய் அகர்வால்.

இந்தியாவில் ரோட்டரி பிறந்த இடத்தில் நூற்றாண்டு ஆளுநராக இருப்பதை எண்ணி இவர் மகிழ்கிறார். இந்த மகிழ்ச்சிக்கு இன்னொரு காரணம், அனைத்துச் சங்கங்களும் இந்தக் கொண்டாட்டத்தைத் தங்களுடைய தாக்கிக் கொண்டுள்ளன, திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகச் சுறுசுறுப்பாக உள்ளன, உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்குவதில், புதிய திட்டங்களுக்கு நிதி பெறுவதில், பன்னாட்டு நல்கைகளுடன் திட்டங்களை விரிவாக்குவதில் மிக நல்ல ஆர்வம் உள்ளது, இவற்றுள் 50 திட்டங்களுக்கு இந்த ஆண்டு அமல்படுத்தப்படவுள்ளன என்று மகிழ்ச்சியுடன் சொல்கிறார் இவர்.

ரோட்டரியில் இவருடைய மிக மகிழ்ச்சியான கணம்?

மேத்தா RI தலைவர் பொறுப்பை வென்ற கணம்தான். அவர் தன்னுடைய வேட்புமனுவை நிரப்பியபோது, நாங்கள் எல்லாரும் ஆவலுடன் காத்திருந்தோம், அவர் வென்றபோது, நாங்கள் மிகவும் ஆசிர்வதிக்கப் பட்டவர்களாக உணர்ந்தோம், ஏனெனில், நூற்றாண்டு தொடங்கவிருக்கும் நேரத்தில் இது நிகழ்ந்தது.

உறுப்பினர் எண்ணிக்கையை வலுவாக்குவதில் தான் இவர் முக்கியக் கவனம் செலுத்தவுள்ளார். இந்த ஆண்டு, உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்வது மிக நன்றாக இருந்துள்ளது, இந்த ஆண்டு, 4,000 என்னும் மந்திர எண்ணைத் தொட நாங்கள் முயல்கிறோம், இந்த இலக்குக்கு இன்னும் 200 உறுப்பினர்கள்தான் தேவை என்பதால், இதை எட்ட இயலும் என்று நான் நம்பிக்கையாக உள்ளேன் என்கிறார் DG.

இவருடைய அடுத்த இலக்கு, இந்த ஆண்டு ரூ.176 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்றுவது.

அறக்கட்டளைக்கு இவருடைய இலக்கு, $400,000.

சங்கத் திட்டங்களைச் சென்று பார்ப்பது அகர்வாலுக்குப் பிடிக்கும். எந்த ஆளுநருக்கும் அவை நீடித்த நினைவுகளாகும். பாராட்டுகள் வரலாம், போகலாம், ஆனால், களத்தில் திட்டங்களைப் பார்க்கும்போது ஏற்படும் மன நிறைவு மிகச்சிறந்தது, என்கிறார் இவர்.

இவருடைய மனைவி மம்தா, இன்னர் வீலின் அகில இந்திய முன்னாள் தலைவர்.

## இவர் ரோட்டரியை வளர்க்க விரும்புகிறார்



### M வீரபத்ர ரெட்டி, நீர்வாழ் உயிரிகளுக்கான உணவுகள்

RC காகிநாடா சென்ட்ரல், RID 3020

1997ல், PDG K V S ஆஞ்சனேய மூர்த்தி இவரை ரோட்டரிக்கு அழைத்தார், அப்போதிலிருந்து வீரபத்ர ரெட்டி ஓர் ரோட்டரியனாக உள்ளார், முன்பு தான் ஒரு ரோடராக்டராக இல்லையே என்பதை எண்ணி வருந்துகிறார், இழந்த வாய்ப்பை ஈடுசெய்வதற்காக, இந்த ஆண்டு விசாகப்பட்டினத்தில் 20 ரோடராக்ட் சங்கங்கள், 100 புதிய இன்டராக்ட் சங்கங்களை நிறுவுகிறார்.

மனிதப் பால் வங்கி, இரண்டு ரத்த வங்கிகள், பன்னாட்டு நல்கைத் திட்டங்கள் மற்றும் நைஜீரியாவுக்கு ஒரு VTT போன்ற திட்டங்களைத் தன்னுடைய மாவட்டம் நிறைவேற்றுவதை எண்ணி இவர் மகிழ்கிறார். நேர்வித நலன் திட்டத்துக்காக இந்த மாவட்டம் மிக அதிக எண்ணிக்கையிலான NCD வடிகட்டல் முகாம்களை நடத்தியுள்ளது என்கிறார் இவர்.

இந்தியாவில் ரோட்டரியின் நூற்றாண்டைக் கொண்டாடு வதற்காக, பொதுமக்கள் மத்தியில் நற்பெயரை உண்டாக்கும் சில நிகழ்வுகளையும் திட்டமிட்டுள்ளார் ரெட்டி.

பெண் உறுப்பினர் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக 180ல் தேங்கியிருந்தது; அதை இந்த ஆண்டு 240க்குமேல் வளர்த்துக் கொண்டுவந்ததை எண்ணி DG மகிழ்கிறார். மூன்று புதிய ரோட்டரி சங்கங்களை இவர் பதிவுசெய்துள்ளார்.

TRF வழங்கலைப் பொறுத்தவரை, சென்ற ஆண்டு இந்த மாவட்டம் இளம்பிள்ளைவாத நிதியில் முன்னணி இடத்தைப் பிடித்தது; அதைத் தக்கவைத்துக்கொள்வதில் கவனம் செலுத்துகிறார் இவர், ஆண்டு வழங்கலையும் மேம்படுத்த விரும்புகிறார். எங்கள் DDF வெறும் $15,000 தான். இவ்வளவு குறைந்த DDFஐ வைத்துக் கொண்டு நானோ இனி வரும் ஆளுநர்களோ மாவட்டத் திட்டங்களை ஆதரிப்பது சிரமம். அதனால்தான், இந்த ஆண்டு நான் ஆண்டு வழங்கலில் கூடுதல் கவனம் செலுத்துகிறேன் என்கிறார் ரெட்டி.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# இந்திய ரோட்டரி நூற்றாண்டின்போது, I K குஜ்ராலுடன் சில உயிர்ப்புள்ள கணங்கள்

நீனா சொந்தி

முன்னாள் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால், டிசம்பர் 4, 2012 அன்று வரவேண்டிய தன்னுடைய 93வது பிறந்தநாளுக்கு வெறும் 5 நாட்கள் முன்னதாக இறந்துபோனார். இதைக் கேள்விப் பட்டபோது, ஒரு குடும்ப உறுப்பினரை இழந்துவிட்டதுபோல் நாங்கள் உணர்ந்தோம்.

என்னுடைய மாமனார் F C சொந்தி மற்றும் அவ்தார் நரேன் குஜ்ரால் (I K குஜ்ராலுடைய தந்தை) இருவரும் ரோட்டரியன்கள்; அந்தமுறையில் நல்ல நண்பர் களானார்கள். 1971–72ல், RC ஜலந்தர், 3070ன் தலைவர் என்றமுறையில், குஜ்ராலுடைய பெற்றோர் நடத்திவந்த நாரி நிகேதனுக்கு வருகைதந்தார் சொந்தி.

A N குஜ்ரால் இறந்த பிறகு, என்னுடைய கணவர் P C சொந்தியும் நானும் நாரி நிகேதனுடைய பணிகளில் அதிகம் ஈடுபடலானோம்; I K குஜ்ரால் உள்பட, புஷ்பா குஜ்ராலுடைய அனைத்துப் பிள்ளைகளும் தில்லியில் இருந்ததால், இந்த அமைப்பை நடத்துவதற்கு நாங்கள் அவருக்கு உதவினோம். பின்னர், தன்னுடைய தாயால் இதற்கு மேலும் இதைச் சமாளிக்க இயலவில்லை என்பதைப் புரிந்து கொண்ட குஜ்ரால், இந்த அமைப்பை நிர்வகிப்பதில் தானே அதிகம் ஈடுபடத்தொடங்கினார்.

நாரி நிகேதனில் அவருடன் ஒன்றாகப் பணியாற்றியதன்மூலம், அவரோடு மேலும் அதிக நேரத்தைச் செலவிடும் நல்ல அதிர்ஷ்டம் எங்களுக்குக் கிடைத்தது.

குஜ்ரால் ஒரு பணிவான, கதகதப்பான இதயத்தைக் கொண்டவர். சமூகத்தில் அவருடைய மதிப்பு அதிகரித்துக்கொண்டே சென்ற போதும், அவர் இவ்வாறு தான் இருந்தார்.

நாங்கள் அவரைத் தில்லியில் சிலமுறை சந்தித்தோம். ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும், ‘உங்களை எங்கேயாவது அழைத்துச் செல்ல வேண்டுமா? வண்டி தேவையா?’ என்று அக்கறையுடன் கேட்பார் அவர். ஆனால், எங்களுக்கு அது எப்போதும் தேவைப்படவில்லை.

ஒருமுறை, நாரி நிகேதன்பற்றிப் பேசுவதற்காக, மகராணி பாகிலிருக்கும் குஜ்ராலுடைய வீட்டுக்கு நான் சென்றிருந்தேன். நாங்கள் தேநீர் குடித்தபடி உரையாடி முடித்ததும், நான் கிளம்பினேன். ஆனால், என்னுடைய ஓட்டுநர் அங்கு இல்லை. நான் ஏதும் சொல்வதற்குமுன்னால், தலைநகரில் கிரேட்டர் கைலாஷிலிருக்கும் என்னுடைய வீட்டில் என்னை விடுவதற்காக, அதுவரை தானே தன்னுடைய காரை ஓட்டிக்கொண்டு வருவதாக முன்வந்தார் குஜ்ரால்.

1989ல், குஜ்ராலும் அவருடைய குடும்பத்தினரும் பொதுத் தேர்தலுக் கான ஒரு மாத காலப் பரப்புரைக்காக ஜலந்தரில் முகாமிட்டிருந்தார்கள்.



*முன்னாள் பிரதம மந்திரி I K குஜ்ரால் நாரி நிகேதனில்.*

முடிவுகள் அறிவிக்கப்பட்டபிறகு, ஒருநாள், எங்கள் வீட்டுக்கு அவர் வந்தார்.

எதிர்பாராமல் வந்த இந்த விருந்தினருக்குத் தேநீர் தயாரிக்கவும் பரிமாறவும் என்னுடைய இரு குழந்தைகளும் விறுவிறுவென்று எனக்கு உதவினார்கள். புதிதாக நியமிக்கப்பட்ட வெளி விவகாரத்துறை அமைச்சரைப் பேட்டியெடுப்பதற்காகத் தூர்தர்ஷன் குழுவினர் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். நினைவில் நிற்கும் இந்த நிகழ்வை நாங்கள் இன்னும் கொண்டாடுகிறோம்.

1998ல், ஜலந்தர் தொகுதியில் மூன்று நாள் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார் குஜ்ரால். நகரிலிருக்கும் தொழில்துறைப் பெரும்பகுதிகளுக்கு அவர் செல்லப்போவதில்லை என்று அவருடைய குழுவினர் எனக்குச் சொன்னார்கள். இதனால், நான் ஏமாற்றமடைந்தேன். குஜ்ரால் ஒரு ரோட்டரிக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியபோது, இதை அவரிடம் சொன்னேன்.

என்னுடைய ஏமாற்றத்தைக் கேட்ட அவர், எங்கள் பகுதிக்கு வருவதாக உடனே ஒப்புக்கொண்டார். இந்தியப் பிரதமர் மற்றும் அவருடைய குழுவினருடைய வருகைக்காக, நாங்கள் 24 மணிநேரத்துக்குள் தொழிற்சாலை வளாகத்தைத் தயார்செய்யதோம்.



FC *சோந்தியின் தொழிற்சாலையில் குஜ்ரால்.*

தேர்தல் முடிவுகளுக்குப்பிறகு, குஜ்ரால் மீண்டும் எங்கள் வீட்டுக்கு வந்தார்; எங்கள் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

அவர் வருவதற்குமுன்னால், ஒரு பேருந்துநிறையப் பாதுகாப்புக் குழுவினர் வந்தார்கள்; கருப்புப் பூனைப்படை வீரர்கள் எங்கள் கூரையில் இடம் பார்த்து நின்று கொண்டார்கள்; ஆயுதமேந்திய பாதுகாப்புக் காவலர்கள் எங்கள் வீட்டுக்கு முன்னால் நின்று பாது காப்பளித்தார்கள்.

ஒருமுறை, அவரைச் சந்திக்க நாங்கள் அனுமதி பெற்றிருந்தோம். 5, ஜன்பத் சாலையில் அவருக்காகக் காத்திருந்தோம். கதவு திறந்தது. PRIP ராஜேந்திர சாபூ வெளியில் வந்தார். நாங்கள் உள்ளே சென்றோம்.

குஜ்ரால் இறப்பதற்கு ஓரிரு ஆண்டுகள் முன்பாக நாங்கள் அவரைச் சந்தித்தோம். அப்போது அவர் உடல்நலத்துடன் இல்லை. அதேசமயம், தன்னுடைய வழக்கமான கதகதப்புடன் எங்களை வரவேற்றார் அவர். நாங்கள் நாரி நிகேதனைப்பற்றிப் பேசினோம். எங்களுடைய பங்கேற்புக்காக அவர் தன்னுடைய நன்றியுணர்வை வெளிப்படுத்தினார்.

நாங்கள் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினோம். அவரும் எழுந்தார், எப்போதும் போல் எங்களுடன் வாசல் கதவுவரை நடந்தார். நடையில் வேகம் குறைந்திருந்தாலும், அவர் அந்தப் பழக்கத்தை விடவில்லை.

இப்படிப்பட்ட கதகதப்பான இதயத்தையுடைய, அன்பார்ந்த ஓர் ஆளுமையை, இந்த அளவு உயர்ந்த நிலையிலுள்ள ஒரு மனிதரை நம்மால் எப்படி மறக்க இயலும்.



*நீனா சோந்தியுடன் குஜ்ரால்.*

எழுத்தாளர் RC வெஸ்ட் ஜலந்தர், RID 3070ன் முன்னாள் தலைவர்.

# சமநிலையும் முதியவர்களும்

ஷீலா நம்பியார்



குடும்பத்திலுள்ள மூத்தவர்களோ நண்பர்களோ கீழே விழுந்து காயப்பட்டுக் கொண்டால், அவர்களைக் கவனித்துக் கொள்வதால் ஏற்படும் பதற்றத்தை நம்மில் பலர் அனுபவித்துள்ளோம்.

முதியவர்கள் கீழே விழுவது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, தவிர்க்க இயலாத விபத்தாகப் பார்க்கப் படுகிறது. முறையான முன்னெச் சரிக்கை நடவடி க்கைகளைப் பின்பற்றினால், கீழே விழுவதால் உண் டாகும் உடல், மனச் சே தத்தைத் தடுக்கலாம்.

இடுப்பெலும்பு முறிவு, ஃப்ராக்சர் நெக் ஆஃப் ஃபேமுர் ஆகியவை மிகக் கொடுமை யானவை. குறிப்பாக, ஆஸ்டியோபொரோசிஸ் உள்ள முதிய பெண்களுக்கு துன்பம் தருகின்றன.

ஒருவேளை, உடல் சார்ந்த காயம் அவர்களை வலுவிழக்கச் செய்யா விட்டாலும், உள்ளத்தில் ஏற்படும் காயம் மிகத் தீவிரமாக இருக்கும். இதனால், அச்சம் ஏற்படும், எல்லாவிதமான செயல்பாடுகளிலிருந்தும் தாங்களே விலகிச்செல் வார்கள், இதனாலேயே அவர்களுடைய உடல்நலன், உடல்தகுதிக்கு பாதிப்பு ஏற்படும். இதனால், இவர்கள் எது நடக்கக்கூடாது என்று அஞ்சுகிறார்களோ அதுவே நடந்துவிடக்கூடும். விழுந்துவிடுவோமோ என்ற அச்சத்தில் செயல்பாடுகளைக் குறைப்பார்கள், அதனால் தசைகளில் வலிமை குறையும், ஒட்டுமொத்தமாக வலுவிழப்பார்கள், சமநிலை குறையும், அதனால், மிகச் சிறிய பணிகளைச் செய்ய முயலும்போதுகூட மீண்டும் விழுந்துவிடுவார்கள்.

கீழே விழுவதற்கான பொது வான காரணங்களில் சில:

- அவர்களைச் சுற்றியுள்ள உடனடிச் சூழல்
- வலிமை, சமநிலை, நடை, துடிப்பு மற்றும் விரைவு, எதிர்வினையாற்றும் நேரம் ஆகியவை மோசமாக இருத்தல்
- மயக்கம் தரும் மருந்துகளை அல்லது, அறிவாற்றலை மாற்றக் கூடிய மருந்துகளை எடுத்துக்கொள்ளுதல்.
- நடுச்செவிச் சமநிலை யின்மை, அதனால் தலைசுற்றல், மயக்கம்
- பார்வைக் குறைபாடுகள்
- பார்கின்ஸன்’ஸ், நீரிழிவு, மல்ட்டிபிள் ஸ்க்லெரோசிஸ் போன்ற பிற மருத்துவப் பிரச்னைகள்
- முறையற்ற காலணி
- மனமுழுமையின்மை

### சூழல்

இயன்ற இடங்களில் எல்லாம், வழுக்குதலைத் தடுக்கும் டைல்களைப் பயன்படுத்தலாம். குளியலறைகளில் கூடுதல் பிடிப்புக்கான கைப்பிடிக் கம்பிகளைப் பொருத்தலாம்.

தடுக்கிவிடக்கூடிய கம்பளங்கள், கூரான விளிம்புகள், முனைகள், நிலையற்ற ஸ்டூல்கள், நாற்காலிகள், ஈரமான பகுதிகள், கைப்பிடி இல்லாத படிக்கட்டுகளை நெருங்கவேண்டாம், மோசமாக வடிவமைக்கப் பட்ட அல்லது சரியாகப் பொருந்தாத காலணிகளைப் பயன்படுத்தவேண்டாம். எங்கும் நல்ல வெளிச்சம் இருக்கட்டும், படிக்கட்டு கள், தரையிலுள்ள ஏற்ற இறக்கங்கள் தெளிவாகத்

தெரியும்படி பார்த்துக்கொள்ளுங்கள். மேசைகள், நாற்காலிகள், படுக்கைகள் உறுதியாக உள்ளனவா என்று அவ்வப்போது சரிபார்க்கவேண்டும்.

### மருந்துகள்

மயக்கம் தரும் மருந்துகள், ஆன்ட்டிஹிஸ்டமைன்கள், ஆன்ட்டிஹைபெர்டென்சிவ்கள் போன்றவை மயக்கத்தை, போஸ்சுரல் ஹைப்போடென்ஷனைத் தரலாம், இதனால் சமநிலை இழப்பு நேரலாம். நீரிழிவுக்கு எதிரான மருந்துகளை உட்கொள்ளும்போது ஏற்படும் ரத்தச் சர்க்கரை ஏற்ற, இறக்கங்களாலும் மயக்கம், சமநிலை இழப்பு ஏற்படலாம்.

### உடல் தகுதி

இளவயது, நடுவயதுமுழுக்கச் சுறுசுறுப்பாக இருந்தவர்கள், உடல்தகுதித் திட்டங்களில் வழக்கமாகப் பங்கேற்றவர்கள், சரியான அளவுகளுக்குள் தங்கள் எடையைப் பராமரித்தவர்கள், சிறந்த தசை நிறையைப் பராமரித்தவர்கள் ஆகியோர் முதுவயதில் விழுந்து காயம்பட்டுக்கொள்வது குறைவு. இவர்களுடன் ஒப்பிடும்போது, உடல்தகுதி இல்லாத, கூடுதல் எடை கொண்டவர்கள் அதிகம் விழுகிறார்கள், காயப்படுகிறார்கள்.

முதியவர்களுக்கான உடற்பயிற்சி திட்டத்தில் அடிப்படைக் கார்டியோ, சமநிலை மற்றும் வலிமைப்பயிற்சிகள் இருக்கவேண்டும்.

உடல் அசைவுகளுக்கு குறிப்பிட்ட அளவு சமநிலை தேவை, புவியீர்ப்பு மையத்தில் ஏற்படும் இந்த மாற்றத்துக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளும் திறனும் தேவை. எடுத்துக்காட்டாக, அமர்ந்திருக்கும் ஒருவர் எழுந்து நின்றால், புவியீர்ப்பு மையமானது தரையிலிருந்து கீழான நிலையிலிருந்து மேலான நிலைக்கு மாறுகிறது, அதனால், நிலைத்தன்மை குறைகிறது. ஒருவருடைய கால் தசைகளில் போதுமான சமநிலையும் வலிமையும் இருந்தால், இப்படி எழும்போது அவர் விழுந்து விடமாட்டார்.

### நடுச்செவிச் சமநிலையின்மை

சமநிலையை மேம்படுத்துவதற்கு நல்ல பார்வை வேண்டும், வெஸ்டிபுலார் (நடுச்செவிப்) பிரச்னைகள் இருக்கக்கூடாது, சொமேட்டோசென்சரி (கால்கள், பாதங்களில் தோன்றும் உணர்வுகள்) அமைப்பு சிறப்பாக இருக்க வேண்டும். இந்த அமைப்பு ஒரு சிறந்த நரம்புத்தசை வலைப்பின்னலின் வழியாகச் செயல்படுகிறது, ஒருவருடைய உடல், சுற்றியிருக்கும் சூழலில் தன்னுடைய நிலையைப் புரிந்து கொள்ள உதவுகிறது. உடலுக்கு அதன் நிலை தொடர்ந்து அறிவிக்கப்படுகிறது; தரை அல்லது நாற்காலி போன்ற பொருட்களுடனான தொடர்பும் தெரிவிக்கப்படுகிறது. வயதாகும்போது உணர்வு அமைப்பின் திறன் குறையும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் ஏதேனும் சிக்கல் இருந்தால், சமநிலை பாதிக்கப்படலாம்.

### பார்வை

மோசமான பார்வையால் தேவையற்ற விபத்துகள் ஏற்படலாம். ஒருவருடைய பார்வை ஆற்றல் வயதுக்கேற்ப மாறுகிறது. ஆகவே, அவ்வப்போது கண் பார்வையைப் பரிசோதித்துக்கொள்வது முக்கியம்.

### மருத்துவப்பிரச்னைகள்

கட்டுப்படுத்தப்படாத நீரிழிவால் பாதங்கள்/கைகளில் உணர்வு குறையலாம். கால்களை நலமாக வைத்திருப்பது முக்கியம். கொப்புளங்கள், ஆறாத புண்கள் போன்றவற்றைக் கவனமாகப் பார்க்கவேண்டும். பார்க்கின்ஸன்ஸ் நோய் போன்ற நரம்பியல் குறைபாடுகள் அல்லது மல்ட்டிபிள் ஸ்க்லெரோசிஸ் போன்றவை சமநிலைப் பிரச்னைகளைக் கொண்டுவரும்.

### முறையற்ற காலணி

நல்ல தரமான, நன்கு பொருந்துகிற காலணிகளைமட்டுமே அணியவேண்டும். விபத்துகளைத் தடுப்பதற்கு மிக எளிய மற்றும் மிகுந்த செயல்திறன் வாய்ந்த நடவடிக்கை இதுதான். காலணியின் தேய்மானத்தை அவ்வப்போது சரிபாருங்கள், தேவைப்படும்போது அதை மாற்றுங்கள். பாதங்களில் உணர்வை மேம்படுத்துவதற்காக வெறுங்காலில் நடப்பதுகூட மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. இப்படி நடக்கிறவர்கள் சேறு, புல், மணல்போன்ற பல்வேறு பரப்புகளில் நடக்கவேண்டும்.

### மனமுழுமை

சில சமயங்களில், வெறும் அலட்சியத்தால் விபத்துகள் நிகழ்கின்றன. மன ஒருமையின்றி விரைவாக ஓடுவது, தன்னைச் சுற்றியிருக்கும் சூழலை அறிந்து கொள்ளாமல், உணர்ச்சியில்லாமல் இருப்பது போன்றவற்றால் சில முட்டாள் தனமான விபத்துகள் நிகழலாம். மனத்தை இப்போதைய கணத்தில் நிறுத்தப் பழக்கவேண்டுமென்றால், மனமுழுமைத் தியானம் மிகச்சிறந்த வழியாகும்.

இயன்றவரை ஒரே காலில் நிற்பது, இயன்றவரை கால்களை நுனிக்கால் முதல் குதிகால் வரை அருகருகே வைத்து நடப்பது, நின்றபடி பேன்ட் அணிவது, நேர்கோட்டில் நடப்பது, நாற்காலியிலிருந்து எழுந்து முன்னே நடப்பது, இயன்றவரை விரைவாகத் திரும்பி வந்து நாற்காலியில் அமர்வது போன்ற எளிய செயல்களைப் பயிற்சியெடுத்துச் சமநிலையை மேம்படுத்தலாம்.

சமநிலை, வலிமை மற்றும் அசைவுகளை உணர்தல் ஆகியவற்றை மதிப்பிடும் சிறப்புப் பரிசோதனைகள் உள்ளன. ஒற்றைக்கால் சமநிலைப் பரிசோதனை, 'எழுந்து நடத்தல்' பரிசோதனை போன்றவை, ஒருவருக்கு இந்த ஒழுங்கைக் கட்டமைப்பதற்கான வழிகாட்டிகளாகச் செயல்படுகின்றன. நினைவிருக்கட்டும், சமநிலைப் பிரச்னையுள்ள முதியவர்கள், தகுதியுள்ள இன்னொருவருடைய கண்காணிப்பு இல்லாமல் உடற்பயிற்சி செய்யக்கூடாது, இந்தச் செயல்பாடுகளில் எவற்றிலும் ஈடுபடக்கூடாது.

இதன் ஆசிரியரை *sheelanambiar@gmail.com* என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம்.
*Website:www.drsheelanambiar.com*

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# லக்ஷ்மணுடன் ஒரு மாலை நேரம்

வினெய் கிர்பால்

*அக்டோபர் 24, புகழ்பெற்ற கார்ட்டூன் ஓவியரான RK லக்ஷ்மணுடைய 98வது பிறந்தநாள். அவரைச் சந்தித்த நிகழ்வை நினைவுகூர்கிறார் முன்னாள் பேராசிரியர் ஒருவர்.*

மும்பையிலுள்ள டைம்ஸ் ஆஃப் இந்தியா கட்டடத்தில், புகழ் பெற்ற கார்ட்டூன் ஓவியர் லக்ஷ்மணுடைய அலுவலகத்தை எட்டிப்பார்த்த நாள் எனக்கு இன்னும் நினைவிருக்கிறது.

அது 1975ம் ஆண்டு தி இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா இதழுக்காக நான் ஒரு கட்டுரை எழுதிக்கொண்டிருந்தேன். அந்த இதழின் அப்போதைய பொறிபறக்கும் ஆசிரியர், புகழ்பெற்ற எழுத்தாளரான குஷ்வந்த் சிங்கை சந்திப்பதற்காகதான் நான் அங்கு சென்றிருந்தேன்.

லக்ஷ்மணுடைய அலுவலகக் கதவு பாதி திறந்திருந்தது. உள்ளே காலனி ஆட்சிக்காலப் பாணியிலான ஒரு மிகப்பெரிய மஹோகனி மேசை இருந்தது. அதில் அப்போது யாரும் அமர்ந்திருக்கவில்லை.

இதனால், என்னுடைய குறுகுறுப்பு அதிகரித்தது. அவருடைய தனி உதவியாளரை அணுகி, லக்ஷ்மண் எப்போது வருவார் என்று விசாரித்தேன். நான் அவரைப் பார்க்கலாமா என்று கோரினேன்.

லக்ஷ்மண் ஒவ்வொரு நாளும் அங்கு வருவதில்லை, ஆனால், அவருடைய கார்ட்டூன்கள் நாள் தோறும் வந்து விடும் என்று அவர் பதில் சொன்னார்.

டைம்ஸ் ஆஃப் இந்தியாவுடனான லக்ஷ்மணின் சிறந்த பணிவாழ்க்கை 50 ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்தது. அநேகமாக, அது கொடுத்த விடுதலை அவருடைய கலை மனநிலைக்குப் பொருந்தியிருக்க வேண்டும்.

அதற்குப் பல ஆண்டுகள் கழித்து தான் நான் லக்ஷ்மணைச் சந்திக்க முடிந்தது. 2000ம் ஆண்டு, புனே ரிவர்சைட் ரோட்டரி சங்கத்தின் வாராந்திரப் பேச்சாளராக அவர் அழைக்கப்பட்டிருந்தார். அப்போது நான் அச்சங்கத்தின் உறுப்பினராக இருந்தேன்.

அன்றைக்கு லக்ஷ்மண் வழங்கிய 20 நிமிடப் பேச்சு உணர்வுபூர்வமாக இருந்தது. விடுதலை பெற்ற இந்தியாவுடைய அரசியல்வாதிகளின் விநோதமான செயல்பாடுகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அவர், 'காமன் மேன்' என்கிற பொதுமக்கள் பாத்திரத்தை உருவாக்கினார். புகழ்பெற்ற அந்த மனிதர் வேட்டி கட்டியிருப்பார், அவருடைய தலையில் வழுக்கை விழத் தொடங்கியிருக்கும், அதிகம் பேசமாட்டார், எப்போதும் அவர் முகத்தில் நம்பாத பார்வை தங்கியிருக்கும். அந்தப் பாத்திரம் எப்படி உருவானது என்கிற கதையை அவர் விளக்கினார்.

தொடக்கத்தில் அவர் வெவ்வேறு மாநிலங்களுடைய பிரதிநிதிகளாக வெவ்வேறு பாத்திரங்களை உருவாக்கினாராம்; ஆனால், இந்தியர்கள் அனைவருக்காகவும் பேசுகிற ஒரே ஒரு பாத்திரம் போதும் என்று பின்னர் தீர்மானித்துவிட்டாராம். அந்தப் பாத்திரத்துக்குத் தொடக்கத்தில் 'பாபுஜி' என்று பெயர் சூட்டியிருந்தாராம்; பின்னர் அது 'காமன் மேன்' எனப்படும் பொது ஜனமாகிவிட்டது.




1965ல் R K லக்ஷ்மன் வரைந்த ஒரு கார்ட்டூன்.

அந்த மாலைப்பொழுதின் பின்பகுதியில் அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் ஒரு பிரமாண்டமான விருந்து நடைபெற்றது. புனேயின் சிறந்த தொழிலதிபர், ரோட்டரியனான நிதின் தேசாய் இதற்கு ஏற்பாடு செய்திருந்தார். புகழ்பெற்ற கார்ட்டூன் ஓவியருடன் நேரம் செலவிடும் வாய்ப்பை எண்ணி எல்லாரும் மகிழ்ச்சியில் இருந்தார்கள். புகழ் பெற்ற தெனாலிராமன் கதைகளின் ஆசிரியரான தன்னுடைய மனைவி கமலாவுடன் வந்தார் லக்ஷ்மண்.

## செயல்திறன்மிக்க கோடுகள்

அகன்ற தாழ்வாரத்தில் ஒரு வெண்பலகை வைக்கப்பட்டிருந்தது. லக்ஷ்மண் அந்த வெண்பலகைக்கு அருகில் நின்றார், அவருடைய கையில் ஒரு மார்க்கர் பேனா இருந்தது. அவர் வரையத் தொடங்குவதற்காக நாங்கள் எல்லாரும் ஆவலுடன் காத்திருந்தோம்.



பலகையின் மேற்பக்கத்தில் வரையத்தொடங்கினார் லக்ஷ்மண். அடுத்த சில விநாடிகளில், பலகையிலிருந்து தன்னுடைய கையை எடுக்காமலே அடல் பிகாரி வாஜ்பாய், லாலு பிரசாத் யாதவ் ஆகியோரை வரைந்துவிட்டார் அவர். அத்துடன், புகழ்பெற்ற 'காமன் மேன்' பாத்திரத்தையும் வரைந்தார். காமன் மேன் கையில் ஒரு பலகை இருந்தது. அதில், 'என்னை அழைத்ததற்கு நன்றி' என்று எழுதப்பட்டிருந்தது. அவருடைய பணியைப் பார்த்தபோது, ஒரே கல்லின் உச்சியில் தொடங்கிக் கைலாஷ் ஆலயத்தைச் செதுக்கிய கலைஞர் என்னுடைய நினைவுக்கு வந்தார்.

## அனைவரும் வியந்து கைதட்டினார்கள்

லக்ஷ்மண் இரண்டு ரோட்டரியன் களுடன் அமர்ந்திருந்தார். அவரிடம் நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். நான் ஆங்கிலத்தில் முன்னாள் பேராசிரியர் என்றேன், அவர் தன்னுடைய சகோதரர் RK நாராயனுடைய நூல்களுக்குப் படம் வரைந்திருக்கிறார் என்பதால், RK நாராயனுடைய படைப்புகள் உள்ளிட்ட பல படைப்புகளை நான் என்னுடைய PhD ஆய்வுக்காக ஆராய்ந்திருக்கிறேன் என்று சொன்னேன்.

லக்ஷ்மண் மிகச்சிறந்த நகைச் சுவையுடன் பேசினார். அவர் சொன்ன கதைகளில் ஒன்று, அவரும் கமலாவும் பணிக்கு அமர்த்திய ஒரு புதிய வேலைக்காரரைப்பற்றியது. அவர்கள் வீட்டில் ஒரு விருந்துக்கு ஏற்பாடாகி யிருந்தது. அதற்குப் பம்பாய் காவல்துறை ஆணையர் உள்ளிட்ட பல விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

விருந்தினர்கள் ஒவ்வொருவராக வரத்தொடங்கினார்கள். அப்போது, தங்களுடைய புதிய வேலைக் காரரைக் காணவில்லை என்று கண்டறிந்தார் கமலா.



RK சுப்பிரமணியம்

RK லக்ஷ்மன்

காவல்துறை ஆணையர் வருவதைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை அவர் கேட்டிருக்கிறார் என்று சிரித்தார் லக்ஷ்மண். அவர் இதற்குமுன் ஏதோ குற்றச்செயலில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை நாங்கள் பின்னால் தெரிந்து கொண்டோம். ஆகவே, எங்கள் வீட்டுக்குக் காவல்துறை ஆணையர் வருகிறார் என்றதும், தனக்கு ஏதாவது பிரச்னை வந்துவிடுமோ என்ற அச்சத்தில் அவர் தப்பி ஓடிவிட்டார்.

இந்தியாவின் வேலைக்காரர்கள் என்ற நூலில் லக்ஷ்மண் 10 நகைச் சுவையான, மாறுபட்ட மக்களைப்பற்றி எழுதியிருக்கிறார்; இந்த வேலைக்காரரும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறார்.

லக்ஷ்மண் நிறைவாகப் புனேயிலேயே தங்கிவிட்டார்; இங்குதான் 2015 ஜனவரி 26 அன்று 93 வயதில் அவர் இறந்தார். இங்குள்ள சிம்பயாசிஸ் கல்வி நிறுவனம் ஓர் அழகிய எட்டடி உயர வெண்கலச் சிற்பத்தின்மூலம் 'காமன் மேனை' நினைவுகூர்கிறது.

ஆசிரியர் IIT-பம்பாயில் ஆங்கில முன்னாள் பேராசிரியர்

இந்தக் கட்டுரை முதலில் தி இந்து, 26 அக்டோபர் 2020 இதழில் பதிப்பிக்கப்பட்டது.



**RC பாண்டிச்சேரி சென்ட்ரல்** — RID 2981

ராஜீவ் காந்தி மகப்பேறு அரசு மருத்துவமனைக்கு ரூ.18 லட்சம் மதிப்புள்ள நியூரோ ஸ்கேன் டாப்ளர் இயந்திரம் நன்கொடையாக வழங்கப்பட்டது. புதிதாகப் பிறந்தவர்கள் மற்றும் இதய நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் ஆரோக்கியத்தைக் கண்காணிக்க கேட்ஜெட் பெரிதும் உதவும். ஒப்படைப்பு விழாவின் போது PDG S பிரையோன் கலந்து கொண்டார்.

**RC பெரியகுளம்** — RID 3000

மூன்று ரோட்டேரியன்கள்-S பாஸ்கரன், U திருநாவுக்கரசு மற்றும் M சதகத்துல்லா-மலை ஏறி ஆனைமலை காடுகள் மற்றும் தொலை மலை பகுதிகளில் வசிக்கும் பழங்குடி குடும்பங்களிலுள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுத்தனர்.





**RC ராஜமுந்திரி ரிவர் சிட்டி** — RID 3020

புதிய தலைமுறைகளின் கருப்பொருள் திட்டமான சதுரங்கம், டேபிள் டென்னிஸ், சொற்பொழிவு, கட்டுரை எழுதுதல், வரைதல் மற்றும் சுவரொட்டி வழங்கல் உள்ளிட்ட பல நிகழ்வுகளில் 1,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இரண்டு ஊக்க விரிவுரைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**RC கஜியாபாத்** — RID 3012

கைக்கழுவத்தொட்டி மற்றும் கழிப்பறைகளை DG தீபக் குப்தா ஒரு அரசுப் பள்ளியில் திறந்து வைத்தார். CSR மானியத்துடன் இவற்றை இச்சங்கம் கட்டி முடித்தது.



# சங்க சேவைகள்

**RC பல்லார்பூர்** — RID 3030

பல்லார்பூரில் உள்ள கிராமப்புற மருத்துவமனையுடன் போலியோ பிளஸ் பிரச்சாரம் நடைபெற்றது. எண்ட் போலியோ நௌ ஸ்டிக்கர்கள் 52 சாவடிகளுக்கும் விநியோகிக்கப்பட்டன. பஸ் மற்றும் ரயில் நிலையம் போன்ற பரபரப்பான பகுதிகளில் தன்னார்வலர்களின் குழுக்களுடன் கிளப் பிரச்சாரத்தை மேற்கொண்டது.






**RC உஜ்ஜைன்** — RID 3040

ராஷ்டிரிய ஜல் சம்மேளன் என்ற பெயரில் நீர் கருத்தரங்கம் அரசு சாரா நிறுவனங்களின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. விக்ரம் பல்கலைக்கழக துணைவேந்தர் BK ஷர்மா திறந்து வைத்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நீர் பாதுகாப்பு நிபுணர் ராஜேந்திர சிங் கலந்து கொண்டார். நீர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த கருத்தரங்கிற்கு முன்பு பேரணி நடத்தப்பட்டது.





**RC சிக்லி ரிவர் ஃப்ரண்ட்** — RID 3060

RC காண்டேவியுடன் இணைந்து, D E இடாலியா சர்வஜானிக் உயர்நிலைப்பள்ளிக்கும், குஜராத்தின் கெர்காமில் உள்ள மற்றொரு பள்ளிக்கும் இரண்டு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த திட்டத்தின் காரணமாக 2,000க்கும் மேற்பட்ட கிராமப்புற மற்றும் பழங்குடி குழந்தைகளுக்கு தூய்மையான குடிநீர் கிடைக்கும்.



**RC முசோரி** — RID 3080

கடுமையான குளிர்காலத்தில் இருந்து பாதுகாக்க மூன்று அரசு உதவி பெறும் பள்ளிகளின் மாணவர்களுக்கு ஷூக்கள், பிளேஸர்கள் மற்றும் ஸ்வெட்டர்கள் விநியோகிக்கப்பட்டன. கிளப்பின் சமூக சேவை இயக்குனர் D K ஜெயின் மற்றும் TEACH கமிட்டி தலைவர் பங்கஜ் ஜெயின் ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

**RC ஆல்வார்** — RID 3053

ரோட்டரி அறக்கட்டளை சங்கத்தின் ஆதரவோடு பித்ரோடி அரசு மேல்நிலைப்பள்ளியில் 100 குழந்தைகளுக்கு பள்ளி சீருடைகள் விநியோகிக்கப்பட்டன. ரோட்டரியர்கள் மாணவர்களை எழுச்சியூட்டும் உரைகளுடன் ஈடுபடுத்தினர்.

## RC வாரணாசி சென்ட்ரல் — RID 3120

குளிரில் தங்களை பாதுகாத்து கொள்ள 10 கிராமங்களில் 800க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 1,000 கம்பளி போர்வைகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக DG சஞ்சய் அகர்வால் கலந்து கொண்டார். பயனாளிகளில் நகர புறநகரில் உள்ள ஜான்சா பகுதியைச் சேர்ந்த பெண்கள் அடங்குவர்.



## RC அகமதுநகர் பிரியதர்ஷினி — RID 3132

ரோட்டரியின் நான்கு வழி சோதனை 3,000 நோட்புக்குகளில் அச்சிடப்பட்டு ஐந்து பள்ளிகளில் இன்டராக்டர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. மேலும், ரோட்டரியன்கள் இந்த கட்டைவிரல் விதியின் முக்கியத்துவத்தை தங்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றுவதாக உறுதிமொழி எடுத்த மாணவர்களுக்கு விளக்கினர்.





## RC சிர்சி — RID 3170

கிளப் பிரிசிடெண்ட் Dr K V ஷிவராம் ரோட்டரி WinS 1-Star விருதை, ஹூப்ளியின் மாவட்ட மாநாட்டில் பெற்றார். கிராம பள்ளிகளில் சுகாதார திட்டங்களை நிறைவேற்றியதற்காக மாவட்டத்திற்கு Wins 1-Star விருதுகள் வழங்கப்பட்டது. WinS & National Recognition Committeeயின் உறுப்பினர் PDG கணேஷ் பட், மற்றும் DG Dr கிரிஷ் மசூர்கர் விருதுகளை விநியோகித்தனர்.



## RC பந்த்வால் — RID 3181

கூட்டுத் திட்டத்தில் மூன்று நார்வே கிளப்களுடன் RID இணைந்து மாணவிகள்  மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இரண்டு கழிப்பறை தொகுப்புகளுடன் தண்ணீர் தூய்மையாக்கும் கருவியும், A G ரித்தேஷ் பலிகா அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. Rtn டோப்ஜான் விக் முயற்சி எடுத்து நார்வேயின் 13 நபர்களின் உதவியோடு இந்த சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## RI மாவட்டம் 3141

கொல்கத்தாவில் நடைபெற்ற நூற்றாண்டு உச்சி மாநாட்டில் DG ஹர்ஜித் சிங் தல்வார், PDG பன்சி துரந்தர் மற்றும் DG 3142 டாக்டர் மோகன் சந்தாவர்க்கர் ஆகியோர் RI தலைவர் மார்க் மலோனிக்கு அஞ்சல் ஸ்டாம்புகள் மற்றும் அட்டைகளை வழங்கினர். மும்பையில் சமீபத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் மலோனியின் புகைப்படத்தைத் தாங்கிய ஸ்டாம்புகள் வெளியிடப்பட்டன.



# சங்க சேவைகள்

## RC பையனூர் — RID 3202

மெகா LN-4 புரோஸ்தடிக் கை முகாமில் 365 ஊனமுற்றோருக்கு செயற்கை கைகள் பொருத்தப்பட்டது. பையனூர் கல்லூரியின் NSS தன்னார்வலர்கள் ரோட்டரியர்களை ஆதரிக்கின்றனர். DG A கார்த்திகேயன் PDG V G நயனார் முன்னிலையில் முகாமை திறந்து வைத்தார்.



## RID 3231

கலாச்சார நிகழ்ச்சிகளுடன் பெரிய அளவில் பொங்கல் நிகழ்ச்சி மாவட்டத்தால் நடத்தப்பட்டது. மாவட்டத்தில் உள்ள சங்கங்கலிருந்து ரோட்டேரியன்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றனர். இந்த நிகழ்வு இளம் திறமைகளுக்கு பாரம்பரிய திறன்களை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பை வழங்கியது.






## RC திமாபூர் — RID 3240

RI இயக்குநர் கமல் சங்வி PDG சந்து அகர்வால், சங்கத் தலைவர் அசோக் அகர்வால் மற்றும் பிற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் முன்னிலையில் இறந்தவர்களுக்கான வேனை துவக்கினார். நிகழ்ச்சியில் நாகாலாந்து முன்னாள் ஆளுநர் P B ஆச்சார்யாவும் கலந்து கொண்டார்.




## RC ஜாம்ஷெட்பூர் ஈஸ்ட் — RID 3250

மஹூலியாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து மெகா மருத்துவ முகாமில் Dr அனுப் குப்தா மற்றும் Dr தமல் தேப் தலைமையில் மருத்துவ குழு கிராமவாசிகளை பரிசோதனை செய்தது. பல்வேறு சுகாதார பிரச்சினைகள் குறித்து 500க்கும் மேற்பட்ட கிராமவாசிகள் பரிசோதிக்கப்பட்டனர்.



## RC சென்டல் கல்கத்தா — RID 3291

அனாதைக் குழந்தைகளை வளர்ப்பதில் பெயர் பெற்ற சமூக சேவகர் Dr சிந்துடாய் சப்கலுக்கு ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது. பார்வை சவால், தலசீமியா மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான உட்கார்ந்து வரையும் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

## Rotary News Subscription Remittances

**You can pay the**
**Rotary News / Rotary Samachar**
**subscription online**

**Our Bank details:**

Bank : HDFC Bank
SB Account

Branch : Montieth Road
Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

**E mail us following details:**

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,211,107 |
| Clubs | : | 35,989 |
| Districts | : | 525 |
| Rotaractors | : | 170,905 |
| Clubs | : | 10,305 |
| Interactors | : | 329,245 |
| Clubs | : | 14,315 |
| RCC | : | 10,900 |

As on Feb 14, 2020

*Please note Interact clubs that have not reported Interact Adviser in the past two Rotary years, are placed in "Suspended" status effective Oct 1, 2019.

## Membership Summary

As on Feb 2, 2020

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | *Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,869 | 252 | 47 | 31 | 223 |
| 2982 | 67 | 3,125 | 162 | 84 | 81 | 55 |
| 3000 | 128 | 5,435 | 519 | 186 | 248 | 210 |
| 3011 | 88 | 3,677 | 934 | 51 | 82 | 25 |
| 3012 | 102 | 3,814 | 996 | 53 | 69 | 59 |
| 3020 | 72 | 4,229 | 243 | 54 | 54 | 350 |
| 3030 | 91 | 5,008 | 666 | 99 | 158 | 286 |
| 3040 | 88 | 2,,070 | 235 | 37 | 45 | 144 |
| 3053 | 64 | 2,819 | 491 | 19 | 38 | 99 |
| 3054 | 126 | 6,073 | 1,114 | 78 | 137 | 476 |
| 3060 | 96 | 4,519 | 664 | 54 | 59 | 143 |
| 3070 | 106 | 3,159 | 445 | 45 | 20 | 58 |
| 3080 | 84 | 3,466 | 319 | 88 | 132 | 112 |
| 3090 | 78 | 2,035 | 56 | 37 | 5 | 122 |
| 3100 | 99 | 2,663 | 375 | 12 | 13 | 146 |
| 3110 | 122 | 3,713 | 326 | 28 | 7 | 105 |
| 3120 | 79 | 3,323 | 464 | 40 | 18 | 53 |
| 3131 | 135 | 5,466 | 1,208 | 103 | 171 | 116 |
| 3132 | 84 | 3,491 | 373 | 33 | 81 | 158 |
| 3141 | 103 | 5,744 | 1,391 | 115 | 129 | 89 |
| 3142 | 93 | 3,342 | 691 | 79 | 113 | 64 |
| 3150 | 93 | 3,630 | 381 | 58 | 120 | 116 |
| 3160 | 72 | 2,493 | 171 | 28 | 3 | 83 |
| 3170 | 128 | 5,722 | 721 | 68 | 186 | 166 |
| 3181 | 81 | 3,562 | 345 | 60 | 191 | 116 |
| 3182 | 83 | 3,175 | 261 | 44 | 85 | 97 |
| 3190 | 127 | 5,013 | 724 | 137 | 133 | 60 |
| 3201 | 145 | 5,661 | 457 | 103 | 71 | 50 |
| 3202 | 129 | 5,194 | 321 | 80 | 241 | 47 |
| 3211 | 142 | 4,605 | 350 | 8 | 23 | 132 |
| 3212 | 102 | 4,104 | 319 | 101 | 183 | 146 |
| 3231 | 91 | 3,690 | 450 | 51 | 71 | 357 |
| 3232 | 127 | 5,112 | 889 | 126 | 184 | 92 |
| 3240 | 90 | 3,113 | 417 | 50 | 365 | 190 |
| 3250 | 101 | 3,935 | 704 | 61 | 63 | 182 |
| 3261 | 72 | 2,653 | 379 | 16 | 18 | 43 |
| 3262 | 105 | 3,630 | 429 | 45 | 35 | 77 |
| 3291 | 153 | 3,794 | 791 | 86 | 84 | 615 |
| **India Total** | **3,860** | **1,51,126** | **20,033** | **2,464** | **3,747** | **5,662** |
| 3220 | 70 | 1,963 | 279 | 81 | 123 | 73 |
| 3271 | 90 | 1,472 | 274 | 63 | 19 | 21 |
| 3272 | 150 | 1,817 | 307 | 51 | 15 | 43 |
| 3281 | 213 | 5,649 | 886 | 223 | 45 | 195 |
| 3282 | 167 | 4,918 | 647 | 150 | 38 | 47 |
| 3292 | 124 | 4,953 | 782 | 131 | 111 | 115 |
| **S Asia Total** | **4,674** | **1,71,898** | **23,208** | **3,163** | **4,098** | **6,156** |

*Source: RI South Asia Office*

# On the racks




## On Earth We're Briefly Gorgeous

Author : **Ocean Vuong**
Publisher : **Penguin Press**
Pages : **237; ₹1,499**




## Ghachar Ghochar

Author : **Vivek Shanbhag (Translated from Kannada by Srinath Perur)**
Publisher : **Harper**
Pages : **128; ₹299**




## Factfulness

Author : **Hans Rosling (Co-authored by Ola Rosling and Anna Rosling Rönnlund)**
Publisher : **Sceptre**
Pages : **353; ₹499**

When asked simple questions about global trends — why the world's population is increasing; how many young women go to school; how many of us live in poverty — we systematically get the answers wrong. So wrong that a chimpanzee choosing answers at random will consistently outguess journalists, Nobel laureates, and investment bankers.

In *Factfulness*, Professor of International Health and a man who can make data sing, Hans Rosling, together with his two long-time collaborators Anna and Ola, offers a radical new explanation of why this happens, and reveals the ten instincts that distort our perspective.

It turns out that the world, for all its imperfections, is in a much better state than we might think. But when we worry about everything all the time instead of embracing a worldview based on facts, we can lose our ability to focus on the things that threaten us most.

*Ghachar Ghochar* is the English-language debut of noted Kannada writer Vivek Shanbhag's work. The story is about how money controls the lives of a poor family. From a cramped, ant-infested house to a spacious bungalow, the family finds itself making a transition in many ways. The narrator, a sensitive young man, is numbed by the swirls around him. All he can do is flee every day to an old-world cafe, where he seeks solace from an oracular waiter. As members of the family realign their equations and desires, new strands are knotted, others come apart, and conflict brews dangerously in the background. Translated from Kannada by Srinath Perur, the book is a suspenseful, playful and ultimately menacing story about the shifting consequences of success.

This book is a letter from a son to a mother who cannot read. Written when the speaker, Little Dog, is in his late 20s, the letter unearths a family's history that began before he was born — a history whose epicentre is rooted in Vietnam — and serves as a doorway into parts of his life his mother has never known, all of it leading to an unforgettable revelation.

At once a witness to the fraught yet undeniable love between a single mother and her son, it is also a brutally honest exploration of race, class and masculinity. Asking questions that are of topical relevance to American people, as they are beset with addiction, violence and trauma, but layered in words of compassion and tenderness, *On Earth We're Briefly Gorgeous* is as much about the power of telling one's own story as it is about the obliterating silence of not being heard. With stunning urgency and grace, the book focuses on people caught between disparate worlds, and asks how we heal and rescue one another without forsaking who we are. The questions of how to survive, and make it moments of joy power the most important debut novel of many years.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

# ஹேர் பிரஷ்ஷின் முக்கியத்துவம்

TCA ஸ்ரீனிவாசராகவன்

LBW

வயதாகும்போது, நமக்கு மிகவும் முக்கியமானதைப் பற்றி சிந்திக்க துவங்குகிறோம்... நான் பேசிய பெரும்பாலான மக்கள் பெற்றோர், குழந்தைகள், மனைவி, ஆசிரியர்கள், புத்தகங்கள், இசை, என வழக்கமான விஷயங்களை சொன்னார்கள். ஆனால் என் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது என் மூன்று ஹேர் பிரஷ்கள்.

ஹேர் பிரஷ்கள்? ஆம், உண்மையில் ஹேர் பிரஷ்கள் தான். என் தலைமுடி சுருள் மற்றும் நேருக்கு இடையில் இயற்கையாகவே அலை அலையானது. சுருள் முடியை சீவ வேண்டியதில்லை, நேரான முடியை மிக எளிதாக சீவலாம், அலை அலையான முடி மிகவும் தொந்தரவானது. நீங்கள் அதை சீவாமல் விட்டால் பார்க்க இயலாது, எவ்வளவு தண்ணீர் எண்ணெய் அல்லது கிரீம் பயன்படுத்தினாலும் அது படியாது.

எனக்கு எப்போதுமே அது ஒரு போராட்டமாக இருந்தது. நான் பள்ளியில் இருந்தவரை அது ஒரு பொருட்டல்ல, ஆனால் கல்லூரியில் பெண்களை கவர வேண்டியிருந்தது. ஆனால் என் கல்லூரி நாட்கள் முழுவதும் எனக்கு அதிர்ஷ்டம் இல்லை , முடி மற்றும் பெண்கள்-இரண்டு விஷயங்களிலும். இரண்டுமே ஒத்துழைக்கவில்லை.

திடீரென்று வழி பிறந்தது. ஒரு நாள் கல்லூரியில் இருந்து என் அறைக்குத் திரும்பிச் செல்லும்போது, சாலையில் ஒரு ஹேர் பிரஷைக் கண்டேன். அது மிகவும் புதியதாகத் தோன்ற, என் வகுப்புத் தோழிக்குக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். நான் ஷாம்புவினால் அதை கழுவி பின் என் முடியில் ஓட விட்டேன். பின்னர் நான் கண்ணாடியின் முன் நிலைத்து நின்றேன். என் தலைமுடி திடீரென படிந்திருந்தது. நான் அதை கலைத்துவிட்டு மீண்டும் முயற்சித்தேன். மீண்டும் முடி படிந்தது.

வாழ்க்கையில் முக்கிய திருப்பம் ஏற்பட்டதாக உணர்ந்து அதை தொடர நினைத்தேன். அது என் வாழ்க்கையின் முதல் காதலாயிற்று. அதன் பாதி முட்கள் விழுந்த பின்னும் அடுத்த பத்து வருடங்களுக்கு நான் அதை பயன்படுத்தினேன். அது மிகவும் பழையதாகியிருந்தது.

மணமானதும் என் மனைவி தன் போட்டியாளரை இனம் கண்டு கொண்டாள். எனவே அவள் செய்த முதல் காரியம் என் அன்புக்குரிய பிரஷ்ஷை தூர எறிந்தது. அவள் அது மிகவும் மோசமாக இருப்பதாகக் கூறினாள்.

நான் வருந்த அவள் புதியதாக வாங்க என்னை கடைக்கு அழைத்துச் சென்றாள். நான் வேலைக்குச் சென்ற நேபாளத்தில் ஒரு புதிய பிரஷ் கிடைத்தது. வெறும் 50 நேப்பாள் ரூபாய்க்கு அழகான பற்கள் மரப்பிடியுடன் ஒரு பிரஷ் கிடைத்தது. என் இரண்டாவது காதலான இதை என் மனைவியின் கோபத்தையும் மீறி வாழ்நாள் முழுவதும் வைத்திருக்க முடிவெடுத்தேன்.

ஆனால் செயல்படுத்துவது சுலபமாகயில்லை. ஒரு நாள் அது மறைந்துவிட்டது. நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் நான் அதை மறந்திருக்க வேண்டும் என்று என் மனைவி சொன்னாள். அவள் அதை வீசியிருக்க வேண்டும் என்று நான் சொன்னேன். இரண்டு தசாப்தங்களாக இந்த மர்மம் தீர்க்கப்படவில்லை.

எனது மூன்றாவது காதலை கொரியாவிற்கு சென்ற போது பார்த்தேன். அதில் செதுக்கப்பட்ட தந்த கைப்பிடி உள்ளது. அதை நான் ஒரு பண்டைய பொருட்கள் விற்கும் கடையில் கண்டேன். இது நான்கு அங்குல நீளமே உள்ள சிறியதாகும். அதன் பற்கள் ஒரு செப்புத் திண்டு களில் பதிக்கப்பட்டு, மீன் எலும்பு போன்று கடினமாக இருந்தன. என் மனைவியுடன் ஏற்பட்டது போல், அதைக் கண்டவுடன் காதல் வந்ததால் $30க்கு அதை வாங்கினேன். ஒரே வித்தியாசம் என்னவென்றால், ஒன்று என் முடியை நிற்க வைக்க, இது அலையாக படியவைத்தது. இரண்டும் ஒன்றையொன்று நிறைவு செய்தன. இரண்டும் என் முடிக்குள் நுழைகின்றன.■

*ஒரு நாள் கல்லூரியில் இருந்து என் அறைக்குத் திரும்பிச் செல்லும்போது, சாலையில் ஒரு ஹேர் பிரஷைக் கண்டேன். அது என் வாழ்க்கையின் முதல் காதலாயிற்று.*

*நேரான முடியை மிக எளிதாக சீவலாம், அலை அலையான முடி மிகவும் தொந்தரவானது. நீங்கள் அதை சீவாமல் விட்டால் பார்க்க இயலாது.*

# கொல்கத்தாவில் சில வேடிக்கை நேரம்



RIDs *பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி.*



RI *தலைவர் மார்க் மலோனி மற்றும் அவர் மனைவி கேய், அவர்களின் கட்-அவுட்டுடன்.*

புகைப்படங்கள்: ஹேமந்த்குமார்.

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Rotary News Tamil published on 1st of every month

